அனுபோக வைத்திய நவநீதம்

மூன்றாம் பாகம்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு
1975

616 / 187 / அனு

வெளியீட்டுத் தொடர் எண் : 3

அனுபோக வைத்திய நவநீதம்

மூன்றாம் பாகம்

ஆசிரியர் :

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975 விலை ரு.

முதற் பதிப்பு: 1905

இரண்டாம் பதிப்பு:

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சி. ம. நூ. வெ. குழு—1975ஆம் ஆண்டு

உரிமை:

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருந்துவநூல் வெளியீட்டுக்குழு,

இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,

சென்னை-600029.

அச்சிட்டோர்:

சிவார்ட்ஸ் பிரிண்டர்ஸ்,

119, ஸ்டாரன்ஸ் ரோடு,

சென்னை-600012.

அருள்மிகு
பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி. எஸ்ஸி., அறங்காவலர்

திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ. ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ. ,,

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

அருள்மிகு
பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்,

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக்கழகம். ... உறுப்பினர்

திரு. வி.எஸ். கோதண்டபாணி பி.எஸ்ஸி.,பி.எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்., சிறப்பு
இந்திய மருத்துவத்துறை இயக்குநர். ... அழைப்பினர்
சென்னை-600029.

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. — தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை
சென்னை-600049. — செயலர் உறுப்பினர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச். பி. ஐ. எம்.,
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்
துறை சென்னை-600005. — உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு எச். பி. ஐ. எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். — ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எல். ஐ. எம்.,
மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. — ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி எல் ஐ. எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. — ,,

7. டாக்டர் ஆ ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. — ,,

8. டாக்டர் ப சிற்சபை ஆர் ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். — ,,

9. பண்டிட் பெ. முத்துகருப்பப் பிள்ளை ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை. — ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012. — ,,

11. டாக்டர் என். சேது ரகுநாதன்,
தமிழ்ப் பேராசிரியர், விருதுநகர். — ,,

12. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை,
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை. — ,,

சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி பி.ஏ., ஜி.சி, ஐ.எம்., முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எல்.ஐ.எம்., பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு, அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர், இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம், ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் பி.எஸ்ஸி., எம்.டி., எம்.ஆர்.சி.பி (லண்டன்), சென்னை-600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., அவர்கள்

அளித்த

அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழிவழியாகவும் கற்றறிந்தும்— கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுவதற்கு ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால் தான், இனறு சித்த மருத்துவம் பயிலும் மாணவரும்,

இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும். மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள் மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவல் குழுவினரும்—அதன் **தலைவர் திரு. பு. மனோகரன்** அவர்களும்—இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளி யீட்டுக்கென **டாக்டர் இரா. தியாகராஜன் எல்.ஐ.எம்.,** அவர் களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத் துச் செயல்படுத்தலாயினர்.

இக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத் துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகை யிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் **டாக்டர் பு. மு. வேணுகோபால்** அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும்—அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்து எடுக்கப் பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே **அனுபோக வைத்திய நவநீதம்**—ஒன்று முதல் பத்து பாகங் களும் அவற்றின் திறவுகோலும்—ஆகும். இன்று கிடைக் காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் வெளிவருவது மிகுந்த பயன்தர வல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர்—சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்—இளமை முதலே—தமது முன்னோர்தம் மருத்துவக்

கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று, தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து—உலகோர்க்குப் பயன்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச்செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உரு வழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள் — இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு ஒளி காண்பதற்கு வழி கண்ட வல்லுநரில் அவர் தலை சிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடன், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும் பொறுப்புடனும் எளிய இனிய தமிழில்—இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவஉலகம்—ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எந்நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய **அனுபோக வைத்திய நவநீதம்** முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

"மிகக் கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானவாவது :

> " அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கிலமுறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது; ஆனல், நாட்பட்ட நோய்களையும், பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு,மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத்தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறை கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை. " என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகு மாறு—மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற—ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு,

" செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். "—

என்னும், குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப் படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
20-3-1975

க. அன்பழகன்

இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி அதுபோல் தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம்மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவம் என்று பெயர் அமையலாயிற்று அச் சான்றோர்கள் நாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம்' கடற்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலே, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாகும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில, மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன, வெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம்மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்களும் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன, மருத்துவம் செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்துவரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சி சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து,பல கிராம மருத்துவமனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாட புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை

ஓர்ந்து பாட புத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறை தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட், வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும், நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்னும், நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950 இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம், (மூலிகை வகுப்பு,) தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக்கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாட நூல்களும் துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று

ஆகவே. பண்டைய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும் கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopea Committee 1966 G. O. M. S. 2163 Dt. 23—8—60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற்குழு என்று, (G.O.M.S. No. 1050 Health Dt. 13—6—66) ஒரு குழுவும். திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும், ஒரு குழுவைத் அரசு ஆணைப்படி

(G.O.M.S. No. of 23—10—73) தோற்றுவித்தார்கள். அக்குழுவின் பணிகளாவன - சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனையில் கிடைக்கப்பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப்பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்தமருத்துவநூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்தமருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை, யில் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப்பாகங்களும் திறவுகோலும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும், உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயுபு ஆவார். இவர் சென்னை ஜார்ஜ் டவுனில் அப்பு மேஸ்திரி தெருவில் 12 ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார் இவர் தஞ்சை மன்னர் சரபோஜி தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித் தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த யூனானி ஆகிய இருமுறைகளிலும் கைபாகம். செய்பாகம், நோய்த்தீர்வு, முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவமனையும், மருந்து செய்சாலையும் அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர் நலம் பேணல், கொடை பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரைநடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல் அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை புதுப்பித்து வெளியிடுவோர் இன்மையால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன்பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது இந்த பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல்வார்க்கு மிக நன்றாக விளங்கும். அவ்வந்நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும்; சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக்கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவ பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையையும் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறி

பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர்க் குழுத்தலைவர் உயர்திரு. பு மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக்குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டும், நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்துசமய அறநிலையப் பாதுகாப்புக்குழுத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன் ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குனர் உயர்திரு. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம், அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடக்க விலையில், அச்சடிக்கும் தாள்கள் மிக விரைவில் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக்குழுவுக்குத் துணைபுரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன் எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்கு துணை புரிந்துவரும் புலவர்கள் மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வை.முரு. முத்துக்குமாரசாமி, ஆகியவர்களையும் இக்குழுமனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய சித்த மருத்துவர்கள் திரு, ப, சிற்சபை, திரு. கே, சீனிவாசன், திரு. மு. சௌரிராசன், ஆகியோர்க்கும், அந்நூல்களைத் திரட்டித்தர துணை புரிந்த சித்த மருத்துவர்கள் திரு. டி. வி. கல்யாணசுந்தரனார் திரு. பூசலிங்கம் ஆகியோர்க்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக்கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக்குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.

தலைவர்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு.

இந்திய மருத்துவத்துறை,
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600 029.

முதற்பதிப்பின் முகவுரை

நண்பர்களே !

இந்த நூலினது பெருமையும், இதை வெளிப்படுத்த முன் வந்ததற்கு ஏற்பட்ட காரண முதலியவைகளும் இதன் முந்தின இரண்டு பாகங்களின் முன்னுரைகளினால் நன்கு விளங்கும். ஆதலின், அவ்விவரங்களைப் பற்றி இங்கெழுதுவது அவசியமில்லை,

இந்த மூன்றும் பாகமானது முன் இரண்டாம்பாகம் வெளியான சொற்ப நாள்களுக்குள்ளேயே வெளிப்பட வேண்டியதாக இருந்தும் சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டுச் சற்று தாமதித்திருந்தது. ஆயினும், முன் இரண்டு பாகங்களையுந் தருவித்துப் பார்த்தனுபவித்த ஒவ்வொரு அறிவாளிகளும் மற்றும், பல நண்பர்களும் அடுத்த பாகங்களையும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்த வேண்டுமெனக் கடிதமுகத்தாலும், நேரிலும் வற்புறுத்தி வந்தபடியால் அத்தகையினர் விருப்பத்தை வீணாக்க வசமற்றவனாய் எவ்வித அசந்தர்ப்பங்களையும் எதிர்பாராது இச் செயலில் சில தினங்களுக்கு முன் பிரவேசித்து இடைவிடா முயற்சியுடன் இந்த மூன்றும் பாகத்தை வெகு சீக்கிரமாகவே முடித்து வெளியிட்டேன். இனி, மற்ற பாகங்களும் இவ்வாறே முறையாக வெளிப்படும்.

இந்த மூன்றும் பாகத்தில் முந்தின பாகங்களைக் காட்டிலும். சற்று அதிகமாகவே சுமார் 227 முறைகள் வரை அடங்கி இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் மிகப் பெருமையுற்றதும், சுலபமாக முடியத்தக்கதும், சிறந்த குணமுடையதும், பரம்பரையாக அனுபவத்தோடு கையாண்டு வந்ததும், இரகசியத்தில் வைத்து வந்ததுமாகும். அம்முறைகளாவன :—

அமுரியுப்பு, அட்டகுன்மத் திராவகம், அன்னபேதிச் செந்தூர வகைகள், அன்னபவழச் செந்தூரம், அண்டத் தூய்மை, அண்டச் சுண்ணம், அண்ட பற்ப வகைகள், அண்ட மெழுகுகள், ஆறுப்புச் செயநீர், ஆக்கிராணத் திராவகம், ஆமையோட்டுத் தூய்மைகள். ஆமையோட்டுப் பற்பங்கள், இலவணத் திராவகம். இலவண வீரச் செந்தூரம், இலவணக் குழம்புகள், இலிங்கக்கட்டுப் பற்பம், இந்திரகோப பூநாகப் பற்பம். இந்திர கோப அல்வா, உதரரோக நிவாரண திராவகம், கல்நார்த் தூய்மைகள், கல்நார் பற்பங்கள், கல்மதத் தூய்மைகள், கல்மத பற்பங்கள், கறியுப்புப் பற்பங்கள்

கறியுப்புச் சுண்ணம், கறியுப்புச்செந்தூரங்கள், கறியுப்புக் கட்டுகள், கறியுப்பு மெழுகு, கிளிஞ்சிற் சுண்ணம், கொடிப்பவழச் சுண்ணம், சங்குத் தூய்மை, சங்கு பற்பங்கள், சந்திரோதய மாத்திரை, சவுக்காரச் சுண்ணம், சாரச்செயநீர், சுராங்குச பற்பம், சிருங்கித்தூய்மை, சிருங்கி பற்பங்கள், சிருங்கி எண்ணெய், சீலைச் செந்தூரம், சீனவிடாமிர்தம், சீனக்காரத் தைலம் செந்தூரத் திராவகம் தம்பலப்பூச்சித் தூய்மை, தம்பலப்பூச்சிப் பற்பம், துருசுத் தூய்மைகள், துருசுக் கட்டு, துருசுப் பற்பங்கள், துருசுச் சுண்ணங்கள், துருசுச் செந்தூரங்கள், துருசு மெழுகுகள், துருசு மாத்திரை, நவச்சாரச் சுண்ணங்கள், நவச்சாரப் பற்பங்கள், நவச்சாரச் செந்தூரம், நவச்சாராதிக் குழம்பு, நவலோக செந்தூரச் செயநீர், நற்பவழ வைப்பு, நீலத்தூய்மை, நீல பற்பங்கள், படிக்காரத் தூய்மைகள், படிக்காரப் பற்பங்கள், பலகறைத் தூய்மை, பலகறைப் பற்பங்கள், படிக்காரச் சுண்ணங்கள், பஞ்சலவணக் கட்டுகள், பஞ்சலவண பற்பங்கள், போசன சஞ்சீவி, பூநீற்றுச் செயநீர், பூநீற்றுச் சுண்ணங்கள், பேதி சத்துச் செந்தூரம், பேதி வீரச் செந்தூரம், பூநாகத் தூய்மை, பூநாக பற்பம், பூநாகத் தைலங்கள், பூநாகத் திலாக்கள், பூநாக அல்வா, பவழத் தூய்மை, பவழப் பற்பங்கள், பவழப்புற்று, பவழக் கொடிப் பற்பங்கள், புட்பராகத் தூய்மை, புட்பராக பற்பங்கள், மரகத பற்பங்கள், மகா திராவகம், மனோசிலைத் தூய்மை, மனோசிலைச் செந்தூரம், மனோசிலைப்புகை, மிருதார்சிங்கித் தூய்மைகள், மிருதார்சிங்கிப் பற்பங்கள், முத்துச்சிப்பித் தூய்மை, முத்துச்சிப்பிப் பற்பங்கள், முத்துச்சிப்பிச் சுண்ணம், முத்துத் தூய்மைகள், முத்து பற்பங்கள், முத்துச் சுண்ணம், மாணிக்கத் தூய்மை, மாணிக்க பற்பங்கள், யூனானிமுறைச் செந்தூரம், வயிரத் தூய்மை, வயிர பற்பங்கள், விடபேதித் திராவகம், வெண்காரச் சுண்ணங்கள், வெண்காரச் செந்தூரங்கள், வெண்கார பற்பங்கள், வெண்கார மெழுகுகள், வெடியுப்புக் கட்டுகள், வெடியுப்புச் சுண்ணங்கள், வெடியுப்புத் தூய்மைகள், வெடியுப்புச் செந்தூரங்கள், வெடியுப்பாதி நெய், வெடியுப்புச் செயநீர்கள், வெடியுப்புத் திராவகம், வைடூரியத் தூய்மை, வைடூரிய பற்பம், ஜங்கால் பச்சை முதலியவைகளும் இன்னும் பலவுமாம்.

மேற்கண்ட முறைகளெல்லாம் இரகசியத்தில் வைக்கத்தக்க அருமை வாய்ந்தவையாயினும் உலக நலத்தைக் கருதியே இவைகளை இந்நூலின் மூலமாக வெளியிட்டேன்.

இவ்வளவு அருமை வாய்ந்த முறைகளடங்கியுள்ள இந்த மூன்றும் பாகமானது முன் பாகங்களைக் காட்டினும் மிகச் சிறந்த தன்மை வாய்ந்ததென்பதை இங்கெடுத்துச் சொல்லாமலே

முதற்பதிப்பின் முகவுரை

எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடும். இது உயர்ந்த தாளில் சுமார் 246-பக்கங்களுள்ள புத்தகமாக அச்சிடப் பட்டிருக்கின்றது. இந்நூலிற்காக எடுத்துக்கொண்ட அரும் பிரயாசை, பொருட்செலவு, உடலுழைப்பு முதலியவைகளை எதிர் பாராமலே உலகோர்க்கு உதவி செய்யும் நோக்கில் இதற்கு மிகவும் குறைந்த விலையே ஏற்படுத்தி இருக்கின்றேன். ஆதலின், ஒவ்வொரு நேயர்களும் முந்தின பாகங்களைப்போல் இதனையுந் தருவித்துப் பார்த்து எனக்கு ஆதரவுதருமாறு வேண்டு கின்றேன். இனி மற்ற பாகங்களும் வெளிவருமாறு எல்லாம் வல்ல கடவுள் அருள் புரிவாராக. சுபம்.

அக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு,

12, அப்பு மேஸ்திரி தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.



பொருளடக்கம்

	பக்கம்
அட்டகுன்மத் திராவகம்	82
அண்டச் சுண்ணம்	105
அண்டத் தூய்மை	104
அண்ட பற்பம்	106,109
அண்ட மெழுகு	110,111
அமுரியுப்பு	43
அன்னபவழச் செந்தூரம்	104
அன்னபேதிச் செந்தூரம்	102,103
ஆக்கிராண திராவகம்	70
ஆடாதோடைப் பாணிதம்	16
ஆமையோட்டுத் தூய்மை	115
ஆமையோட்டுப் பற்பம்	115,116
ஆறுப்புச் செயநீரால் எல்லாச் சரக்குகளையும் பற்பமாகச்செய்து கொள்ளலா மென்பதற்குக் காரணமாக எழுதப்பட்ட வீரபற்ப முறை	44
ஆறுப்பு செயநீர்	43
இந்திரகோப அல்வா	125
இந்திரகோபப் பூநாகப் பற்பம்	124
இலவணக் குழம்பு	47
இலவணத் திராவகம்	45
இலவணவீரச் செந்தூரம்	38
இலவணுதிக் குழம்பு	48
இலிங்கக்கட்டுப் பற்பம்	110
உதரநோய் நிவாரண திராவகம்	46
கல்நார் தூய்மை	2
கல்நார் பற்பம்	2,3
கல்மத தூய்மை	4
கல்மத பற்பம்	4-6
கறியுப்புக் கட்டு	41
கறியுப்புச் சுண்ணம்	31

பக்கம்

கறியுப்புச் செந்தூரம்	32-36
கறியுப்புப் பற்பம்	29-49
கறியுப்பு மெழுகு	49
கிளிஞ்சிற் சுண்ணம்	86
கொடிப்பவழச் சுண்ணம்	139
கோமேதக தூய்மை	169
கோமேதக பற்பம்	169
சங்கு தூய்மை	10
சங்குப் பற்பம்	10,11
சந்திரோதய மாத்திரை	12
சவுக்காரச் சுண்ணம்	54
சாரச் செயநீரால் இரசகர்ப் பூரத்தைக் கட்டும் விதம்	69
சாரச் செயநீர்	68
சிருங்கி தூய்மை	6
சிருங்கி பற்பம்	7-9
சிருங்கி எண்ணெய்	90
சீனக்காரத் தைலம்	23
சீனரசச் செந்தூரம்	21
சீன விடாமிர்தம்	22
சுராங்குச பற்பம்	90
செந்தூரத் திராவகம்	81
தம்பலப்பூச்சித் தூய்மை	123
தம்பலப்பூச்சி பற்பம்	124
துருசுக்கட்டு	91
துருசுச்சுண்ணம்	95-96
துருசுத் தூய்மை	91
துருசுச் செந்தூரம்	96-99
துருசுப் பற்பம்	92-94
துருசு மாத்திரை	101
துருசு மெழுகு	100
நவச்சாரக் கட்டு	57-64
நவச்சாரக்கட்டுக்குச் சேர்க்கவேண்டிய ஓர்வகை ஜெயநீர்	68

நவச்சாரக்கட்டுக்குச் சேர்க்கவேண்டிய சீனக் காரம், வெண்காரம், கம்பி வெடியுப்பு இவைகளின் சுண்ணங்கள்	63
நவச்சாரக்கட்டுக்குச் சேர்க்க வேண்டிய துருசுச் சுண்ணம்	58
நவச்சாரக்கட்டுச் சுண்ணம்	61
நவச்சாரச் சுண்ணம்	66-67
நவச்சாரச் செந்தூரம்	69
நவச்சாரப் பற்பம்	64-66
நவச்சாராதிக் குழம்பு	70
நவநீத பற்பம்	170
நவரத்தின பற்பப் பொதுமுறை	170
நவலோகச் செந்தூரச் செயநீர்	82
நற்பவழ வைப்பு	142
நீலத்தூய்மை	165
நீல பற்பம்	165,166
பஞ்சலவணக் கட்டு	42
பஞ்சலவண பற்பம்	30,31
படிகாரச் சுண்ணம்	19,20
படிகாரத் தூய்மை	14
படிகார பற்பம்	15-19
பருத்திச்சாம்பல் தெளிநீர்	24
பலகறைத் தூய்மை	12
பலகறை பற்பம்	13,14
பவழக்கொடி பற்பம்	140-142
பவழத் தூய்மை	126
பவழ பற்பம்	127-138
பவழப்புற்று, பவழக்கொடி தூய்மை	139
பவழப்புற்று பற்பம்	140
புட்பராகத் தூய்மை	166,167
புட்பராக பற்பம்	167,168
பூநாக அல்வா	122
பூநாகத் தூய்மை	116
பூநாகத் திலா	120,121
பூநாகத் தைலம்	119
பூநாக பற்பம்	117
பூநாகப் பிரயோகம்	118

பக்கம்

பூநாக மகாவீரிய கிலா	122
பூநாக மேற்பூச்சுத் தைலம்	118
பூநீறு	52
பூநீற்றுச் சுண்ணத்தினுல் எல்லாச் சரக்குகளை யுங் கட்டலாமென்பதற்கு உதாரணமாக எழுதிய முறை	53
பூநீற்றுச் சுண்ணம்	52,53
பூநீற்றுச் செயநீர்	55
பூநீற்று செயநீர் முறைக்குச் சேர்க்க வேண்டிய அண்டச் சுண்ணம்	56
பேதிச்சத்துச் செந்தூரம்	103
பேதிவீர செந்தூரம்	103
போசன சஞ்சீவி	28
மகாதிராவகம்	44
மரகத பற்பம்	163-164
மனோசிலைத் தூய்மை	119
மனோசிலைச் செந்தூரம்	85
மனோசிலைப் புகை	87
மாணிக்கத் தூய்மை	160
மாணிக்கப் பற்பம்	160-163
மிருதார்சிங்கித் தூய்மை	87,88
மிருதார்சிங்கிப் பற்பம்	88,89
முத்துச்சிப்பிச் சுண்ணம்	114
முத்துச்சிப்பித் தூய்மை	112
முத்துச்சிப்பிப் பற்பம்	112,113
முத்துச் சுண்ணம்	153
முத்துத் தூய்மை	143
முத்துப் பற்பம்	144-153
முள்ளியுப்பு	43
யூகிமுனி முறைச் செந்தூரம்	21
வயிரத் தூய்மை	154
வயிரப் பற்பம்	154-159
விஷபேதித் திராவகம்	47
வில்லையுப்பு	77
வெடியுப்பாதி நெய்	81
வெடியுப்பாதிச் சுண்ணம்	76

	பக்கம்
வெடியுப்பாதிச் செந்தூரம்	77
வெடியுப்பு	71
வெடியுப்புக் கட்டு	71,72,84,85
வெடியுப்புச் சுண்ணம்	73-75
வெடியுப்புத் தூய்மை	83
வெடியுப்புச் செந்தூரம்	76
வெடியுப்புச் செயநீர்	78.79
வெடியுப்புத் திராவகம்	80
வெண்காரச் சுண்ணம்	25,26
வெண்காரச் செந்தூரம்	26,27
வெண்காரப் பற்பம்	23,24
வெண்கார மெழுகு	28
வைடூரியத் தூய்மை	169
வைடூரிய பற்பம்	169
ஜங்கால் பச்சை	92

அ. வை. ந. மூன்றும் பாகம்

முற்றிற்று.



அனுபோக வைத்திய நவநீதம்

மூன்றும் பாகம்.

கடவுள் வணக்கம்

மாவா ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே—நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தான்
சோதியே செய்வாய் துணை,

குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம்பணிந்து கொண்டு—வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்.

நூல்

இயற்கையின் அருளினாலும், பெரியோர்களின் வாழ்த்தினாலும், மருத்துவ அறிஞர்களின் உதவியினாலும் இதன் இரண்டாம் பாகத்தில் குருமுறைகள், நுட்ப முறைகள், மூதலிய அற்புத முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலுள்ள முறைகளெல்லாம் பலதலை முறைகளாகப் பல தடவைகளிலும் அனுபவ சித்தி பெற்றவைகள், யாவரும் இலகுவாகத் தெரிந்து கொள்ளும் விதமாகத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் வகை விவரமாகவும் எழுதப்பெற்றுள்ளன. அதனைப்பார்த்து அதிலுள்ள முறைகளைச்செய்து அனுபவித்த ஒவ்வொரு அனுபவசாலிகளும் அதிலடங்கிய மருந்துகளின் சிறப்புடைய குணங்களைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால் முன்னிலும் அதிகவுற்சாகமுண்டாகி இம்மூன்றும் பாகத்தில் நமது முன்னோர்களுக்கும் நமக்கும் அநேக தலைமுறைகளாவும் பரம்பரையாகவும் அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்ட அநேக சித்த யூனானி மருத்துவ மறைவான முறைகள் மூதலிய பற்பலஅற்புத முறைகள் உயிர்களின் மீதுள்ள அன்பினாலும் உலகோர்க்கு உதவும் நோக்குடனும் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. அதிலடங்கிய முறைக-

ளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப்படாத நுட்ப முறைகள் முற்குறித்த இரண்டாம் பாகத்தில் அடங்கியுள்ள முறைகளின் சுருக்கமாவது: அப்பிரகம், அதன் வகைகள், அதன் சத்து, பலவகைப் பற்பங்கள், பலவகைச் செந்தூரங்கள், நவலோக செந்தூரச் செயநீர், நவரத்தின செந்தூரச் செயநீர், வெள்வங்கம், கருவங்கம், நாகம், வெள்ளி, தங்கம், பொன்னிமிளை, வெள்ளி மிளை, சிலாசத்து, பூநக்கல் ஆகியவைகளின் தூய்மை முறைகள் அவற்றின் பற்பங்கள், அவற்றின் செந்தூரங்கள், அவற்றின் துணை மருந்துகள் முதலியவைகள் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் சுமார் நூற்றைம்பது பாகங்கள் அடங்கியிருக்கின்றன. அவை சம்பந்தமான நானுவித உபயோகங்கள் முதலிய ஒவ்வொன்றும் வகை விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளின் அருமையும் பெருமையும், அவற்றைப்பார்த்து அங்குச் சொல்லியிருக்கிறபடி செய்து அனுபவிப்பவர்களுக்கு, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரியவரும் இம்மூன்றும் பாகத்தில் நாட்பட்ட நோய், கடின நோய், பெருமுயற்சியால் குணப்படும் அசாத்திய நோய் முதலிய மகாநோய்களை அறத்தீர்க்கும் பற்பல முறைகளை இங்கு முறையே சொல்வோம்.

கல்நார் தூய்மை

செய்முறை;- கல்நாரை, பழச்சாற்றிற்போட்டு 24 மணி நேரம் ஊறவைத்துக் கழுவியெடுக்கத் தூய்மையாம். அரைக்கவேண்டியதாயிருந்தால் சிறுதுண்டுகளாகச் செய்து ஊற வைக்கவேண்டும். கட்டியாகவே வேண்டுமானல், கட்டியாகவே ஊறவைத்துக் கொள்ளவேண்டும்.

145. கல்நார் பற்பம்

கல்நார் தேவையான அளவு, துத்திவேர்ப்பட்டைக் குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:-கல்நாரைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, மேற்படி துத்திவேர்க் குடிநீரைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லைசெய்து, வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபதுபங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு:- 10 முதல் 20 குன்றிமணி எடை.

துணைமருந்து:- பசுவின் வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாகும்.

தீரும் நோய்கள்:- என்புச் சூடு, என்பு வெட்டை, மேகச்சூடு முதலியவை தீரும். இதனுல் பல்லிலத்துலக்கிவரப் பல்லிறுகிக் கெட்டிப்படும்.

மருத்துணவு:-புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்,

146. கல்நார் பற்பம் (வேறு)

கல்நார் 8 பலம் (280 கிராம்). இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். எள்ளுச்செடி சமூலத்தை இடித்துப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு, மேற்படி எள்ளிலை செல்லத்தக்க அளவு.

செய்முறை:-எள்ளுச்செடிச் சமூலச்சாற்றை ஒரு பாத்திரத்தில் விட்டுக் கல்நாரை அதிற்போடவேண்டும். இந்தச் சாருனது சரக்கின் மீது ஒன்று அல்லது ஒன்றரை அங்குலம் அதிகமாக இருக்கவேண்டியது. ஏழுநாள் ஊறவிட்டு எட்டாம் நாள்எடுத்து மேற்படி எள்ளிலையை அரைத்து ஒரு அங்குல கனம் கவசித்து வெய்யிலில் வைத்து வந்தால் ஏழு அல்லது, எட்டு நாளைக்குள் கட்டியானது தானுகப் பொருமிக் கவசம் வெடிக்கும். அதை எடுத்தால் உள்ளே பற்பமாக இருக்கும். அவசரமாக வேண்டியதானுல், மேற்படி இலையைக் கவசித்து இரண்டொரு நாள் வெய்யிலில் வைத்துக் கவசத்திற்கு 5 அல்லது 6 பங்கெடை வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்,

அளவு:-8 முதல் 16 குன்றிமணி எடை.

துணை மருந்து:-வெண்ணெய், நெய்.

தீரும் நோய்கள்:- பிரமேகம், பிரமியம், மேகம் தீரும், உடற் சூடு, எலும்புச்சூடு முதலிய நோய்களும் தீரும். பல் விளக்கப் பல்லிறுகும்.

மருத்துணவு:- உடலுக்குச் சூடுண்டாக்கும் பண்டங்களை நீக்குக.

147. கல்நார் பற்பம் (வேறு)

கல்நார் 8 பலம் (280 கிராம்). இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். கஞ்சாங்கோரையிலைச்சாறு செல்லத்தக்க அளவு. கஞ்சாங்கோரை இலையையரைத்த விழுது செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி இலைச்சாற்றை ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் மேற்படி கல்நார்க் கட்டியைப் போடவேண்டும். சாறுனது கட்டியின் மீது ஒன்றரை அங்குலம் நிற்கவேண்டியது. இவ்விதம் நான்கு, அல்லது, ஐந்துநாள் ஊறவிட்டு மறுநாள் கட்டியின் மீது மேற்படி இலையையரைத்து அரையங்குலக் கனம் கவசித்து அதன்மீது மூன்றுசீலமண் செய்து கவசத்தினெடைக்கு இருபது பங்கெடை வரட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கத்திவ்வியமான பற்பமாயிருக்கும்.

அளவு முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே.

கல்மதத் தூய்மை

செய்முறை:- கல்மதம் தேவையான அளவு. இதனைச் சிறு துண்டுகளாகச் செய்து ஒரு மண்பாத்திரத்திற் போட்டு அதில் பசுவின் பாலை விட்டு இருபத்து நான்கு மணி நேரம், ஊறவைக்க வேண்டும். பிறகு அதிலுள்ள பாலையிறுத்துவிட்டு வேறு புதிய பாலைவிட்டு முன்போல் ஊறவைக்கவேண்டும். இவ்விதம்இருபத்து நான்கு மணிக்கொரு தடவை மாற்றி மாற்றிப் புதிய பாலை விட்டு வரவேண்டும். இவ்விதம் எட்டுத்தடவை செய்து பிறகு தண்ணீர் விட்டு நன்றாய்க்கழுவி வெய்யிலில் வைத்து உலர்த்தியெடுத்துக்கொள்ளத் தூய்மையாம்.

கல்மதத் தூய்மை (வேறு)

செய்முறை:- கல்மதத்தைச் சிறு துண்டுகளாகச்செய்து ஒரு மண்பாத்திரத்திற் போட்டு; அதில் நல்லெண்ணெயை விட்டு ஊற வைக்க வேண்டும். ஒருவாரஞ் சென்றபின் எண்ணெயை இறுத்து விட்டு வெந்நீரை விட்டு விட்டு எண்ணெய்ப்பசை போகும்படியாக அலசிக்கழுவி வெய்யிலில் வைத்துலர்த்தி எடுத்துக்கொள்ளவும். இப்படிச் செய்வதால் கல்மதமானது தூய்மையாகி விடும்.

148. கல்மத பற்பம்

தூய்மை செய்த கல்மதம் 1 பலம் (35 கிராம்). சோற்றுக்கற்றாழை ரசம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:-கல்மதத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து, இரண்டு சாமமரைத்துப்

வில்லைசெய்துலர்த்தி, ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்,

அளவு:- 1 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும் நோயும்.- அருகங்கிழங்குச்சாறு விராகனெடை 1, ($3\frac{1}{2}$ கிராம்) மிளகுத்தூள் குன்றி மணி எடை இவ்விரண்டையும்கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண இரத்தங்கக்கல், இரத்தவாந்தி ஆகியவைகள் தீரும்.

சோம்புத்தூள் 4 குன்றிமணி எடை தேன் விராகனெடை 1 ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண அதி வேகமான சுரம், சூடு சம்பந்தமான இருமல் ஆகியவை தீரும். இதனை உட்கொண்டபின், அரைப்பலம் சோம்பில் காற்படி தண்ணீரை விட்டு நான்கிலொரு பாகமாகக் காய்ச்சின குடிநீரை சிறுகச்சிறுக நான்கு அல்லது ஐந்து தடவைகள் பருகச் செய்து வருவதால் அதிக குணமுண்டாகும்.

சீரகத்தூள் குன்றிமணியெடை 4, காசினி விதைத்தூள் குன்றிமணியெடை 8, வெண்ணெய் அல்லது, நெய் விராகனெடை 1, ($3\frac{1}{2}$ கிராம்) இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துட்கொள்ள பிரமேக நோய் தீரும்.

மருத்துணவு:- நோய் வலிமைக்கும் உடல் தன்மைக்கும் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது.

149. கல்மத பற்பம் (வேறு)

தூய்மை செய்த கல்மதம் 1 பலம் (35 கிராம்), ஆற்றுத்தும்மட்டிக்காயிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:-மேற்படி கல்மதத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடிச்சீலை மண் செய்து கவசத்தினெடைக்கு இருபது பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப்பற்பமாயிருக்கும். இந்தப்பற்பத்தின் சமனெடை கருவேலம்பிசின் தூளைக்கலந்து உட்கொள்ள வேண்டியது. இதனைத் தனியாக உட்கொள்ளலாகாது.

அளவு:-மேற்படி கலவை 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும் நோயும்:-பருப்புக்கீரை விதைத்தூள் விராகனெடை-1 ($3\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி கலவையைக்கலந்து உட்கொண்டு வர, குருதிக்கக்கல், இரத்தவாந்தி ஆகியவைகள் தீரும்.

150. கல்மத பற்பம் (வேறு)

தூய்மை செய்த கல்மதம் 1 பலம் (35 கிராம்) தூய்மைசெய்த கர்ப்பூர சிலாசத்து 1 பலம் (35 கிராம்) எருக்கம் பழுப்புச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை.-மேற்படி சரக்கு இரண்டையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமம் (12 மணி) அரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலே மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபத்தைந்து பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

அளவு:- 5 முதல் 10 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :—பசுவின் வெண்ணெயில் கலந்துண்ண வெட்டைநோய்கள், பிரமியநோய்கள், பித்த சூடு, என்புச்சூடு, கணைச்சூடு ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு :—புகை, புளி- புணர்ச்சி நீக்கவும்.

சிருங்கித் தூய்மை

செய்முறை:- கலைமான் கொம்பைப்பெரிய துண்டுகளாகச் செய்து ஒருமண்பாத்திரத்திற்போட்டு அது ஆழ்ந்திருக்கும் படியாகப் பசுவின் மூத்திரத்தைவிட்டுப் பாத்திரத்தின் வாயை மண் தாலத்தால் மூடி இரண்டொரு சீலைமண் செய்து விட்டிருக்கிற நீரானது சுண்டும்படியாகப்புடமிட்டு எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இரண்டு அல்லது, மூன்று புடமிட்டெடுத்தாற் சிருங்கியானது தூய்மையாகிப்போம்.

மேற்படி தூய்மை (வேறு)

செய்முறை:- கலைமான் கொம்பைச்சிறு துண்டுகளாகச்செய்து ஒருபாத்திரத்திற் போட்டு ஒருபலத்திற்கு ஒரு ஆழாக்கு விதமாகப்

* தாலம்-மடக்கு

பசுவின் பாலைவிட்டு, விட்ட பால் சுண்டும்படியாக எரித்து எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு மேற்கண்டவாறே இளநீரை விட்டு வேக வைத்துக் கொள்ள வேண்டும், இவ்விதம் செய்தெடுத்தால் சிருங்கியானது சுத்தமாகிவிடும். இவ்விதம் தூய்மை செய்யப்பட்டதைப் பற்பமாகச்செய்து உபயோகித்தால் மிகவுஞ் சிறந்த குணத்தைத்தருமென்பது நாமிங்கு எடுத்துச் செல்ல வேண்டியதில்லை மருத்துவபயிற்சியாளர்கள் தத்தம் அனுபவத்தில் தாங்களே தெரிந்துக் கொள்வார்கள்.

151. சிருங்கி பற்பம்

கலைமான் கொம்பு 3½பலம், (122½கிராம்) வெள்ளைப்பாடாணம் 5 பலம் (175கிராம்), தாளகம் 1 பலம் (35கிராம்), நெய் 5 பலம் (175 கிராம்), அகத்திக்கீரையை அரைத்த விழுது. 20 பலம் (700கிராம்)

செய்முறை :-சிருங்கியைச் சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து மேற்படி நெய்யிற்போட்டு ஓரிராப்பகல் ஊறவிடவேண்டும். பிறகு மேற்படி அகத்திக்கீரை விழுதை இரண்டு பாகமாக்கி ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு அடையாகத்தட்டிக் கொள்ளவேண்டும். ஒருஉரத்ததுணித்துண்டைக்கீழேவிரித்து,அதன்மேல் முன் சித்தப்படித்தின ஒருஅடையைவைத்து அதன்மேல் முன்சித்தப்படுத்தின கொம்புத்துண்டுகளைப் பரப்பி, அதன் மத்தியில் பாடாணத்தையுந் தாளகத்தையும் வைத்து அதன்மீது மிகுதியாயிருக்கிற நெய்யையும் விட்டு அதன்மீது மற்றொரு அடையையும் வைத்து இரண்டையும் பொருந்தும் படியாகச்செய்து அதன்மேல்துணியை நன்றாகச் சுற்றிக் கொஞ்சம் மண்ணைக் குழைத்துத் தடவிக் கவசத்தின் பதினாறு பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கக் கொம்பானது பற்பமாகியிருக்கும். பாடாணமும் தாளகமும் ஓடிவிடும்.

அளவு :- 6 முதல் 8. குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், பசுவெண்ணெய் முதலியவைகளாகும்.

தீரும்நோய் :- குன்மநோய்கள், வயிற்றுநோய், இரைப்பிருமல், பித்த சம்பந்த சுரம், இருமல், கபநோய் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு:- நோய்க்குத் தகுந்தபடியும், உடலுக்குத்தகுந்தபடியும் வைத்துக் கொள்ள வேண்டியது,

152. சிருங்கி பற்பம் (வேறு)

கலைமான்கொம்பு தேவையான அளவு, சோற்றுக்கற்றாழைச் சாறு, எருக்கம்பால், எருக்கம்பழுப்புச்சாறு ஆகியவை வகை-1-க்குச் செல்லத்தக்க அளவு

செய்முறை :- கலைமான்கொம்பைச் சிறுதுண்டுகளாகச்செய்து குமரிச்சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்து நாலாம்நாள் ஒரு வறட்டியின் மீது பரப்பி அதன்மீது ஒருவறட்டியை மூடிச் சரக்கிற்கு இருபதுபங்கெடை வறட்டியிற்புடமிட்டாறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச்சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி, ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபதுபங்கெடை வறட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்க உயர்ந்த பற்பமாயிருக்கும்.

அளவு, துணைமருந்து முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

153. சிருங்கி பற்பம் (வேறு)

கலைமான் கொம்பு தேவையான அளவு, பசுவின் பால், ஓதியம்பட்டை, சிறுகீரைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கீழ்க்காய் நெல்லிச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு, ஆவாரைச்சாறு இவை வகை-1-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி கொம்பைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துப் பசுவின்பாலில் மூன்றுநாளூற வைக்க வேண்டும். நாலாம் நாளெடுத்து ஒதியம்பட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி அதற்குக் கீழும்மேலும் இட்டு ஒரு சீலைமண் செய்து கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியிற் புடமிடவேண்டும். ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிறுகீரைச் சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு இரண்டுசாமம் அரைத்து வில்லைசெய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின்னெடுத்து மேற்கண்டவாறே நெல்லிக்காய்ச்சாற்றில் ஒரு புடமும், பொன்னாங்கண்ணிச்சாற்றில் ஒருபுடமும், கீழ்க்காய் நெல்லிச்சாற்றில் ஒருபுடமும். சோற்றுக்கற்றாழைச்சாற்றில் ஒரு புடமும், ஆவாரைச்சாற்றில் ஒருபுடமும், பசுவின் பாலில் ஒருபுடமுமிட்டெடுக்க வேண்டும். ஆகக்கூடி எட்டுப் புடமும் தீர்ந்தால் இயற்கையின் அருளால் மேலான பற்பமாயிருக்கும்,

அளவு :- 3 முதல் 6 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், வெண்ணெய் முதலியவை களாகும்,

தீரும் நோய்கள் :- என்புசுரம், மேகச்சூடு, பிரமியம், எலும் புருக்கி, இரத்தசயம், இருமல், மூலநோய் ஆகியவைதீரும்.

மருத்துணவு :—நோய்களுக்கும் உடல் தன்மைக்கும் தகுந்த படி ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

154. சிருங்கி பற்பம் (வேறு)

கலைமான் கொம்பு 2 பலம் (70 கிராம்), கீழ்காய் நெல்லிச் சமூலத்தை நைய இடித்தவிழுது 10–பலம் (350கிராம்).

செய்முறை :—கலைமான் கொம்பைச் சிறு சிறுதுண்டுகளாகத் துண்டித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் கீழ்க்காய் நெல்லிச் சமூலத்தை இடித்த விழுதிற் பாதியை ஒரு வறட்டியிற் பரப்பி அதன்மேல் முன் கொம்புத்துண்டுகளை வைத்து மேலே முன்னரைப்பங்கு விழுதை வைத்துச் சந்தில்லாமல் நன்ருக அழுத்தி விட்டு பத்துபலமுள்ள பதினைந்து வறட்டிகளையடுக்கி அதன்மேல் முன் சித்தப்படுத்தினதை வைத்து அதன் மேலும்முன் மாதிரியான பதினைந்து வறட்டிகளையடுக்கிப் புடமிட்டு நன்ருக ஆறின பின்னெடுக்கச் சுத்தமாக வெளுத்துப்போம். ஒரு சமயம். தீயின் விகற்பத்தால் கறுததிருந்தால் முன் மாதிரியே இன்னொரு தடவையும் புடம் போட்டெடுக்க வெளுத்துப்போம். பிறகு அதையெடுத்து முன் மூலிகைச் சாற்றையே சிறுகச்சிறுகவிட்டு, 2 சாமமரைத்து வில்லை தட்டிக் காயவைத்து 10-பலமுள்ள பத்து வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

அளவு :- 100 முதல் 600 மில்லிகிராம்

துணைமருந்து :–வெண்ணெய், நெய், தகுந்த இளகம் ஆகியவை களிற் காலை மாலை இரண்டு வேளையுஞ் சாப்பிடலாம்.

தீரும் நோய் :- ×விந்துவெளிப்பாடு, என்புச்சூடு, எலும்புருக்கி. மேகம், மேகவெட்டை, நீர்ச்சுருக்கு முதலிய பித்த சம்பந்த நோய் களெல்லாந் தீரும்.

மருத்துணவு :-புகை, புளி, புணர்ச்சி நீக்குக.

× விந்துவெளிப்பாடு = துரிதஸ்கலிதம்.

சங்கு தூய்மை

செய்முறை:–மூட் சங்கைப் பருமனுன துண்டுகளாகச் செய்து தண்ணீரில், அல்லது இளநீரில் 6-மணி நேரம் ஊறவைத்துச் செம்மையாகஅலசி அதிலுள்ள மண் முதலியவைகளை நீக்கி விடுவதே அதன் தூய்மையாம்.

155. சங்குப் பற்பம்

மூட்சங்கு 1 பலம் (35 கிராம்), பாக்குப்பூச்சாறு, குருக்கத்திச் சாறு; மாவிலைச்சாறு, நாவல் இலைச்சாறு, அத்தியிலைச்சாறு, புன்னையிலைச்சாறு இவை வகை-1–க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- சங்கைக் கல்வத்திலிட்டுப் பாக்குப் பூச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு இரண்டுசாமமரைத்து வில்லை செய்து(6 மணி) வெய்யிலிலுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் பத்து பங்கெடை வறட்டியிற் புடமிட வேண்டும். இதனையெடுத்துக் குருக்கத்திச் சாற்றில் முன் போல் ஒரு புடமும், மாவிலைச் சாற்றில் ஒரு புடமும், நாவல் இலைச் சாற்றில் ஒரு புடமும், அத்தியிலைச்சாற்றில் ஒரு புடமும், புன்னையிலைச் சாற்றில் ஒரு புடமும் இட வேண்டும். ஆகக் கூடி ஆறு புடமும் தீர்ந்தால் மேலான பற்பமாகும்.

அளவு:– 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்தும் தீரும் நோயும் : பசுவின் வெண்ணெய் வராகனெடை-1 ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ண வாதசுரந் தீரும்.

நீராகாரம் பலம்-1(35 கிராம்), தேன் வராகனெடை-$2\frac{1}{2}$($8\frac{3}{4}$கிராம்); இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பித்த சுரந்தீரும்.

கடப்பஞ்சாறு விராகனெடை 3 ($10\frac{1}{2}$ கிராம்), தேன் வராகனெடை 3 ($10\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்துமேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண சேத்துமசுரம் தீரும்.

பசுவின் தயிர் வராகனெடை- 3, ($10\frac{1}{2}$ கிராம்), தேன் வராகனெடை 3, ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண விக்கல்; நோய் தீரும்.

கையாந்தகரையிலை வராகனெடை-1 (3½ கிராம்), மிளகு குன்றிமணி எடை 4. இவ்விரண்டையும் சேர்த்தரைத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, பாண்டுநோய், நீரடைப்பு, மஞ்சள்நோய் ஆகியவைகள் தீரும்.

வாத நோய்களுக்குத் தேனிலும், பித்தநோய்களுக்குக் குளிர்ந்த நீரிலும்; கப நோய்களுக்கு ஆளி விதையை அரைத்துப் பிழிந்த சாற்றிலும் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து கொடுக்க அவை நீங்கும்.

மருத்துணவு :—நோய் வலிமைக்கும், உடல் வலிமைக்கும் தகுந்தாற் போல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

156, சங்கு பற்பம் (வேறு)

செய்முறை:-தூய்மை செய்த சங்கு பலம்–1 (35 கிராம்), கஞ்சா இலை 7 பலம் (245 கிராம்), மேற்படி சங்கிற்குக்கவசஞ் செய்து அதன் மேல் மூன்று சிலைமண்செய்து ஒரு கெச புடமிட்டு ஆறின பின்னெடுக்கத்திறமான பற்பமாகும்.

அளவு :-1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய், தகுந்த குடிநீர்கள் முதலியவைகளாம்,

தீரும் நோய் :- எல்லாவகை சுரங்களும் தீரும். பெருமளவில் பித்த சம்பந்தமான நோய்கள், பித்தத சுரம், நாட்பட்ட சுரம், என்புசுரம், சுலைச்சுரம், எலும்புருக்கி நோய், முதலியவைகள் தீரும்.

157. சங்கு பற்பம் (வேறு)

தூய்மை செய்த சங்கு பலம்-1] (35 கிராம்), சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி சங்கைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து-2 சாமம் (6 மணி), அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சிலைமண் செய்து உலர்த்தி நூறுபலம் வறட்டியிற்

புடமிட்டு ஆறின பின்னெடுத்துப் பளிங்குக் குப்பியில் பத்திரம் படுத்தவும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

158. சந்திரோதய மாத்திரை

தூய்மை செய்த சங்கு பலம் 2½.(87½ கிராம்), இதனை ஒரு வறட்டியின் மீது பரப்பி வைத்து அதன் மீது ஒரு வறட்டியை வைத்து நூறு பலம் வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கொள்ளவும். இப்படிச் செய்வதால் சங்கு அரை வேக்காடா யிருக்கும். முழு வேக்காடாக வேண்டுமென்பது அவசியமல்ல, கூடுமானால் வேறு எந்த விதமாகிலும் சங்கை அரை வேக்கா டாகச் சுட்டுக்கொள்ள வேண்டியது. இவ்விதம் அரை வேக்கா டாகச் சுட்ட சங்கு பங்கு 1, தூய்மை செய்து உலர்த்திப் பொரித் துப் பொடித்த நாட்டு வெண்காரத்தூள் பங்கு-¼, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- முன் கண்ட மூன்று சரக்குகளையும் கல்வத்தி லிட்டு முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் (3 மணி) அரைத்து ஒரு குன்றிமணி எடை அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு;- 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து:- முலைப்பால், தேன், பன்னீர், கசகசாக் குடி நீர் முதலியவைகளாம்-

தீரும் நோய்:- சுரம், இருமல், குழந்தைகளின் நோய் பித்த சம்பந்தமான நோய் ஆகியவைகள் தீரும்.

பலகறைத் தூய்மை

செய்முறை:- பலகறையைப் பெருந்துண்டுகளாக நொறுக்கிப் பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதன் மீது தம்பத்தங்காய்ச் சாற் றை, அல்லது எலுமிச்சம் பழச்சாற்றை அல்லது புளிப்பு மாதுளம்

பழச்சாற்றை விடவேண்டும். இச்சாறானது பலகறைக்கு மேல் ஒரு அங்குலமிருந்தால் போதுமானது அதாவது ஒரு அங்குலம் உள்ளே ஆழ்ந்திருக்க வேண்டியது. வெய்யிலில் வைத்துச் சாறெல்லாஞ் சுண்டின பின்பு தண்ணீர் விட்டுப் பொடியானது சேதமாகாமல் சுத்தமாகக்கழுவி எடுத்து வெய்யிலிலுலர்த்தி வைத்துக்கொள்வதே தூய்மையாம்.

159. பலகறைப் பற்பம்

தூய்மை செய்த பலகறைப்பொடி பலம் 1 (35 கிராம்), புன்னை யிலைச்சாறு, சித்திரமூல இலைச்சாறு, கல்லால் இலைச்சாறு, காட்டு மல்லிகை சமூலச்சாறு, நீலோற்பல சமூலச்சாறு, சந்தன குழம்புத் தெளிநீர் இவை வகை, 1-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :-மேற்படி பலகறைப் பொடியைக் கல்வத்திலிட்டுப் புன்னை இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமரைத் துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்தி முப்பதுபலம் வறட்டியிற் புடமிட்டாறின பின் னெடுக்கவும். பிறகு மேற்கண்டபடியே சித்திரமூல இலைச்சாறு, கல்லால் இலைச்சாறு, காட்டுமல்லிகை சமூலச்சாறு, சந்தனக் குழம்புத் தெளிநீர் ஆகியவைகளில் முறையே புடமிட்டெடுக்க பற்பமாயிருக்கும்.

அளவு :- 1 முதல் 1½ குன்றிமணி எடை

துணை மருந்து:- வெண்ணெய், நெய், சர்க்கரை, முதலியவை களாம்,

தீரும் நோய் :- பாண்டு, கக்கல், மூர்ச்சை, வயிற்றுவலி, மகோ தரம், உப்புசம், இருமல். ஈளை, பெருவயிறு, விக்கல், செரியாமை நோய் முதலியவைகள் தீரும்.

160. பலகறைப் பற்பம் (வேறு)

தூய்மை செய்த பலகறை பலம்-3 (105 கிராம்), தூய்மை செய்த ரசம் செல்லத்தக்க அளவு, எலுமிச்சம்பழச்சாறு செல்லத் தக்க அளவு. இலந்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு,

செய்முறை :- பலகறையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இலந்தைச்சாற்றைச்சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமம் (6மணி)

அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்தி நூற்றைம்பது பலம் (5250 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும். இந்தப் பற்பம் 5-பங்கு. தூய்மை செய்த ரசம் 1 பங்கு இவ்விரண்டையுங் கல்வத்திற் சேர்த்தரைத்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து-4-சாமம் (12 மணி) அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி 5 சீலை மண் செய்துலர்த்தி, நூற்றைம்பதுபலம் (5250 கிராம்) வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும், இரசத்தினெடை நிற்காது. ஆனால் அதன் சத்தைக் கொடுத்துவிட்டு ஓடிப் போகும்.

அளவு :-2 முதல் 4 குன்றிமணி எடை.

துணை மருந்து ;-தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாகும்.

தீரும் நோய் :-சுரம், பிரமேகம், மூலம், வயிற்றுநோய், விக்கல், இருமல், நிணக்கழிச்சல், மூலம் முதலிய பல நோய்கள் தீரும். இதனைத் தகுந்த துணைமருந்துகளில் பித்த சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கலாம்:

161. பலகறைப் பற்பம்

இதன் 156-ம் முறையிற் சொல்லியிருக்கிற சங்குப்பற்பத்தைப் போலவே பலகறையைப் பற்பமாக்கி அங்குச் சொல்லியிருக்கிற நோய்களுக்கு உபயோகிக்கலாம்.

படிகாரத் தூய்மை

தேவையான அளவு படிகாரத்தைப் பொடித்துத் தண்ணீர் விட்டரைத்துப் பிறகு தண்ணீரை விட்டு நீர் போல ஆக்கிக் கொள்ள வேண்டும். இந்த நீரில் துத்தநாகக் கம்பியைப் போட்டு வைக்க வேண்டும். படிகாரமெல்லாம் துத்தநாகக் கம்பியில் ஒட்டிக்கொண்டும், கம்பி கம்பியாகவும் பிரகாசமுள்ளதாகவுமிருக்கும் அதையெடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும். இதுவே படிகாரத் தூய்மையாம்.

படிகாரத் தூய்மை (வேறு)

கொட்டைப் பாக்கை அல்லது வெட்டைப்பாக்கைச் சன்னமாகச் சீவின தூள் பலம் $2\frac{1}{2}$, ($87\frac{1}{2}$ கிராம்). இதில் இருபது

பலம் (700 கிராம்) தண்ணீரை விட்டுப் பத்துபலமாகச்(350 கிராம்) சுண்ட வைத்து இறக்கி வடிக்கட்டின குடிநீரில் ஒரு பலம் (35 கிராம்) படிகாரத்தைப் போட்டு முக்கால் பாகம் குடிநீர் சுண்டுகிற வரையில் காய்ச்சிப் பிறகு இறக்கி ஆறினபின் தண்ணீரை விட்டுக் கழுவியெடுத்துக் கொள்ளவும். இவ்விதம் செய்து கொள்வதே படிகாரத் தூய்மையாம்.

162. படிகார பற்பம்

படிகாரம் பலம் -2. (70 கிராம்), சிறு நெருஞ்சிச் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- படிகாரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி நெருஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி நூற்றைம்பது பலம் (5250 கிராம்) வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமா யிருக்கும்.

அளவு :- 8 முதல் 10 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும் நோயும் :- எருமைத் தயிரை மெல்லிய துணியில் வைத்துப் பிழிந்த தயிர்ச் சக்கை பலம் $\frac{1}{2}$ ($17\frac{1}{2}$கிராம்) இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் ஏழு நாட்கள் உட்கொண்டால், பிரமேகம், பிரமேக ஒழுக்கு, இந்திரியக்கசிவு: விந்துக்குறைவு ஆகியவைகள் தீரும்.

நெருஞ்சிச் சமூலம் பலம் 1 (35 கிராம்), இதில் ஒரு ஆழாக்கு நீரை விட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து வடிகட்டி இறக்கி இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு வர,மூத்திரக் கிரிச்சரம், நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த துணைமருந்துகளில் உபயோகிக்க நீர்த் தாரை, நீர்ப்பை, ஆகியவைகளைப் பற்றிய நோய்களும் தீரும்.

163. படிகார பற்பம் (வேறு)

கிளிஞ்சிற் சுண்ணாம்பு, வெடியுப்பு, படிகாரம், நாட்டு நவச் சாரம், கற்பூரம், இவை வகை 1-க்குச் சமனெடை. இவற்றைப்

பொடித்துப் பனியில் வைக்கச் செயநீராகும். இந்தச் செயநீரைப் பீங்கான் பாத்திரத்தில் விட்டு வெய்யிலில் வைக்க உலர்ந்து உப்பாகும். இந்த உப்பைக் கல்வத்திலிட்டுக் கோழி முட்டை வெள்ளைக்கருவைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு (3 மணி) சாம மரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தவும். பின்பு வில்லைக்குத் தகுந்த விதமாக ஒரு ஆழாக்கு, அல்லது, காற்படி சுண்ணாம்பை ஒரு சட்டியிற் பரப்பி அதன் மேல் மேற்படி வில்லையை வைத்து அதன் மேல் முன்னளவு சுண்ணாம்பைக் கொட்டிப் பரப்பி விட்டு மேற்சட்டி மூடி மூன்று சீலை மண் செய்து அடுப்பேற்றி ஒருசாமம் எரித்து அடுப்புடனே ஆறவிட்டு நன்ருகக் குளிர ஆறினபின் எடுத்து வில்லையின் மீது மூன்று சீலை மண் செய்துலர்த்திக் கவசத்தின், 7-பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துப் பொடித்துப் பனியில் வைக்கச் செய நீராகும். இந்தச்செயநீரை பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

தேவையான படிகாரத்தை மேற்படி செயநீரிற் தோய்த்துத் தோய்த்து வெய்யிலில் வைத்துவர அப்படியே மலர்ந்துபோகும். இவ்விதம் மலர்ந்ததைக் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஓட்லிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் சய்து கவசத்தின் ஏழுபங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

குறிப்பு.

செயநீரில் தோய்த்து மலர்ந்த படிகாரத்தைச் செயநீர் விட்டரைக்காமலே அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திப் புடமிட்டெடுத்தும் உபயோகிக்கலாம்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :-தேன், வெண்ணெய், முதலியவைகளாம். இது துணைமருந்தாக ஆடாதோடைப்பாணிதத்தில் கலந்து கொடுக்கப்படுவது வழக்கம்.

ஆடாதோடைப் பாணிதம்

ஆடாதோடை இலைச்சாறு. முசுமுசுக்கை இலைச்சாறு, பொற் றலைக் கையாந்தகரை இலைச்சாறு, இவை வகை 1க்கு ஆழாக்கு-1, பசுவின்னெய்-அல்லது, கலப்புநெய் ஆழாக்கு-1, சிறுநாகப்பூ, ஏலரிசி. தாளீசப்பத்திரி, இவற்றின் தூள்கள் வகை-1-க்கு விராகனெடை-1 ($3\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :- முன் மூன்று சாறுகளையும் ஒன்றாகக்கலந்து நெய்யையுங் கூடச்சேர்த்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நீர்சுண்டின பதத்தில் மற்ற சூரணங்களையுஞ் சேர்த்து நன்றாகக் கலந்து இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :- 2 முதல் 4 வராகன் எடை.

இந்த ஆடாதோடைப் பாணிதத்தைத் தனியாகவும் உபயோகிக்கலாம். மேற்கண்ட படிகார பற்பத்திற்குத் துணைமருந்தாகவும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள் :- மேற்கண்ட படிகார பற்பத்தை மேற்கண்ட துணைமருந்துகளில் சமயோசிதம் போல சேர்த்துக் கொடுக்க, காசநோய், சுவாநோய், நீரடைப்பு, பாண்டு முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு

இது சித்தமருத்துவ மறைபொருளான முறைகளிலொன்று இது இலேசான மருந்தாயினும் பலமான மருந்துகள் இதன் முன்னில்லா. இதனைப் பயன்படுத்தும் மருத்துவர்களுக்குத்தான் இதன் சிறந்த குணம் தெரியவரும். "சோம்பேறிக்கு தோலோடு வாழைப்பழம்" என்பது போல சோம்பேறித் தன்மையுடையவர்களுக்கு ஏட்டுச்சுரைக்காய் என்ன பயனைத்தரும்.

164. படிகார பற்பம் (வேறு)

தேவையான அளவு படிகாரம், இதற்குப் பதினைந்து பங்கு சிறுபீளைச்சாறு, படிகாரத்தை ஒரு கலயத்திற் போட்டு அந்தக் கலயம் நிறைந்திருக்கும்படியாக மேற்படி சாற்றை விட்டு வெய்யிலில்வைக்கவேண்டும். அந்தச்சாறெல்லாஞ் சுண்டினபின்பு மறுபடியும் முன்போல் அந்தச்சாற்றைவிட்டு வெய்யிலில் வைத்துச் சுவர வைக்கவேண்டும். மூன்றுதடவையும் இவ்விதமே விட்டுச் சுவர வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் எடுத்து ஒரு ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்றுசீலமண் செய்து காய வைத்துக் கவசத்தின் பதினைந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு :- 4 முதல் 5 குன்றிமணி எடை.

துணைமருந்து ;- நெய், தேன் ஆகியவை.

தீரும்நோய்கள்:-கனவுவிந்தொழுக்கு, விந்துக்குறைவு ஆகியவைகள் தீரும்.

165. படிகார பற்பம் (வேறு)

படிகாரம் 8 பலம் (280 கிராம்), மூன்றுசேர் (840 கிராம்), பிடிக்கக்கூடியஒருகல்யத்தில்இதைப்போட்டுச் சிறுபீளைச்சாற்றை அதினிறையவிட்டு அதன் வாய்க்கு ஓடுமூடி-5 சீலைமண்செய்து மூன்று நாள் வைத்திருந்து நாலாம் நாள் இரு நூறு பலம் வறட்டியிற் (700 கிராம்), புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு :- 5 முதல்8 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், கூழ்ப்பாண்ட நெய், கூழ்ப்பாண்ட இளகம் முதலியவைகளாம்,

தீரும்நோய்கள் :- வெட்டை, பிரமியம், வயிற்றளைவு; விந்தொழுக்கு, விந்துக்குறைவு ஆகியவைகள் தீரும்.

166. படிகார பற்பம் (வேறு)

படிகாரம் 6 வராகன் எடை (21 கிராம்). (இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்) சுவற்று முள்ளங்கி யிலைச்சாறு 24 பலம் (840) கிராம்), படிகாரத்தை ஒரு ஓட்டில் வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுறுக்கிட வேண்டும். அடுப்பை மெதுவாக எரிக்க வேண்டும். சாறெல்லாஞ் சென்ற பின்பு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திற் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமம் அரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஒட்டி விட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து கவசத்திற்குப் பத்துப் பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துப் பொடித்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்த வேண்டும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், வெண்ணெய் ஆகியவை,

தீரும்நோய்கள்:—எல்லா நோய்களுக்கும் இது உபயோகப் படுத்தப் படுகிறது. சுரநோய்க்கு இது சஞ்சீவியாக வேலை செய்கிறது

ஆறாத இரணங்களுக்கு இதைத் தேனிற் குழைத்து இரணத்தின் மீது போட்டுவர வெகு சீக்கிரம் ஆறிப் போகும்.

167. படிகார பற்பம் (வேறு)

படிகாரம் ஒருபங்கு, நவச்சாரம் ஒரு பங்கு, இவ்விரண்டையும் பொடித்து ஒரு சிறு சட்டியிற் போட்டு வாய்க்கு ஓடிட்டு மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துப் பொடித்து நிறுத்து முன் வைத்த படிக்கார எடைக்கு எவ்வளவு குறைந்திருக்கிறதோ அவ்வளவு படிகாரத்தைச் சேர்த்துப் பொடித்து முன் போற் புடமிட வேண்டும். புடமிட்டு ஆறின பின்பு எடுத்து நிறுத்து ஆதியில் வைத்த படிகார எடைக்கு எவ்வளவு குறைகிறதோ அவ்வளவு படிகாரத்தைச் சேர்த்து முன் போற் புடமிட வேண்டும். இவ்விதம் ஆதியில் வைத்த படிக்கார நிறை நிற்கிற வரையில் அசலெடைக்குக் குறைகிற அளவு படிகாரத்தைச் சேர்த்துச் சேர்த்துப் புடமிட்டுக் கொண்டே வந்து அசலெடைக்குச் சரியான எடை பற்பமாகும் வரை மேற் கண்டபடி புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :-1 முதல் 2 குன்றிமணி எடை.

இதை அவரவர்களுக்குப் பழக்கமான துணை மருந்துகளுடன் எல்லா நோய்களுக்கும் பயன்படுத்தலாம். இது சீன குரு பற்ப மாகையால் இளகம், தைலம் முதலியவைகளிலும் கொஞ்சம் சேர்த்து உபயோகப்படுத்தினால் அதிகச் சிறப்பான குணத்தைக் கொடுக்கும்.

இதன் மூலமாக நெருப்பிற்கோடுஞ் சரக்குகளை நெருப்பிற் கோடாமல் கட்டலாம். இதன் முறையைத் தெரிந்தவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளவும்.

168. படிகாரச் சுண்ணம்

படிகாரம் 1 பலம் (35 கிராம்), புங்கம்பால் செல்லத் தக்க அளவு.

செய்முறை :-படிகாரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற் படி பாலைச்சிறுகச்சிறுகவிட்டு இரண்டு சாமம் (6 மணி) மரைத்துப்

வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தினெடைக்கு 4 பங்கெடை வறட்டியிற் புடமிட்டெடுக்கச் சுண்ணமாகியிருக்கும். (இந்தச் சுண்ணத்தை அரைத்த மஞ்சளில் கலந்தால் சிவக்கும். இதுவே சுண்ணத்தின் அடையாளமாகும்).

அளவு :-3 முதல் 5 குன்றிமணி எடை.

துணைமருந்து :–வெள்ளரிக்காய்ச்சாறு, நீராகாரம், தாழை விழுதுச்சாறு, மிளகுக்குடிநீர், ஆகிய இவைகளிலொன்றில் கலந்து உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள்:-சதையடைப்பு, கல்லடைப்பு, நீரடைப்பு, நீர்ச் சுருக்கு ஆகியவைகள் தீரும்.

169. படிகாரச் சுண்ணம் (வேறு)

படிகாரம் 10 பலம் (350 கிராம்), தயிர்த்தண்ணீர் 2 படி எருக்கம்பால் அல்லது கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு, வெடியுப்பு செல்லத்தக்க அளவு, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- படிகாரத்தைப் பொடித்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் படிகாரமெல்லாம் உருகினவுடன் தயிர்த் தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுச் சுருக்குக் கொடுக்க வேண்டும். எல்லாத் தயிர்த்தண்ணீரும் சுருக்கிட்டானவுடன் இறக்கி ஆறவிட்டு எடுக்கப் படிகாரம் கட்டுப்பட்டுப்போகும். இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலை அல்லது கொடிக் கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமம் அரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.இந்தச் சுண்ணத்திற்குச் சமனெடை வெடியுப்பைச் சேர்த்துப் பொடித்து [முலைப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு .சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி நூற்றைம்பது பலம் வறட்டியில் (5250 கிராம்) புடமிட்டு ஆறின பின்னெடுக்கக் கடுங்காரச் சுண்ணமாகி இருக்கும். இதனை எடுத்துப் பத்திரப்படுத்தவும்,

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும்நோய் :- நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளுடன் எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கலாம்.

குறிப்பு

இது சரக்குகளைக் கட்டவும், வாத முறைகளுக்குமாகும். தெரிந்தவர்கள் மூலம் கேட்டுக் கொள்ளவும்.

170. யூனானிமுறைச் செந்தூரம்

படிகாரத்தைப் பொடித்துப் புது ஓட்டிற் போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்தால் படிகாரத்திலுள்ள நீர் சுண்டிப் பொரிந்தது போலிருக்கும். இதனை எடுத்துக் கல்வத்திற் பொடித்துத் துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இவ்விதம் செய்த தூள் 1 பலம் (35 கிராம்), பூங்காவியைக் கல்வத்திற் பொடித்து இள நீர் விட்டரைத்து,பத்துப்பங்கு இள நீரிற் கரைத்துக் கீழ் படியாததற்கு முன்பே சீக்கிரமாக வேறுபாத்திரத்தில் வடித்துக் கொள்ள வேண்டும். அடியிற் படிந்திருக்கிற மணல் முதலியவைகளை நீக்கிவிட வேண்டும். வடித்துள்ள நீரை வெய்யிலில் வைத்து வந்தால் நீரெல்லாஞ் சுண்டிக்காவியானது கீழ் படிந்திருக்கும். இதனைப் பொடித்துக் கொள்ளவும். இவ்விதம் சித்தப்படுத்தின பூங்காவி 1 பலம் (35 கிராம்), மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :- 5 முதல் 8 குன்றிமணி எடை.

துணை மருந்து :- தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- உடல் காந்துதல், கைகாலெரிச்சல் மேகசுரம், மேகவெட்டை, நீரெரிச்சல் ஆகியவைகள் தீரும். சோடா பருகு நீரில் கலந்துகொடுக்கப் பெரும்பாடு தீரும்.

மருந்துணவு :- கடுகு, நல்லெண்ணெய், காரமாகிய பண்டங்கள் ஆகியவைகளைத் தள்ளவும்.

171. சீன ரச செந்தூரம்

படிகாரம் 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 3 பலம் (105 கிராம்), இரசம் 2 பலம் (70 கிராம்).

செய்முறை :- படிகாரத்தையும், கெந்தகத்தையும் அவலைப் போலத் துண்டித்து இரசத்துடன் கலந்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியில் அடைத்து வாய்க்கு மாக்கல்லடைத்து வாய்க்கும் ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஒருமுழச் சதுரக் குழி தோண்டி அதில் அரைவாசி உமியைக் கொட்டி முன் சித்தப் படுத்தின பளிங்குக்குப்பியை வைத்து அதன் மேலும் உமியைக் கொட்டி நெருப்பிவிட்டுப் புடம் போட்டுக் குளிர ஆறின பின்னெடுத்துக் குப்பியை உடைக்கச் செந்தூரமாகியிருக்கும். இதனைப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து:- பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் : இதனை ஐந்து நாள் உட்கொள்ள மூலநோய் மூலவாயு, மேகநோய், காசம் முதலிய நோய்கள் தீரும்.

172. சீன விடாமிர்தம்

முன் கண்டபடி தூய்மை செய்யப்பட்ட படிகாரத்தை, அல்லது, சாதாரணமான படிகாரத்தைப் பொடித்து ஒரு புது மண் பாண்டத்திற் போட்டு மூடி வைத்திருக்க வேண்டும்.

அளவு : மனிதருக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), மாட்டுக்கு 6 வராகன் எடை (21 கிராம்), குதிரைக்கு 9 வராகன் எடை ($31\frac{1}{2}$ கிராம்).

துணை மருந்து :-இதனை வாயிற்போட்டு மேலே தண்ணீரைப் பருகுவதேயாம்.

தீரும் நோய்கள் :- பாம்பு, தேள், எலி, நட்டுவக்காலி, நாய், பெருச்சாளி, நரி முதலிய எல்லாக்கடி நச்சுகளுக்கும் பயன் படுத்தலாம். உடனே நஞ்சினால் காணும் மாரடைப்பு, மூர்ச்சை முதலியவைகளும் தீரும்.

குறிப்பு

மேற்கண்டபடி வேண்டிய அளவு படிகாரத்தைப் பொடித்துப் புதுப்பாண்டத்திற் போட்டு மூடி வைக்கவேண்டும்.

இது எவ்வளவு நாட்சென்றதாயிருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு குணத்தைக் கொடுக்கும்.

173. சீனுக்காரத் தைலம்

படிகாரம் 10 பலம் (350 கிராம்), சிறு கிளாவேர்ப்பட்டை 10பலம் (350 கிராம்), படிகாரத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து மேற்படி வேருடன் கலந்து குழித்தைலமாக இறக்கிக் கொள்ளவும்.

அளவு .- 5 முதல் 10 துளி.

துணைமருந்து :- தேன், நெய், சர்க்கரை முதலிய விருப்பமானவைகளில் கலந்து கொடுக்கலாம்.

தீரும் நோய்கள் :- பித்த சம்பந்தமான எவ்லாவகைக் காய்ச்சல்களும் தீரும். எல்லாவகைப் புண்களுக்கும் பயன்படுத்தலாம்

174. வெண்காரப் பற்பம்

வெண்காரம் $1\frac{1}{2}$, பலம் ($52\frac{1}{2}$ கிராம்), வெள்ளைப்பூப் பூக்கிற காசித் தும்பை இலைச்சாறு செல்லத்தக்க அளவு

செய்முறை :- வெண்காரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்கண்ட சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் (3மணி), நேரம் அரைத்துப்பில்லை செய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு :- 4 முதல் 7 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், வெண்ணெய், முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :- பித்த நோய் எவ்லாவகையும் தீரும்.

175. வெண்காரப் பற்பம் (வேறு)

வெண்காரம் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), சிறுசெருப்படைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு மூன்று சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி இருநூறு பலம் (7000 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கக் கருப்பு வண்ணமான பற்பமாகி இருக்கும்.

அளவு ;- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:-தாழைவிழுதை அரைத்த சாந்து $\frac{1}{4}$ பலம்($8\frac{3}{4}$கிராம்), அல்லது, மேற்றோல் நீக்கின வாதுமைப் பருப்பு, சீனிக்கற்கண்டு இவ்விரண்டையும் சமபாகமாகச் சேர்த்து அரைத்த கற்கம் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்).

தீரும் ரோயங்கள் :- மேற்கண்ட வகைகளுள் ஒன்றில் கூட்டி காலை, மாலை இரண்டு வேளையும் ஏழுநாள் கொள்ள இருமல், சயம்,காசம் முதலிய கபநோய்கள் தீரும்.

176. வெண்கார பற்பம் (வேறு)

(அ) வெண்காரம், சிலாசத்து, கலைமான் கொம்பை இராவின தூள் கல்நார்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்.)

(ஆ) நவச்சாரம், சூடன், பூநீறு, வீரம் இவை வகைக் 1க்கு $1\frac{1}{4}$ வராகன் எடை பருத்திச் சாம்பல் தெளிநீர் செல்லத் தக்க அளவு. கற்சுண்ணாம்புத் தூள் 4 பலம் (140 கிராம்).

பருத்திச்சாம்பல் தெளிநீர் செய்முறை:-பருத்திச்செடி மூலத்தை உலர்த்திச் சுட்டசாம்பல் $\frac{1}{2}$ படி,இதனை ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் 4 படி நீர் விட்டு ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை நன்ருகக் கலக்கி வர வேண்டும். இவ்விதம் மூன்று நாள் செய்து நாலாம் நாள் கலக்காமல் விட்டுவைத்து, ஐந்தாம் நாள் தெளிவை இறுத்துக் கண்ணாடிக் குடுவையிற் பத்திரப் படுத்தவேண்டும். இதுவே பருத்திச்சாம்பல் தெளிநீராம்.

செய்முறை :- (அ)விலுள்ள நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படி தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்துக் கைவிடாமல் நான்குசாமமரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டுமேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி முந்நூறுபலம் (10500கிராம்) வறட்டியிற் புடமிட்டு எடுத்து அதைக் கல்வத்திலிட்டு(ஆ)விலுள்ள சரக்குகளைச் சேர்த்து மேற்படி பருத்திச்சாம்பல் தெளி நீரைச் சிறுகச்

சிறுக வார்த்து நான்கு சாமம் கைவிடாமல் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து நன்றாய்க் காய்ந்த பின்பு ஒரு வட்டோட்டில் இரண்டு பலம் (70 கிராம்), கற்சுண்ணும்பைப் போட்டுப் பரப்பி அதன்மேல் வில்லையை வைத்து, வில்லையின் மேல் இன்னும் இரண்டு பலம் (70 கிராம்), கற்சுண்ணும்பைப் போட்டுப்பரப்பி மேலோடுமூடிச்சீலைமண் செய்துலர்த்திமுந்நூறுபலம் (10500 கிராம்) வறட்டியிற்புடமிட்டு ஆறினபின்னெடுக்கவும். பற்பமானது வெளுத்திருந்தால்உத்தமம். அப்படி வெளுக்காது கறுத்திருந்தால் முட்டை வெள்ளை அம்பியை விட்டு இரண்டு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் முன்போலவே கீழும்மேலும் சுண்ணத்தை இட்டு நடுவே வில்லையை வைத்து மேலோடுமூடிச் சீலைமண் செய்து இரு நூறுபலம் (3½ கிலோ) வறட்டியிற்புடமிடவேண்டும். ஆறினபின் எடுக்க வெண்மையான பற்பமாகி இருக்கும். இந்தப் பற்பம் ஒரு பங்கு, இலிங்கச் செந்தூரம் அரைப்பங்கு. (இதன்முறை பின்னெழுதப்படும்) அவசரமானகாலங்களில் முலைப்பாலில் நான்கு சாமம் சுருக்கிட்டுப் பொடித்த லிங்கத்தைச் சேர்த்துக் கொள்ள லாம். மேற்கண்ட இரண்டையும் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு :- 5 முதல் 7 குன்றிமணி எடை.

துணை மருந்து :-இளநீர், வெள்ளரிக்காய்ச்சாறு, வெள்ளரிக் காய் விதைப் பருப்பையரைத்துப் பிழிந்த பால், நெருஞ்சில்வேர்க் குடிநீர் முதலியவைகளாகும்.

தீரும் நோய்கள் :- பெருவயிறு, மகோதரம், நீர்க்கிரிச்சரம், கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, நீர்ச்சுரப்பு, நீரெரிச்சல், உடல் வீக்கம் முதலியவைகள் தீரும்.

177. வெண்காரச் சுண்ணம்

நாட்டுவெண்காரம் தேவையான அளவு உப்பிலாங்கொடிச் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு, முருங்கைப்பட்டை செல்லத்தக்க அளவு.

செய்முறை :- வெண்காரத்தை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு, அது இரண்டங்குலம் ஆழ்த்திருக்கும்படியாக மேற்படி சாற்றைவிட்டு மூன்றுநாள் வெய்யிலில்வைத்து அல்லது சாறெல் லாஞ் சுண்டுகிற வரையில் வெய்யிலில் வைத்துச் சாறுசுண்டின பின் முருங்கைப்பட்டையை வெண்ணெய்போலரைத்து அதற்குள்

மேற்படி வெண்காரத்தை வைத்துப் பொதிய வேண்டும். கவசமானது வெண்காரத்தின்மீது ஒரு அங்குல கனமிருக்க வேண்டும். வெய்யிலிலுலர்த்தி நன்ருக உலர்ந்தபின்பு அதன்மேல் ஏழுசீலைமண் செய்துலர்த்திஐம்பதுபலம் (1750 கிராம்),வறட்டியிற்புடமிட்டாறின பின் எடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

அளவு :-2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தேன், நெய், வெண்ணெய் இளநீர்.

தீரும்நோய்கள்:-நீரடைப்பு,சதையடைப்பு, கல்லடைப்பு ஆகியவைகள் தீரும்,

178. வெண்காரச் சுண்ணம் (வேறு)

செய்முறை :-வெண்காரக்கட்டிக்குப் பிரம்மதண்டுப்பாலை அடித்து வைக்க வேண்டும். பிறகு அந்தப் பால் உலர்ந்த பின்புமுன்போல் நிழலில் அந்தப்பாலை அதற்கு அடிக்க வேண்டும். இவ்விதம் கட்டியின் மீது சுமார் ஒரு நூற்கனமிருக்கும்படியாக அந்தப் பாலை அடிக்க வேண்டியது. அத்தப் பால் உலர உலர ஒரேதடவையிலும் அவ்வளவு பாலையும் அடித்துக் கொள்ளலாம். இவ்விதம் பாலையடித்துச் சித்தப்படுத்தின கட்டியை நான்கு சாமம் (12 மணி), வெய்யிலில் வைக்கக் கட்டி வெளுத்துச் சுண்ணமாகி விடும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை,

துணைமருந்து :- தேன், நெய், வெண்ணெய், இளநீர், முள்ளங்கிச்சாறு, வெள்ளரிக்காய் விதையை அரைத்துப் பிழிந்த பால் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:-நீர்க்கட்டு, நீரருகல், கபம், பாண்டு, தோடங்கள் ஆகியவை தீரும்.

179. வெண்காரச் செந்தூரம்

வெண்காரம் தேவையான அளவு. (இவைகட்டிகளாயிருக்க வேண்டும்). வெடியுப்பு தேவையான அளவு. (இது சுமார் வெண்காரத்தினெடைக்கு நாலு பங்கெடை உள்ளதாயிருக்க வேண்டும்). காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:-வெடியுப்பைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி காட்டாமணக்குப் பாலைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்துப் மேற்படி வெண்காரக் கட்டிகளின் மீது சமமாகக் கவசஞ் செய்து உலர்த்த வேண்டும், அந்தக்கவசம் உலர உலர அதன்மீது கவசமேற்றிக் கொண்டே போக வேண்டும். இவ்விதம் அரைத்து வைத்திருக்கிற வெடியுப்பு யாவும் செல்கிற வரையில் பூசி உலர்த்திக் கொள்ள வேண்டும், சுமார் நாலைந்து நாள் உலர வைக்க நேரிடும். நன்குயுலர்ந்து வெளுத்த பின்பு கவசத்துடனே கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச்சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து ஒரு பீங்கான் தட்டில் வைத்து உலர்த்த வேண்டும். இது ஈரமில்லாமல் நன்குகவுலர்ந்த பின்பு தூள் செய்து ஒரு இரும்புக் கரண்டியிற் போட்டு மேற்படி பாலை விட்டு விளக்கெண்ணெய் விளக்கிற் பிடித்து இரும்புக் கரண்டியாற் கிளறிக் கொடுக்க வேண்டும். நன்குகச் சிவக்கிற வரையில் மேற்படி பாலையும் விட்டு வரவேண்டும். நன்குகச் சிவந்து போன பின்பு எடுத்தாற வைத்துக் கல்வத்திற் பொடித்துக் கண்ணாடிக் குடுவையிற் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு:- 4 முதல் 5 குன்றிமணி எடை.

துணை மருந்து:-தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாகும்.

தீரும் நோய்கள்:-தாகம், நாவறட்சி, நீர்க்கட்டு முதலியவைகள் தீரும்.

180. வெண்காரச் செந்தூரம் (வேறு)

பொரித்த வெண்காரம் 1 பலம்(35 கிராம்), காட்டாமணக்குப்பால் 3 பலம் (105 கிராம்).

செய்முறை:- மேற்படி வெண்காரப் பொரியைப் பொடித்து இரும்புக்கரண்டியிற் போட்டு மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரும்புக்கம்பியால் துழாவி வறுக்கச் செந்தூரமாகும். இந்தச் செந்தூரம் கருஞ் சிவப்பாயிருக்கும்;

அளவு:- 5 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து:-இளநீர், முள்ளங்கிக் கிழங்குச்சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:-நீர்க்கட்டு, நீரடைப்பு, நீரருகல் ஆகியவை தீரும்.

181. வெண்கார மெழுகு

செய்முறை:-வெண்காரத்தைத்தூய்மைசெய்துபொடித்துக்கரண்டியில் போட்டு சிறு அம்மான் பச்சரிசிச்சாற்றைச் சிறுகச்சிறுகச் சுருக்குக் கொடுக்கவும். இவ்விதம் சுமார் ஒரு சாமங்கொடுத்தால் மெழுகாகும். இதனைப் பீங்கான் சிமிழில் அல்லது கொம்புச் சிமிழிற் பத்திரப்படுத்தவேண்டும்.

அளவு:-4. முதல் 5 குன்றிமணி எடை-

தீரும் நோய்கள்:-நீரடைப்பு, நீர்க்கட்டு ஆகியவைகள் தீரும்.

182. வெண்கார மெழுகு (வேறு)

கோழிமுட்டை 10, இவை ஒவ்வொன்றையும் தமருசியால் துவாரஞ் செய்து கொள்ளவேண்டும், இவை ஒவ்வொன்றிலும் தூய்மை செய்த வெண்காரத்தைத்தூள்செய்து இரண்டிரண்டு வராகன் எடை (7கிராம்)வீதம் அதற்குட் செலுத்தி அதன் வாயின் ஓரத்தில் உளுந்தையரைத்துப் பூசி அதன் மீது வேறு முட்டையோட்டை வைத்து அடைத்து விடவேண்டும். இவ்விதம் எல்லா முட்டைகளையும் சித்தப்படுத்தி ஒரு வாயகன்ற சட்டியில் மணலைப் பரப்பி அதில் முட்டைகளை ஒன்றின்மீது ஒன்று படாமல் வைத்து மேலும் மணலைக் கொட்டி முட்டை மறையும்படியாகச் செய்ய வேண்டியது. முட்டையின் மீது மணலானது அரையங்குலம் அல்லது காலங்குலமிருந்தால் போதுமானது. இவ்விதம் சித்தப்படுத்தினதை நாள் முழுதும் வெய்யில் படுகிற இடத்தில் வைக்க வேண்டும். இவ்விதம் வைத்து இருபத்திரண்டு நாள் சென்றெடுத்து முட்டையை உடைத்தெடுத்தால் அதற்குள் எல்லாம் மெழுகாய் இருக்கும் இதனைப் பீங்கான் சிமிழில் அல்லது கொம்புச் சிமிழிற் பத்திரப்படுத்தவும்.

அளவு:-4 முதல் 5 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:-நீரடைப்பு, நீர்க்கட்டு, ஆகியவைகள் தீர்ந்து உடல் வலிமை, உடற்கட்டு முதலியவைகள் உண்டாகும்.

183 போசன சஞ்சீவி

வெண்காரம் 5 பலம் (175 கிராம்), (இதனைப்பொரித்துக் கொள்ள வேண்டும்) வெடியுப்பு, கறியுப்பு, இந்துப்பு, படிகராம்

சத்திச்சாரம், சவுட்டுப்பு, இலவங்கம், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், நவாச்சாரம், ஓமம், கண்டத்திப்பிலி, யானைத்திப்பிலி, தூய்மை செய்தகஞ்சா, பெருங்காயம் இவை. வகை-1-க்குப் 1 பலம் (35 கிராம்), வெள்ளைப்பூண்டு 5 பலம் (175 கிராம்), பனைவெல்லம் 6 பலம் (210 கிராம்).

செய்முறை:- உப்புகளைத் தனித்தனியே பொடித்து ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும். பெருங்காயத்தைப்பொரித்துத் தூள்செய்து கொள்ளவும், கஞ்சாவை ஓட்டில் வைதுத் மணம்வரும்படியாக வறுத்துத் தூள்செய்து கொள்ளவும். வெள்ளைப் பூண்டுத்தோலை உரித்துநீக்கி இதழிதழாக எடுத்துக் கொள்ளவும் மற்ற சரக்குகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்லுரலிலிட்டு மரவுலக்கையால் மெழுகு போலாகிற வரையில் இடிக்க வேண்டும்: அரைக்கலாகாது. எத்தனை நாள் சென்ற போதிலும் இடித்தே மெழுகு பதமாக்கிக் கொள்ளவேண்டும். அரைத்துப் பயன்படுத்துவதால் நல்ல குணத்தைக் காணவில்லை. இது ஒரு தடவையல்ல பல தடவைகளிலும் பரீட்சித்துப் பார்க்கப் பட்டிருக்கிறது.

அளவு:--$\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$.விராகனெடை.

தீரும்நோய்கள் :-சோகை நோய், எல்லா வகைவயிற்றுவலிகள், எல்லாவகைச் சூதக வாயுகள், அட்டகுன்மம், வயிற்றுக்கட்டிகள் முதலிய அநேக வயிற்று நோய்கள் தீரும்.

மருத்துணவு :- இச்சாபத்தியம்.

184 கறியுப்புப் பற்பம்

செய்முறை:-பெருங்கட்டிகளாயுள்ள கறியுப்பு 5 பலம்(175 கிராம்) இதனை ஒரு மண்கலயத்திற்குள் போட்டு உப்பானது நான்கங்குலம் ஆழ்ந்திருக்கும் படியாக வில்வ இலைச்சாற்றை விட்டு இரண்டு நாளூறவைத்து மூன்றுநாள் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 5 குன்றிமணி எடை.

துணைமருந்து :- இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்குடிநீர், எலுமிச்சம்பழச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, எலுமிச்சம்பழ சர்பத்து, நெல்லிக்காய் மூறப்பா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- குன்மம், அக்கினி மந்தம், கருப்பை வாயு, பித்த வாயு, வயிற்றிரைச்சல், வயிற்றுப்பொருமல் முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :- இலகுவாய் செரிக்கின்ற பொருள்கள், மெல்லுணவு, வேளைக்குரிய உணவு, முதலியவைகளை அனுசரித்து வரவேண்டியது. இன்னும் உடலியல், உடல் வன்மை முதலியவைகளுக் கேற்றபடி மருத்துணவு ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாம்.

185 பஞ்ச இலவண பற்பம் (வேறு)

கறியுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வெண்காரம், சீனக்காரம் இவை வகை -1-க்கு 1 பலம் (35 கிராம்), கர்ப்பூர சிலாசத்துக்கல் 5 பலம் (175 கிராம்), (இவைகளை முறைப்படி தூய்மை செய்து கொள்ளவும்.) குப்பைமேனிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட சரக்குகளைக் கல்வத்திற் போட்டு நுண்மையான தூளாகிற வரையில் அரைத்துப் பிறகு மேற்படி குப்பைமேனிச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து, (12 மணி) நான்கு சாமமரைத்து வில்லைதட்டி வெய்யிலிலுலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எட்டுப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 8 முதல் 16 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தேன், இஞ்சிச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு, வில்வவேர்க் குடிநீர், சீரகக் குடிநீர், சுக்குக் குடிநீர், இஞ்சிச் சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- குன்மம், மந்தாக்கினி நோய், செரியாமை நோய், வயிற்று நோய் ஆகியவைகள் தீரும். பசி மிக அதிகமாயுண்டாகும்.

186. பஞ்ச இலவணபற்பம் (வேறு)

கறியுப்பு, வெண்காரம், படிகாரம், இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு இவை வகை-1-க்கு 2 பலம் (70 கிராம்), பிரண்டைச் சாம்பல், அகத்திப்பழுப்புச் சாம்பல், எருக்கம் பழுப்புச்சாம்பல் கள்ளிச்சாம்பல், தாயுருவிச் சாம்பல், இவை வகை 1-க்கு 3 பலம் (105 கிராம்).

செய்முறை :-இவையெல்லாவற்றையும் நுண்மையாகப் பொடித்து ஒரு கலயத்திற்போட்டு வாய்க்குச்சில்லிட்டு ஏழு சீலை மண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழுபங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :-4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து:-இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சி * சர்பத்து எலுமிச்சம்பழச் சர்பத்து, மாதுளம்பழச் சர்பத்து, புளிப்பு மாதுளம் பழச் சர்பத்து, தேன் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :-எல்லா வகைக்குன்மங்களும் தீரும். குன்மக் கட்டி, வாயுக்கட்டி முதலிய கட்டி நோய்களும் தீரும்.

மருத்துணவு :-நோய் வன்மைக்கும் உடல் வன்மைக்கும் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

187. கறியுப்புச் சுண்ணம்

பெருங்கட்டிகளாயுள்ள கறியுப்பு 1 படி, கொடிக்கள்ளிச் சாறு செல்லத்தக்க அளவு, முள்ளிக்கீரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :-கறியுப்பை ஒரு கலயத்திற் போட்டு அது நான்கங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாகக் கொடிக்கள்ளிச் சாற்றை விட்டு மூன்று நாளூற வைத்து அதனைக் குகையிலிட்டுக் கொல்லுலையில் வைத்துப் பலமாக ஊத உப்பானது உருகி ஆடும். அச்சமயத்தில் அதனையெடுத்துக் கம்பியாக வார்த்து ஆறின பின்பெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி முள்ளிக் கீரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம (12 மணி) மரைத்து வில்லை

---

* சர்பத் = மணப்பாகு

செய்துலர்த்தி அகலிவிட்டு மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்க வேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கிச் சுண்ணும்புத் தெளிநீரில் ஐந்து புடமிட வேண்டும். ஆகக் கூடி பத்துப் புடமும் தீர்ந்தால் கடவுளின் அருளால் கடுங்காரச் சுண்ணமாகியிருக்கும். மஞ்சளுக்குச் சிவக்கும்.

குறிப்பு

இது செய்வதற்குச் சற்று கடினமாகத் தோன்றினும் உழைப்புக்கேற்ற பயன் இதனால் உண்டாகுமென்பதுறுதி; இது வாதம், வைத்தியம் என்னும் இரு முறைகளுக்குமாகும். பாடு பட்டாற் பலன் பெறலாமென்பது உண்மை வாக்காதலால் உழைப்பிற்குஅஞ்சாமல் விருப்பத்துடன் செய்பவர்களுக்கு எல்லா வித அனுகூலமும் உண்டாகும். சோம்பற் சுபாவமுடையவர் களுக்கு எந்த வித பாகமும் பயனிலா உழைப்பாகவே முடியும். சோம்பலில்லாமற் சுறுசுறுப்புடன் பாடு படுபவர்களுக்காக இப் பாகம் எழுதப்பட்டதே தவிர மற்றவர்களுக்காகஎழுதப்படவில்லை.

அளவு :--1 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :-இது எல்லா வகை நோய்களுக்குங் கொடுக்கத் தக்க மருந்தாகையால் அந்தந்த நோய்களுக்குத் தகுந்தது போல் சமயோசிதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

தீரும்நோய்கள் :-குன்ம நோய்கள், வாயு நோய்கள், மேக நோய்கள், ஏப்பம், வாந்தி, செரியாமை, முதலிய எல்லா நோய் களும் தீரும்.

188. கறியுப்புச் செந்தூரம்

பெருங்கட்டிகளாயுள்ள கறியுப்பு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{3}{4}$ கிராம்), நாமக் கோவை இலைசாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :-உப்பை ஒரு கலயத்திற் போட்டு அது இரண்டங் குலம் ஆழ்ந்திருக்கும் படியாக மேற்படி நாமக்கோவை இலைச் சாற்றை விட்டுப் பத்து நாளூறவைத்துப் பதினோராம் நாள் எடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம (12 மணி) மரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின்

னெடுக்கச் செந்தூரமாகி இருக்கும். இந்தச் செந்தூரத்தில் கசிவுவராது.

அளவு ;—2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :-தேன், இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, எலுமிச்சம்பழ சர்பத்து முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- குன்மநோய், செரியாமைநோய், மந்தாக்கினி நோய், வயிற்றுப் பொருமல், வயிற்றுப்பிசம் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :-நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

189. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

(அ)கறியுப்பு 2 பலம் (70 கிராம்), மூங்கில் குருத்துச்சாறு $\frac{1}{4}$ படி, முலைப்பால் 2 பலம் (70 கிராம்).

(ஆ) தூய்மை செய்த இரசம், கெந்தகம்,லிங்கம், மனோசிலை, வீரம், பூரம், இவை வகைக்கு 12 குன்றிமணிஎடை. எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :-மேற்படி கறியுப்பை மேற்படி மூங்கில் குருத்துச் சாற்றிற் கரைத்து, அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் காய்ச்சி உப்பாக்கி,எடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலரத்தி அகலிலிட்டு மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

இந்தப் பற்பம் $\frac{1}{2}$, பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இதனுடன் (ஆ) வில் சொல்லப்பட்டிருக்கிற சரக்குகளைச் சேர்த்து கல்வத்திற் போட்டுப் பொடித்து மேற்படி எலும்மிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்திச் சிறு அகலிலிட்டு மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி கவசத்தின் ஏழுபங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின் எடுக்கச் செந்தூரமாகியிருக்கும்.

அளவு ;-1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :-வில்வ வேர்க் குடிநீர், சீரகக்குடி நீர், சுக்குக் குடிநீர், தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :-குன்ம நோய்,உதரநோய்,வயிற்றுப்பொருமல், வயிற்றுப்பிசம், மந்தாகினி நோய், ஆகியவைகள் தீரும். இன்னும் காய்ச்சல் நோய், சன்னி நோய், வாயு நோய் முதலிய அநேக நோய்களுக்கும் உதவும்.

மருத்துணவு:- உடல் வன்மை, நோய்வன்மை, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது. வாயு பதார்த்தங்கள், கடினமாக சீரணமாகும் பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்க வேண்டியது.

190. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு -1பலம்(35 கிராம்) மஞ்சட்கடுக்காய்த்தோலை இடித்து துணியில் வடிகட்டியத் தூள் 7 வராகன் எடை ($24\frac{1}{2}$ கிராம்) (இதனைத் தனித்தனி ஒவ்வொரு வராகன் எடையாகக் கட்டி வைத்துக்கொள்ள வேண்டும்). சோற்றுக்கற்றுழம் பால் செல்லத்தக்க அளவு, உலர்ந்த லிங்கம் 2 வராகன் எடை (7 கிராம்)

செய்முறை :-மேற்படியுப்பைக் கல்வத்திற்போட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற ஒரு வராகன் எடை கடுக்காய்த் தூளையும் சேர்த்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு மணி நேரம் அரைத்துவில்லை செய்து காயவைத்து அகலில்இட்டு மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தில் நான்கு பங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்பு எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு முன்போல் ஒரு வராகன் எடை கடுக்காய்த்தூளையும் சேர்த்து முன்போல் சோற்றுக்கற்றுழம் பாலைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு மணி நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி முன்போல் அகலிலிட்டு முன்போல் புடமிடவும். இவ்விதமே மடக்கி மடக்கி ஏழுபுடமிட்டெடுத்து உலர்ந்த லிங்கத்தையும் சேர்த்துப் பொடித்து மேற்படி சோற்றுக்கற்றுழம் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

அளவு :-ஒரு அரிசி எடை,

துணைமருந்தும், பயன்படுத்தலும் :-ஒரு வராகன் எடை பசு வெண்ணெயில் மேற்படி செந்தூரத்தை மேற்கண்ட அளவுப்படி கலந்துண்ண சுவாசகாசம், இருமல் நோய், இரைப்பு, பெருமூச்சு, தொண்டையடைப்பு முதலிய கப சம்பந்தமான நோய்கள் தீரும்.

தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்கண்ட செந்தூரத்தை மேற்கண்ட அளவுப்படி கலந்துண்ண சீதள நோய்கள், சீதள சன்னி, தோடங்கள் முதலியவை தீரும்.

குறிப்பு.

இது வாத முறைகளுக்கும் ஆகுமாகையால் தெரிந்தவர்களிடம் இதனை உபயோகிக்கும் விதத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

மருத்துணவு :-நோய்க்கும் உடல் வலிமைக்கும் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

191. கறியுப்புச் செந்தூரம்

கறியுப்பு 5 பலம் (175 கிராம்), மான்செவிக்கள்ளி இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :-மேற்படி உப்பைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து மூன்றுமணி நேரம் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி சிறு மண் தாலத்தில் வைத்து மேலும், மூடி ஐந்து சீலைமண் செல்துலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் போல் மான் செவியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று மணி நேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி முன் போலவே சீலைமண் செய்து முன்போற் புடமிடவும். இவ்விதமே மேற்படி சாற்றால் மடக்கி மடக்கி பத்துப்புடமிட்டு, ஆடுதின்னாப்பாளைச் சாற்றால் முன்போல் இரண்டு மூன்று புடமிட உப்பானது நன்றாகச் சிவந்து செந்தூரமாகிவிடும்.

அளவு :—1-முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :-தேன், நெய்.

திரும்நோய்கள் ;-அக்கினி மந்தம், குன்மநோய், உதர நோய் முதலியவைகள் தீரும். இதனால் செம்பும் தூய்மையாகும்.

192. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு 1 பலம் (35 கிராம்), இதனை ஒரு கலயத்திற் போட்டு இதில் பத்துப் பலம் காட்டு முள்ளங்கியிலைச் சாற்றை விட்டுக் கொள்ளுகையில் வைத்து துருத்தியாலூத உப்பானது உருகிஆடும். அதனைக் கம்பியாக வார்த்து ஆறின பின்பு கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம் பழுப்புச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எட்டுப்பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு மூன் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்தரைத்து மூன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட்டால் உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு :-1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :-தேன், நெய், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர் சோம்புக் குடிநீர், ஓமக்குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :-வாயு நோய்கள், சூலை நோய்கள் குன்ம நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :-நோயின்பலம், உடல்பலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

193. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு. (இவை பெருங்கட்டிகளாக இருக்க வேண்டியது.) அதிகாலையில் பிசுபிசுப்புள்ள எருக்கங் கொழுந்தைக் கொண்டுவந்து அன்னியர் காணுமல் மைபோல் அரைத்து மெல்லிய துணியில்வைத்துச்சாறுபிழிந்து முன்னுப்பைக் கல்வத்திலிட்டு இந்தச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து நன்றுக உலர்ந்த பின்பு

ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் சித்தப்படுத்தின, எருக்கங் கொழுந்துச் சாற்றைவிட்டு முன்போல் அரைத்து முன் போல்புடமிடவும். இவ்விதம் மடக்கிமடக்கி மொத்தம் ஐந்து புடம் போட வேண்டும். புடத்திற்குப் புடம் உப்பானது சிவந்து வரும். ஐந்தாவது புடத்தில் பூரணமாகச் சிவந்து போகும். அப்படியாகாமல் குறைவாயிருந்தால் நன்றாகச் சிவக்கிறவரையில் இன்னும் இரண்டொரு புடம் போட்டுக்கொள்ள வேண்டும்.

அளவு :-2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும்நோய்களும்:-மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இம்மூன்றையும் தனித்தனியாக இடித்து துணியில் வடிகட்டியத் தூள் வகைக்குச் சமனெடை. இம்மூன்றையும் சேர்த்துக் கொள்ளவும். இதற்கு முக்கடுகுத்தூள் எனப்பெயர். இந்தச் சூரணம் $\frac{1}{2}$ வராகன்எடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வராகனெடை ($3\frac{1}{4}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டத் தூளை அளவுப்படி கலந்துண்ண எட்டுவகைக் குன்ம நோய்களும் தீரும்.

அரிசித் திப்பிலியை வறுத்திடித்த தூள் $\frac{1}{2}$ வராகன்எடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படிச்செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண தமரகவாயு முதலியவைகள் குணமாகும்.

மிளகை வறுத்திடித்தத் தூள் $\frac{1}{2}$ வராகன்எடை ($1\frac{3}{4}$ கிராம்) தேன் வராகனெடை 1. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண குண்டலி வாயுவகைகள் தீரும்.

தேன் 1 வராகன்எடை இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படிசேர்த்துண்ண எண்பது வகைவாத நோய்களும் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டை 1 வராகன்எடை இதனை ஒரு ஆழாக்கு நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கின குடிநீருடன் ஒரு வராகன்எடை தேனையும் சேர்த்துக் கலந்து உட்கொள்ள, தோடவகைகள், சன்னி வகைகள், சுர வகைகள், தாட்பட்ட சுரங்கள் ஆகியவைகள் தீரும்.

ஆற்றுத் தும்மட்டிக்காயைக் கரிநெருப்பில் போட்டு வேக வைத்து இடித்துப் பிழிந்தசாறு 1 வராகன்எடை (3½ கிராம்) தேன் 2வராகன்எடை (7கிராம்)இவ்விரண்டையும்சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து உண்ண பெருவயிறு வகைகள், மகோதர வகைள், வல்லிக்கட்டி வகைகள் ஆகிய வைகள் தீரும்.

மேற்கண்ட முக்கடுகுச்சூரணம் ½ வராகன் எடை (1¾ கிராம்), கையாந்தகரைச்சாறு 1½ வராகனெடை, (5¼ கிராம்)இவையெல்லா வற்றையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண பாண்டு நோய் வகைகள், சோகைவகைகள் ஊது காமாலை முதலிய காமாலை வகைகள், மந்தாக்கினி வகைகள் ஆகியவைகள் தீரும.

இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணை மருந்து களுடன் உபயோகிக்க அநேக நோய்கள் தீரும்.

194. லவண வீரச் செந்தூரம்.

மேற்படி லவண செந்தூரம் 1 வராகன் எடை -(3½ கிராம்) கட்டின வீரம் 1வராகன்எடை- (3½ கிராம்), (வீரக்கட்டு வகைகள் நமது இரசவாத சிந்தாமணியில் பல முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன) இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சொல்லி இருக்கிறபடி சித்தப்படுத்தின எருக்கங் கொழுந்துச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஐந்து சீலமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்குஎடைவறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கச் செந்தூரமாகியிருக்கும்.

பயன் படுத்துதல்:-வெள்ளி7 வராகன்எடை (24½ கிராம்), தங்கம் 1வராகன்எடை(3½ கிராம்), செம்பு 3வராகன் எடை (10½ கிராம்)இம் மூன்றையும்சேர்த்துருக்கிச் செவ்வையாகக் கண்விட்டாடும்போது இரண்டு குன்றிமணி எடை மேற்படி இலவண வீரச் செந்தூரத் தைக் கொடுத்துநன்ருகவுருக்கி உமிப்போட்டு எடுத்து ஆறின பின்பு அதனை நான்கு துண்டுகளாக வெட்டி அதனை மறுபடியும் உருக்கவேண்டியது. இவவிதம் நறுக்கி, நறுக்கி இரண்டு மூன்று தடவைகள் உருக்குவதினுல் எல்லாம் ஏகமாகி ஊட்டம், வர்ணம்முதலியவை உண்டாகிவிடும். எல்லா வகைச் சோதனைக்கும் நிற்கும்.

195. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, பேயன் வாழைப்பூச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- உப்பைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து மேல் ஓடு மூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டெடுத்து மறுபடியும் முன்போல் பேயன் வாழைப் பூச்சாற்றை விட்டரைத்து முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துப் புடமிட உப்பானது கசிவற்றுச் சிவந்துச் செந்தூரமாகும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சுக்குக் குடிநீர், பொதினா இலைச்சாறு, பொதினா சர்பத் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- குன்மம், அக்கினி மந்தம், சூசிகா வாயு வெப்ப வாயு, வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல் முதலிய இரைப்பை சம்பந்தமான நோய்கள் தீரும்.

196. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, புங்கம் வேரை மெல்லியதாகச் சீவின புறணியை அரைத்துப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு (இது புங்கம் பாலெனப்படும்).

செய்முறை :- மேற்படி உப்பைக் கல்வத்திலிட்டு மேற் சொல்லி இருக்கின்றபடி பிழிந்தெடுத்த புங்கம் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம மரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியில் புடமிடவும். ஆறின பின்னெடுத்து கல்வத்திலிட்டு மேற் சொன்னபடி சித்தப் படுத்தின புங்கம் வேர்ப் பாலை முன் போல் விட்டு அரைத்து முன்போல் புடமிட வேண்டும் இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட உப்பானது கட்டுப் பட்டுச் செந்தூரமாகும்.

அளவு துணைமருந்து, பயன் படுத்துதல் மேற் சொன்னவைகளேயாம்.

197. கறியுப்பு செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, நல்ல வேளைச் சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்படி பாகத்தில் சொல்லியிருக்கின்றபடியே மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நந்நான்கு சாமம் அரைத்து மேற் கண்டபடியே ஏழு புடமிடச் செந்தூரமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் முந்தின முறைப்படியேயாம்.

198. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, தவசி முருங்கை யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட பாகப்படியே ஏழு புடமிடச் செந்தூரமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற் சொல்லப் பட்டிருப்பவைகளேயாம்.

199. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, ஆகாசத்தாமரை யிலைச்சாறு செல்லத்தக்க அளவு. (ஆகாசத் தாமரையின் வேர், அழுகின இலை இவைகளை நீக்கிப் பிட்டவித்துச்சாறு பிழிந்து கொள்ள வேண்டும்.)

செய்முறை :- மேற்கண்ட பாகப்படியே ஏழு புடமிடச் செந்தூரமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் முதலியவைகளெல்லாம் மேற் சொல்லப் பட்டிருப்பவைகளேயாம்.

200. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, சுவற்று முள்ளங்கிச்சாறு தேவையான அளவு.

செய்முறை :- மேற்கண்ட பாகப்படியே செய்து கொள்ளச் செந்தூரமாம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் முன் சொன்ன படியேயாம்.

201. கறியுப்புக் கட்டு.

கறியுப்பு 4 பலம் (140 கிராம்), வெடியுப்பு 1, பலம் (35 கிராம்) உத்தா மணிச்சாறு, குப்பைமேனிச்சாறு, இவை வகைக்கு 10 பலம்- (350 கிராம்) முட்டை வெள்ளையம்பிலி-1

செய்முறை :- மேற்கண்டவைகளெல்லாம் கொள்ளும்படியான ஒரு கலயத்தில் அரைப்பலம் ($17\frac{1}{2}$ கிராம்) வெடியுப்பைத் தூள் செய்து போட்டுப் பரப்பி அதன் மேல் கறியுப்பைப் போட்டு அதன் மேல் மறு அரைப்பலம் ($17\frac{1}{2}$ கிராம்) வெடியுப்பைத் தூள் செய்து போட்டு அதன் மேல் மேற்படி யிருவகைச் சாறுகளையும் விட்டு அதன் மேல் வெள்ளையம்புலியை விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுத்துப் பொடித்து பத்திரப்படுத்தவும்.

அளவு :- 4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து :- சுக்குக் குடிநீர், இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச் சாறு, வில்வாதி இளகம், வில்வவேர்க் குடிநீர், பஞ்சதீபாக்கினித் தூள், அஷ்ட தீபாக்கினித்தூள், தேன், நெய், பழையவெல்லம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- குன்ம நோய், வயிற்றுவலி, புளித்த ஏப்பம் சூதகவாயு, வெப்பக் கழிச்சல், வேறு வாயு வகைகள் ஆகிய வைகள் தீரும்.

202. கறியுப்புக் கட்டு (வேறு)

(அ) கடல் நுரை 2 பலம்-(70 கிராம்), சீனக்காரம் 1 பலம்- (35 கிராம்), கறியுப்பு 1 பலம் (35 கிராம்), கொரட்டைப் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

(ஆ) கடல்நுரை, கறியுப்பு, இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- (அ) வில் முன்னுள்ள இரண்டு சரக்குகளையும் கள்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கொரட்டைப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு மணி நேரமரைத்து இரண்டு அடையாகச் செய்து ஒரு அடையில் (அ) விலுள்ள கறியுப்பைப் பொதிந்து அதன் மேல் மறு அடையை வைத்து இரண்டு அடைகளின் ஓரங்களும் பொருந்தும் படியாகச் செய்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலமண் செய்துலர்த்திக் கசவத்தின் ஏழு பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கொள்ளவும். இதனை முன் போலவே இன்னொரு புடமிட்டெடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு புடம் தீர்ந்த உப்பு ஒரு பங்கு. (ஆ)விலுள்ள கடல் நுரை ஒரு பங்கு, கறியுப்பு ஒரு பங்கு ஆகிய இவ்விரண்டையும் முன்போல் கொறட்டைப் பழச்சாற்றை விட்டு முன்போலரைத்து முன்போல் இரண்டடை செய்து ஒரு அடையில் முன் புடமிட்டுத் தீர்ந்திருக்கின்ற உப்பை வைத்து மற்றொரு அடையை மேலோடு மூடி அடைகளின் இரண்டு வாய்களும் பொருந்தும் படியாகச் செய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலமண் செய்து முன்போல் புடமிடவும். இவ்விதமே மறு புடமும் போட்டெடுக்க உப்பானது கட்டுப்பட்டிருக்கும். இதனைக் கரியில் வைத்துருக்க உருகிக் கண்விட்டாடும். இது வாதம், வைத்தியம் ஆகிய இரண்டிற்கும் உபயோகமாம்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் முதலியவைகளெல்லாம் முந்தின முறைகளில் சொல்லியிருக்கின்ற படியேயாம்.

வாத சம்பந்தமான முறைகள் பின்னெழுதப்படும்.

203. பஞ்சலவணக் கட்டு.

கறியுப்பு, வெடியுப்பு, உளையலுப்பு, கருப்புப்பு, இந்துப்பு இவை வகைக்கு 1 பலம்- (35 கிராம்), குப்பைமேனிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி ஐந்துப்புகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டியுலர்த்திக் ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 2 முதல் 10 குன்றிமணி எடை.

துணைமருந்தும். தீரும்நோய்களும்:- உலர்த்தின முருங்கைப்பூச் சூரணம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), பசுவின் நெய் -1வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி கட்டின உப்பை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள கால்திமிரு, கைத்திமிரு, உடல் திமிரு ஆகிய திமிர்நோய்கள் தீரும்.

முருங்கைப்பட்டைச் சாறு $1\frac{1}{2}$வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி அளவுப்படி கலந்துண்ண வாயு நோய்கள் தீரும்.

முருங்கைப் பட்டைச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்) தேங்காயின் தனிப்பால் 2வராகன் எடை (7கிராம்]இவ்விரண்டையும்கலந்து மேற்கண்ட உப்பை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள மலட்டு வலி, சூதகவலி ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :-உடல் நிலை, நோயின் நிலை முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திக் கொள்ளவும்.

204, ஆறுப்புச் செயநீர்.

கறியுப்பு, வெடியுப்பு, நவச்சாரம், பூநீறு, அமுரியுப்பு, ‡ முள்ளியுப்பு, இவை வகைக்குச் சமனெடை.

இவை எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துப் பொடித்து ஒரு சாம நேரம் அரைத்துப் பனியில் வைத்துப் பாகப்படி செயநீரெடுத்து புட்டியில் பத்திரப்படுத்க வேண்டும். பனியில்லாத காலங்களில் பீங்கான் பாத்திரத்திற் போட்டு பீங்கான் தாலத்தால் மூடிச் சீலை மண் செய்து சதுப்பான நிலத்தில் சுமார் இருபது நாள் புதைத்து வைக்க செயநீராகிவிடும். மேற்கண்ட இரு வகைகளுள் ஒரு வகையாக சமயோசிதம் போல சித்தப்படுத்திக்கொள்ளவும்.

அளவு :-5 துளிமுதல் 10-துளி வரையில்.

---

* அமுரியுப்பு :-வெள்ளாட்டு மூத்திரத்தை வெய்யிலில் வைத்து உலர்த்தி உப்பாக்கிக் கொள்வதே அமுரியுப்பாம்.

‡ முள்ளிக்கீரையை உலர்த்தி எரித்துச் சாம்பலாக்கிக் கரைத்துத் தெளிவெடுத்துக் காய்ச்சி உப்பாக்கிக் கொள்வதே முள்ளியுப்பாம்,

துணைமருந்து :-தேன், வெந்நீர், சுக்குக்குடிநீர், சோம்புத்தீநீர், ஓமத்தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய் :-செரியாமை, இரைப்பையிற் கபம், சேர்ந்துண்டாகும்வயிற்று நோய், செரியாமைவயிற்றுநோய், வாயுசம்பந்தத்தினலுண்டாகும் வயிற்று நோய் முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு

மேற்படி செயநீர் மூலமாக எல்லாச் சரக்குகளையும் பற்பமாகச் செய்து கொள்ளலாம். அதற்கு உதாரணமாக ஒரு முறையை இங்கு எழுதுவோம்

தூய்மை செய்தவீரம் $2\frac{1}{2}$வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) இதனைகல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் இட்டு மேல் அகல் மூடி ஏழு சீலைமண் செய்து கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு :-$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணியெடை.

துணை மருந்து :-தேன், இஞ்சிசுரசம், கண்டங்கத்திரிச்சுரசம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:-சன்னி நோய்கள், தோடங்கள், சைத்தியங்கள், வாத நோய்கள், இசிவு, வலிப்பு, குன்மம், முதலிய நோய்கள் தீரும்.

மேற்கண்ட விதமாகவே இரசகற்பூரம், கெந்தகம், தாளகம் முதலிய நெருப்பிற்கு ஓடுஞ் சரக்குகளைப் பற்பமாகச் செய்து அந்தந்தச் சரக்குகளுக்குத் தகுந்தது போல் அந்தந்த நோய்களுக்கு உபயோகிக்க குணமுண்டாகும்.

205. மகா திராவகம்

கறியுப்பு 1 பலம். வெடியுப்பு, வலையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, சத்திச்சாரம், நவச்சாரம், சீனக்காரம்இவை வகைக்கு 4 பலம் (140 கிராம்) நெல்லிக்காய்க் கெந்தகம், சவுக்காரம், எள்ளுத் தட்டையை யெரித்த சாம்பல், நாயுருவிச் சாம்பல், பால் துத்தம், இவை வகைக்குப் 1 பலம்-(35 கிராம்), ஒருபடி உவர்மண்ணில்

நான்குபடி நீரை விட்டுக் கரைத்து மூன்று நாள் வைத்து எடுத்த தெளிநீர் செல்லத் தக்க அளவு.

செய்முறை :-மேற்கண்ட சரக்குகளை எல்லாம் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சேர்த்து அறைத்து மேற்படி உவர்மண் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்துஇரண்டு சாமநேரம் அரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்த வேண்டும். ஈரமில்லாமல் நன்ருக உலர்ந்த பின்பு மறுபடியுங் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் உவர் மண் தெளிநீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து உலர்த்த வேண்டும். இவ்விதம் ஏழு தடவைகள் அரைத்தரைத்து உலர்த்தி உலர்த்தி எடுத்துப் பொடித்து ஒரு பானையிற் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்து பானையின் விலாப் பக்கத்தில் இரும்புக்குழாயைச் சொருகிச் சீலை செய்து உலர்த்தி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துத் திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டும். இந்தத் திராவகத்தை புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :-4 முதல் 7 துளிகள்,

துணைமருந்து :-வெந்நீர், சோம்புத் தீநீர், சோம்புக்குடிநீர் சுக்குக் குடிநீர், பூண்டு தைலம், முள்ளங்கிக் கிழங்குச் சாறு, வெங் காயச்சாறு முதலியவைகளாம். நோயின் பலத்திற்குத் தகுந்த படி கால், அரை, ஒரு மண்டலம் உபயோகிக்க வேண்டும்.

தீரும் நோய்கள்:-எட்டு வகைக்குன்மநோய்கள்,வயிற்றுச்சூலை நோய்கள், செரியாமை நோய், மந்தாக்கினி நோய், நீர்க்கட்டு, பாண்டு நோய், மகோதரம், பீலிகை, வயிற்றுக் கட்டிகள் முதலிய நோய்கள் தீரும். சிலருக்கு மதுமேகத்திற்கும் கொடுத்துக் குணங் காணப்பட்டிருக்கிறது. குட்டம் பதினெட்டிற்கும் மேலே பூசி வருவதினுற் குணமுண்டாகும். நச்சுக்கடிகள், பூரான்கடிகள் ஆகியவைகளுக்கு மேலே மூன்று நாள் பூசுவதினுற் குண முண்டாகும்.

இச்சாபத்தியம் :-உப்பு, புளி ஆகிய இரண்டையும் நீக்கிப் பசுவின் பால், சர்க்கரை ஆகியவைகளைச் சாதத்துடன் சேர்த்த பால்சோறு சாப்பிட வேண்டும். நோய் இலகுவாக இருந் தால் இச்சாபத்தியமாக வைக்கலாம்.

206. இலவணத் திராவகம்.

கறியுப்பு 10 பலம் (350 கிராம்), இந்துப்பு, சவுட்டுப்பு, வெடி யுப்பு, வளையலுப்பு, பால் சாம்பிராணி, செய்யூறுப்பு அல்லது

கல்லுப்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்)சீனக்காரம், நெல்லிக் காய்க் கெந்தகம் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்).

செய்முறை :-இவை எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து ஒரு சாமநேரம் அரைத்து நன்றுக கலந்த பின்பு வாலை யிலிட்டுப் பாகப்படி திராவக மிறக்கிக்கொள்ள வேண்டும்.

அளவு ;-பெரியவர்களுக்கு 3 முதல் 4 துளிகள் சிறுவர்களுக்கு 1 முதல் 2 துளி.

துணை மருந்து :-குளிர்ந்த நீர், சோம்புத் தீநீர், ஓமத்தீநீர், சர்க்கரை முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :- வயிற்றுநோய், சூதகவாயு, சூதகக்கட்டி, அக்கிரம சூதகம், நீர்கட்டு முதலியவை தீரும்.

மருத்துணவு :-நோய் வலிமை, உடல்வலிமை, ஆகியவை களுக்குத்தகுந்தடி ஏற்படுத்தவும்.

207. உதரநோய் நிவாரண திராவகம்

கறியுப்பு 40பலம் (1400 கிராம்), உழமண் 40பலம் (1400 கிராம்), கற்சுண்ணம் 40பலம் (1400கிராம்), யானை நெருஞ்சியிலை 20பலம் (700 கிராம்), சங்கம் வேர்பட்டை20 பலம்:(700 கிராம்), கிணற்று நீர் 4 படி.

செய்முறை :-முன் சொன்ன மூன்று சரக்குகளையும் சேர்த்து அரைத்து வாலையிற் போட்டு நீரைவிட்டுக் கலக்கி மற்ற இரண்டு மூலிகைகளையும் அதிற்போட்டு பாகப்படி திராவகமிறக்கிக் கொள்ளவும்.

அளவு :-2முதல்4 வராகன்எடை.

துணை மருந்து :-வெந்நீர், குளிர்ந்தநீர், சோம்புத்தீநீர், சுக்குக் குடிநீர், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- வயிற்றுவலி, குன்மநோய், அசீரணநோய் வெட்டை சம்பந்தமான நோய், சூதக சம்பந்தமான நோய் ஆகியவைகள் தீரும்.

208. விஷபேதி திராவகம்

செய்யூறுப்பு, அல்லது கறியுப்பு 12 பங்கு, வெடியுப்பு 12 பங்கு, படிகாரம் 11 பங்கு, நவச்சாரம் 10 பங்கு, வளையலுப்பு 10 பங்கு, பிடாலவணம் 10 பங்கு, வெண்காரம் $3\frac{1}{4}$ பங்கு, அட்டுப்பு 1 பங்கு.

செய்முறை :-இவை எல்லாவற்றையுங் கல்வத்திற் பொடித்துச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்துப் பீங்கான் வாலையிலிட்டுப் பாகப்படி திராவகமிறக்கிக் கொள்ளவும்.

அளவு :-2 முதல் 5 துளிகள்.

துணைமருந்து :-குளிர்ந்தநீர், தேன், சர்க்கரை, சுக்குக்குடிநீர், சோம்புத்தீநீர், ஓமத்தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:– நச்சுக்கழிச்சலில் எந்த நிலைமையிலும் இதனை உபயோகிக்கலாம். இதனை இரண்டொரு தடவை உபயோகித்த உடனே அந்த நோய்க்குண்டான தீயக் குணங்களெல்லாம் நீங்கி வெகு சீக்கிரத்தில் நல்ல குணத்தைக் காண்பிக்கிறது. இந்த நோயில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து குணங் காண்பது நிச்சயம். நோய் கண்டவுடனே காலதாமதமின்றி இதனை ஆரம்பித்து விட்டால் தப்பாமல் குணத்தைத் தரும்.

இன்னும் செரியாமைக் கழிச்சல், சூட்டுக்கழிச்சல், குன்மம், சூதகவலி, அக்கிரம சூதகம், வாயுவுநோய்கள், கட்டிகள், சுரக் கட்டி முதலியவைகளும் தீரும். இது அடியேனுக்கும் நமது அன்பர்களுள் பலருக்கும் அனேகத்தடவை அனுபவப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மருத்துவமும் இதனைச் சித்கப் படுத்தி வைத்திருந்தால் உற்ற சமயத்திலுதவியாகும். சிற்றூர் முதலிய கிராமங்களிலுள்ள பெருஞ் செல்வர்கள் இதனைச் சித்தப்படுத்தி வைத்திருந்தால் தம் குடும்பத்தார்களுக்கும், தம்மைச் சார்ந்திருக்கும் குடிமக்களுக்கும், மற்ற ஏழை மக்களுக்கும் பேருதவியாயிருக்கும். அருள் மிகுந்த பெரியோர்கள் இதனைச் சித்தப்படுத்தி பளிங்கு குப்பிகளில் அடைத்து தருமமாக ஏழை மக்களுக்குக் கொடுப்பதால் அதிக புண்ணியமும் கீர்த்தியுமுண்டாகும். இதற்கேற்படுஞ் செலவோ மிகவும் குறைவு. இதனாலுண்டாகும் பயனோ அதிகம்.

209 இல்வணக் குழம்பு

கறியுப்பு5பலம் (175கிராம்) அப்பளக்காரம், சவுக்காரம், வெண்காரம், நவச்சாரம், கற்பூரம், வெடியுப்பு, கடல் நுரை, சீனக்காரம்

பெருங்காயம், இந்துப்பு, இவை வகைக்கு ½ பலம், (17½ கிராம்) சிறு பிள்ளைகளின் சிறுநீர் அல்லது பசுவின் நீர் 2 படி, பனைவெல்லம் 10 பலம், (350 கிராம்).

செய்முறை :-மேற்படி நீரில் வெல்லத்தைக் கரைத்து உப்புகளையும் மற்ற சரக்குகளையும் நுண்மையாகப் பொடித்து அதிற்போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:-1முதல்1½ வராகனெடை. காலை,மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம். வலிமைக்குத் தகுந்தபடி கால், அரை, முக்கால், ஒரு மண்டலம் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள் :-மகோதரம், பெருவயிறு, பாண்டு நோய்கள், காமாலை நோய்கள், கவுசைக் கட்டிகள், பீலிகைக் கட்டிகள், அகட்டுவாயு, கற்பாண்டு முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு ;-நோய் வலிமைக்குத் தகுந்தபடி புளி, புகை, முதலியவைகளை நீக்கிவைக்கவும்.

குறிப்பு

சிறுநீரைச்சேர்க்க விருப்பமில்லாதவர்கள் கடல்நீரை, அல்லது, அதிக உவர்ப்பான கிணற்று நீரைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இன்னும் மேற்படி பாகத்துடன் ஒரு படி ஆற்றுத்தும் மட்டிக் காய்ச் சாற்றையும், இரண்டு பப்பாளிப் பழத்தையும் சேர்த்துச் சித்தப் படுத்திக் கொண்டால் மேற்கண்டநோய்கள் எத்தனை நாட் பட்டதாயினும் தீர்ந்துவிடும்.

மேற்படி மருந்தை கரிசலிற் சொல்லி இருக்கிற பாண்டுக் குடி நீரில் சேர்த்து உட்கொள்ள மேற்படி நோய்கள், நலப்படா நோய்கள்,நோவுள்ள நோய்கள் முதலிய எல்லா நோய்களும் தீரும்.

210, இலவணுதிக் குழம்பு

கறியுப்பு 2 பலம் (70கிராம்) அப்பளக்காரம், நவச்சாரம், சவுக் காரம், வெடிப்பு, வளையலுப்பு, இந்துப்பு, வெண்காரம்,சூடன் இவை வகைக்கு ½ பலம்-(17½கிராம்), அமுரி 1படி, பனைவெல்லம் 10 பலம் (350கிராம்).

செய்முறை :- மேற்படி அமுரியில் பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து பாகுபதத்தில் மேற்படி சரக்குகளை

யெல்லாம் நுண்மையாகப் பொடித்துத் தூவிச் செவ்வையாகக் கிண்டிக் கிளறிப் பதத்திலிறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :-1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை, காலை மாலை இரண்டு வேளையும் பத்து நாட்கள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :- அகட்டு வாயு, வயிற்றில் உண்டாகும் கட்டிகள், குன்ம நோய்கள், வயிற்றுவலி முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :-நோய்க்குத் தகுந்தபடி பத்தியமேற் படுத்தவும்.

211. கறியுப்பு மெழுகு

கறியுப்பு 10 பலம் (350கிராம்), எருக்கம் பழுப்புச்சாறு $\frac{3}{4}$ படி.

செய்முறை :- மேற்படி உப்பை ஒரு சட்டியில் போட்டு அடுப் பேற்றிச் சிறுதீயாக எரித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகச் சுருக்குக் கொடுக்க வேண்டும். இவ்விதம் நான்கு சாமம் (12மணி), முறைப்படிச் சுருக்குக் கொடுத்துக் கொண்டு வந்தால் மேற்படி உப்பானது மெழுகாகி விடும். இதனைப் பீங்கான் பாத்திரத்திலெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :-$\frac{1}{2}$ முதல் 1 வராகன் எடை.

துணைமருந்து :—சர்க்கரை, பனைவெல்லம், சுக்குக் குடிநீர் சோம்புக் குடிநீர், சோம்புத் தீநீர், ஓமத் தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- வயிற்றுவலி, சூதகவலி, அக்கிரமசூலை, குன்மம், செரியாமை, சூலை நோய் முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :-நோய் வலிமை, உடல் வலிமை முதலியவை களுக்குத் தகுந்த விதமாகவும், சமயோசிதமாகவும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாம்.

212. கறியுப்புப் பற்பம்

கறியுப்பு 1 பலம் (35 கிராம்), முட்டைக்காளுன் இலைச்சாறு செல்லத்தக்க அளவு, தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு செல்லத் தக்க அளவு, அத்திப்பால் செல்லத்தக்க அளவு, கொட்டி இலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :-இலவணத்தைக் கல்வத்திலிட்டு முட்டைக் காளுன் இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து சீலை மண்கள் செய்து உலர்த்தி 64 பலம் (2240 கிராம்), வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுத்துக் கொள்ளவும்.

பிறகு அதனைக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து 54 பலம் (1890 கிராம்) வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுத்துக் கொள்ளவும்.

பின்பு இதனை எடுத்துக் கல்வத்திலிட்டு அத்திப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி 44 பலம் (1540 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கொள்ளவும்.

பிறகு இதனை எடுத்துக் கல்வத்தில் இட்டுக் கொட்டி இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி 32 பலம் (1120 கிராம்) வறட்டியிற் புடமிட்டு ஆறின பின் எடுக்கக் உயர்ந்த பற்பமாயிருக்கும்.

அளவு :-1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும்நோய்களும் :- இதனை வெந்நீரில் கலந்து உட்கொள்ள தலையிடிப்பு, உன்மத்தம், பெரும்பாடு, மகோதரச் சூலை, மூர்ச்சை முதலியவைகள் தீரும்.

மிளகுத்தூள், கடுகுத்தூள் இவை வகைக்குச் சமன் எடை இவ் விரண்டையும் கலந்து இக்கலவையில் கால் வராகன் எடை எடுத்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து வெந்நீரில் குழைத்து உட் கொள்ள, வல்லைக்கட்டி, கக்கல், சுவாசம், இருமல், பாண்டு. விக்கல் முதலியவைகள் தீரும்.

தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள பாரிசவாயு, கீல்வாயு, உப்புசம், இரைப்பு முதலியவைகள் தீரும்.

திப்பிலியை வறுத்திடித்த தூள் $\frac{1}{4}$ வராகன்எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண நேத்திரவாயு, மாலைக்கண், புழுவெட்டு புளிச்சக்கண், சன்னி, பித்தகாரகம், சயம், ஆகியவைகள் தீரும்.

புளித்த பசுவின் மோர் 1 பலம் (35 கிராம்), இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண கால் கை எரிவு, உடலெரிவு, வாய்நீர்ப்பெருக்கு, வெள்ளொழுக்கு, கண்புகைச்சல், வறட்சொறி, சிரங்கு, செவ்வாப்பு, கரப்பான். வெறித்தேமல், தவளைச்சொறி, மருக்கட்டி, தினவு, பெருவாரிக்காய்ச்சல், மூலம், பீனிசம், செரியாமை முதலியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), இவ்விரண்டையும் ஒன்றுகக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள, திமிர்வாதம், மாரடைப்பு, பெருமூர்ச்சை, உருத்திரவாயு, பெருநோய், குட்டம் ஆகியவைகள் தீரும்.

குளிர்ந்த நீர் 2 பலம் (70 கிராம்), பேரரத்தை $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), பேரரத்தையைப் பொடித்து நீரில் கலந்துக் கொண்டு மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள, நீர்க்கட்டு, நீரருகல், நீர்ச்சுருக்கு வயிற்றுவலி, குன்மம் ஆகியவைகள் தீரும்.

கடுக்காய்ப்பொடி $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$கிராம்), நல்ல தண்ணீர் 2 பலம் (70 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை சேர்த்து உட்கொள்ள பல் பிளவை, பல்வாயு, பல்நோய், பல்லசைவு, பல்ஈறுகட்டல், நாக்குப்புண், உதட்டுப்புண் முதலியவைகள் தீரும்.

கொன்றைப் பிசின்தூள் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), நல்ல தண்ணீர் 2 பலம் (70 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்தருந்த மதுமேகம், நீர்க்கிரந்தி நீரொழுக்கு நீர்ப்பெருக்கு முதலியவைகள் தீரும்.

எருக்கிலைச்சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி பற்பத்தைச் சேர்த்தருந்த தேள், நண்டு, தெரிக்கை, செய்யான், பூரான், பாம்பு, பேய் நாய்க்கடி முதலியவை குணமாகும்.

இன்னும் இந்தப் பற்பத்தால் செரித்தல்திறன் விருத்தியாகி சூட்டு மந்த நோய் இன்னும் மற்றுமுள்ள நோய்களெல்லாம் நீங்கி

உடல் வலிமை, உடல்திடம் முதலியவை உண்டாகி ஆயுள் விருத்தி உண்டாகும்.

மருத்துணவு :-நோய்வலிமை, உடல்தன்மை முதலியவை களுக்குத் தகுந்தபடி காலநிலைக்கேற்றாற் போல மருத்துணவு ஏற்படுத்த வேண்டும்.

பூநீறு

பூநீறென்பது அநேகருக்குத் தெரிந்த பொருள்; இதன் தூய்மை முதலியவைகளெல்லாம் நமது இரசவாத சிந்தாமணியில் வகை விவரமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. அவை சம்பந்த மான முறைகளும் அவ்விடம் பலவகை சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் இந்நூலை பார்வை இடுபவர்களுக்கும் உபயோகமாகும் படி இங்கும் இலகுவான இரண்டொரு முறைகளை எழுதுவோம்.

213. பூநீற்றுச் சுண்ணம்

பாகப்படுத்தின பூநீறு ஒரு பங்கு, பாகப்படுத்தின வெடி யுப்பு ஒரு பங்கு, பொன்னாங்கண்ணிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு மணி நேரமரைத்து வில்லை செய்து உலர வைக்காமல் ஓட்டில் வைத்து மேலோடு மூடி இரண்டு சீலைமண் செய்து கீழே வைத்து மேலே மணலைக் கொட்ட வேண்டும். மணலானது கவசத்தின் மீது நான்கங்குலம் இருக்க வேண்டும். கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியை ஒடித்து மணல் மீதடுக்கி நெருப்பிட்டுப் புடமிட வேண்டும். இதற்கு அவிபுடமென்று பெயர். குளிர ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்சாற்றைவிட்டு முன்போல் ஒரு மணி நேரமரைத்து முன் போல் வில்லை செய்து முன் போல் மணல் மறைவில் அவிபுடமிடவும், மூன்றுந் தடவையும் இவ்விதமே புடம் போட்டுக் கொள்ளவும். பிறகு கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சாற்றைவிட்டு இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். இரண்டாந் தடவை முன் போல் அரைத்து முன் போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் கவசஞ் செய்து உலர்த்திக்

கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிட வேண்டும். இயற்கையினது அருளால் உயர்ந்த சுண்ணமாகி இருக்கும்.

அளவு:- 4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து :-சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர், சோம்புத் தீநீர், தேன், சர்க்கரை முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- எல்லாவகை குன்ம நோய்கள் செரியாமை நோய்கள், மந்தாக்கினி நோய்கள், சுரக்கட்டி முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இந்தப் பூநீற்றுச் சுண்ணத்தில் எல்லாச் சரக்குகளையும் கட்டலாம். அதன் விவரம் :-

புளியாரைச்சாறு 10 பங்கு, மேற்படி பூநீற்றுச் சுண்ணம் 1 பங்கு, இவ்விரண்டையும் கலந்து கட்ட வேண்டிய சரக்கு 1 பங்கிற்கு பாகப்படி சுருக்குக் கொடுக்க நெருப்பிற் கோடாமற் கட்டுப்பட்டுப் போகும். அதை நெருப்பிலிட்டுப் பார்க்க நெருப் பில் புகைந்தால் மறுபடியும் இரண்டொரு தடவை முன் போல் செய்துக் கொள்ளக் கட்டிப்போம். அல்லது கட்டுகிற வரையில் சுருக்கிட்டுக் கொள்ளலாம். இவ்விதம் சுருக்கிட்டுக் கட்டின சரக்கை முன்போல் சுருக்கிட மெழுகாகும். வைத்தியம், வாதம் முதலியவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

214. பூநீற்றுச் சுண்ணம்

பாகப்படுத்தின பூநீறு வேண்டிய அளவு. இதனைக் கல்வத்தி லிட்டுப் பொடித்து உத்தாமணி இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை வறட்டியில் புடமிட வேண்டும். குளிர ஆறின பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் போல் முன் சாற்றையே விட்டு அரைத்து புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று புடமிட்டால் வெண்ணிறமான பற்பமாகி இருக்கும்.

அளவு :- 4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், சுக்குக் குடிநீர், காசினிக்கீரைச் சாற்றை முறித்தெடுத்துக் கொண்ட நீர், வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :-குன்ம நோய், செரியாமை சூதகவலி ஆகியவைகள் தீரும்.

குறிப்பு

மேற்படி பூநீற்றுப் பற்பத்தை இளகம், சூரணம், தைலம் முதலிய வைத்திய பாக முறைகளில் அந்தந்த அளவிற்குத் தகுந்தபடி ஒரு வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), முதல் பத்து வராகன் எடை (35 கிராம்), வரையில் சேர்த்துக் கொள்வதினால் அதிக சிறப்பான குணத்தைத் தரும், இதனை ஒரு வகை வைத்திய முப் பூவெனச் சொல்லப்படுறது.

215. சவுக்காரச் சுண்ணம்

கடையில் விற்கிற நாட்டுச் சவுக்காரக் கட்டிகளை வாங்கிச் சன்னமாகச் சீவி புதுமண் தாலத்தில் போட்டு உலர்த்தி ஈரப்பசை இல்லாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் சித்தப் படுத்தினது 1 பலம் (35 கிராம்), வெடியுப்பு 2 பலம் (70 கிராம்), பூநீறு 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அடியில் பரப்பி அதன் மேல் முன் சித்தப்படுத்தி இருக்கிற சவுக்காரத்தை வைத்து அதன்மேல் மறுபாகத்தை வைத்து மூடி திரியால் கொளுத்தி விடவும், அது எரிந்தடங்கின பின்பு அதன் மீது சிறு குச்சிகளை ஒடித்துப் போட்டு நெருப்பிட்டு எரிய விடவேண்டும். இவ்விதம் மூன்று நாழிகை எரிய விட்டு விழிப்புடன் மேலுள்ள சாம்பல்களை நீக்கி எடுக்கச் சவுக்காரமானது கடுங்காரச் சுண்ணமாகி இருக்கும்.

குறிப்பு

மேற்படி சவுக்காரத்தை மேற்கண்டபடி உலர்த்தாமல் ஈரமாகவே மேற்கண்ட பாகப்படி செய்து கொள்ளலாம். ஆனால்

இவ்விரண்டு முறைகளிலும் கைபாகத்தையும் செய்பாகத்தையும் கவனித்துச் செய்து கொள்ள வேண்டும்.

அளவு :-1 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும்நோய்கள் :-குன்ம நோய்கள், செரியாமை நோய்கள் முதலியவைகள் தீரும். இன்னும் இது வாத முறைகளுக்கும் உபயோகமாகும். பயிற்சியாளர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

216. பூநீற்றுச் செயநீர்

பூநீறு $\frac{1}{4}$ படி, தண்ணீர் $\frac{1}{2}$ படி, இவ்விரண்டையுங் கரைத்துப் பன்னிரண்டு மணி நேரம் வைத்திருந்து தெளிவையிறுத்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

துணைமருந்தும், தீரும்நோய்களும் :-ஒரு பலம் (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாற்றில் இரண்டு வராகன் எடை (7 கிராம்), மேற்படி செயநீரை விட அது பொங்கும். அதை உடனே எடுத்துப் பருகச் செய்துவிட வேண்டும். இவ்விதம் செய்வதால் வயிற்றுவலி உடனே நிற்கும் குன்ம நோய், மந்தாக்கினி நோய் சூதக சம்பந்தமான வயிற்று நோய் முதலியவைகளும் தீரும்.

217. பூநீற்றுச் செயநீர் (வேறு)

பூநீறு $2\frac{1}{2}$ படி, வெடியுப்பு $2\frac{1}{2}$ படி, கறியுப்பு $2\frac{1}{2}$படி, நவச்சாரம் 5/8 படி, சீனக்காரம் $2\frac{1}{2}$ படி, சுண்ணாம்புத் தெளிநீர் செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்படி சரக்குகளை ஒன்றுகச் சேர்த்திடித்துப் பெரிய மண்பாண்டத்தில் போட்டு 10, 5/8படி சுண்ணாம்புத் தெளிநீரைச் சேர்த்துக் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி நீர்சுண்டிக் குழம்பு பதமாகி வருகையில் $2\frac{1}{2}$ படி சுண்ணாம்புத் தெளிநீரை மறுபடியும் அதில் விட்டுக் காய்ச்ச வேண்டும். விட்டநீர் சுண்டிக் குழம்பு பதமாகி வரும் போது முன் போல் $2\frac{1}{2}$படி சுண்ணாம்புத் தெளிநீரைவிட்டுக் காய்ச்ச வேண்டும். இதற்கு ஒரு தீட்சை யெனப்பெயர்.

மேற்கண்டபடி விட்டநீர் சுண்டிக் குழம்பு பதமாகி வரும் போது முன் போல் 2½ படி சுண்ணாம்புத் தெளிநீரை விட்டுக் காய்ச்ச வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவைகள் விட்டுப் பத்துத் தடவைகள் சுண்டவைத்துக் கொள்ள வேண்டும். இதனைத் தனியே நிறுத்தி வைத்துக் கொள்க.

அவையம் வைத்த கோழிமுட்டை ஓடு 2½ சேர் (700 கிராம்), இதனைச் சுண்ணாம்புத் தெளிவு நீரில் போட்டுக் காய்ச்சி உட்சவ்வுகளை நீக்கி வெய்யிலில் ஈரமில்லாமல் உலர்த்தி எருக்கம் பாலை விட்டு நான்கு சாமம் (12 மணி), அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து கவசத்தின் எட்டுப் பங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

இந்தச் சுண்ணத்தையும் முன் சித்தப் படுத்தியிருக்கிற பூநீறுதியானவைகளையும் ஒன்றாகச் சேர்த்து நிறுத்து கண்ட எடையில் நான்கில் ஒரு பங்கு சாரத்தையும், நான்கில் ஒரு பங்கு ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பையும், நான்கில் ஒரு பங்கு வீரத் தையும் சேர்த்து எல்லாவற்றையும் பொடித்துக் பெரிய குப்பியில் அடைத்து வாயைப் பளிங்கு மூடியால் மூடி உளுந்து மாவால் ஏழு சீலை மண் செய்து சதுப்பான நிலத்தில் ஒரு மண்டலம் புதைத் தெடுக்க செயநீராகி இருக்கும்.

இந்த செயநீர் மூலமாக எல்லாச் சரக்குகளையும் கட்டிப் பற்ப மாக்கிக் கொள்ளலாம்.

பற்பம் செய்ய வெண்டிய சரக்கைப் பீங்கான் பாத்திரத்திற் பொடித்துப் போட்டு அது ஆழ்ந்திருக்கும் படியாக மேற்படி செயநீரை விட்டு மணல் மீது வைத்தெரிக்கப் பற்பமாகி விடும். அந்தப் பற்பத்தை அந்தந்தச் சரக்குகளால் போகும் நோய் களுக்கு பயன் படுத்தலாம்.

குறிப்பு

இது குருமுறைகளில் ஒன்றானதாகையால் சாதாரணமாக எல்லோரும் செய்து கொள்ள இயலாது. இதன் மர்மங்கள் தெரிந்தவர்கள் அநேகர் இருப்பார்கள் ஆகையால் அவர்களுக்கு உபயோகம் ஆகும்படி இங்கு எழுதப்பட்டதே தவிர மற்றவர் களுக்காக எழுதப் பட்டதல்ல.

218. நவச்சாரக்கட்டு

நவச்சாரக்கட்டி 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாய் இருக்க வேண்டும். கம்பி வெடியுப்பு ½ பலம் (17½ கிராம்), கோழி முட்டைமஞ்சட்கரு 2, ஆமணக்கெண்ணெய் 1 பலம் (35 கிராம்).

செய்முறை :-வெடியுப்பைத் தூள் செய்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை ஒரு கலயத்தில் போட்டு அதன் மேல் நவச்சாரக்கட்டியை வைத்து அதன் மேல் வெடியுப்பின் மறுபாகத்தைப் போட்டு மெதுவாய் விரலால் அழுத்தி மஞ்சட்கருக்களை விட்டு அதன் மேல் எண்ணெயை விட்டு கலயத்தின், வாய்க்குச் சில்லிட்டுச் சீலை மண்செய்யாமல் 15 பலம் (525 கிராம்), வறட்டியைப் பொடித்துக் கலயத்தின் கழுத்து மட்டும் அடுக்கி நெருப்பிட்டு எரித்துச் சப்தமடங்கினவுடனே எடுத்து ஆற வைத்தெடுக்க நவச்சாரமானது வெண்மையாயும், கடுங்காரமாயும் இருக்கும் இதனைப் பொடித்துப் பளிங்குக்குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :-¼ வராகன் எடை.

துணைமருந்தும், தீரும்நோய்களும் :- தென்னம் பூச்சாறு 2 பலம் (70 கிராம்), வெள்ளாட்டுப்பால் 2 பலம் (70 கிராம்), இரண்டையும் கலந்து மேற்படி சாரத்தை அளவுப்படி கலந்து பருகச் செய்ய எட்டு வகைப் பாண்டு நோய்களும் தீரும்.

வெங்காயச்சாறு 2 பலம் (70 கிராம்), சர்க்கரை 1,பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி சாரத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க, குன்மம், மகோதரம், கட்டி, அகட்டுவாயு வேறு வகைக் கட்டிகள் ஆகியவைகள் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச்சாறு 2 பலம் (70 கிராம்), தேன் 1 பலம் (35கிராம்), இரண்டையும் கலந்து மேற்கண்ட சாரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள, நீரடைப்பு, நீரருகல், கல்லடைப்பு, சதையடைப்பு ஆகியவைகள் தீரும்.

219. நவச்சாரக்கட்டு (வேறு)

துருசு 1 வராகன் எடை (3½ கிராம்), இது ஒரே கட்டியாய் இருக்க வேண்டும். சித்திரமூலி இலையை அரைத்து விழுது 15 வராகனெடை (52½கிராம்), இதனை மேற்படி துருசுக் கட்டிக்குக்

கவசித்து அதன் மேல் ஒரு சீலை மண் செய்து 10 பலம் (350 கிராம்), வறட்டியில் புடமிட அது சுண்ணமாம்.

நவச்சாரம் 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாய் இருக்க வேண்டும். சித்திரமூலியிலை $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இதனை வெண்ணெய் போல் அரைத்து மேற்படி துருசுச் சுண்ணத்தில் நான்கு குன்றிமணியெடைச் சேர்த்து நன்றாக மத்தித்து மேற்படி சாரக் கட்டிக்குக் கவசித்து உலர்த்தி அதன் மேல் ஒரு பலம் சித்திரமூலி வேர்ப்பட்டையை அரைத்து அதில்நான்கு குன்றிமணி எடை துருசுச் சுண்ணத்தைச் சேர்த்துக் கவசித்து உலர்த்த வேண்டும். பிறகு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), வன்னியிலையையரைத்து அதில் நான்கு குன்றிமணி எடை மேற்படி துருசுச் சுண்ணத்தையுஞ் சேர்த்துப் பிசைந்து முன்கட்டிக்குக் கவசமேற்றி உலர்த்த வேண்டும். பிறகு இரண்டு பலம் (70 கிராம்), வெதுப்படக்கி இலையை அரைத்து நான்கு குன்றிமணி எடை மேற்படி துருசுச் சுண்ணத்தைச் சேர்த்து மத்தித்து, கவசித்து உலர்த்தி ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி 40 பலம் (1400 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க சாரமானது கட்டுப்பட்டிருக்கும். இதனை எடுத்துப் பொடித்துப், பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:–3 முதல் 5 குன்றிமணி எடை.

துணைமருந்து :- இளநீர், நீர்முள்ளிவேர்க் குடிநீர், சுரைக் கொடிக் குடிநீர், தென்னம்வேர்க் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- :-குன்மநோய், வாயு, நீர்க்கட்டு, மகோதரம் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :-உடல்வலிமை, நோய்வலிமை, ஆகியவை களுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

220. நவச்சாரக் கட்டு (வேறு)

நாயுருவிச் சாம்பல் 4 படி, சிறுவர்களின் மூத்திரம் 16 படி, இதில் மேற்படி சாம்பலைப் போட்டு மூன்றுநாள் வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை நன்றாகக் கலக்கியும் வரவேண்டும். நாலாம் நாள் தெளிவையிறுத்து இரும்புச் சட்டியில் சிறுகச் சிறுக விட்டுக் காய்ச்சிக் குழம்பாய் வரும் போது 8 பலம் (280கிராம்), நவச்சாரத்தைப் பொடித்துப் போட்டுக் கெட்டிப்

பதமாகிற வரையில் கைவிடாமற் கிண்டி, பிறகு இறக்கி வெய்யிலில் காயவைத்து எல்லாவற்றையுஞ் சுறண்டி எடுத்துச் சிறுவாயுள்ள கலயத்தில் போட்டுக் குச்சியால் குத்தி நன்குயழுத்தி கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலை மண் செய்து உலாத்தி ஒரு முழம் அகலம் ஒன்றரை முழம் உயரமுள்ள ஒரு புடமிட்டு ஆறின பின் எடுக்கச் சாரமானது உருகித் தந்தம் போல் கட்டிப்போகும். இந்தச் சாரமானது செயநீர் முதலிய பெரும் போக்குகளுக்கு உபயோகமாம்; இதனைப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :-2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :-நெருஞ்சிச் சமூலக் குடிநீர், சோம்புத் தீநீர், வெள்ளறுகை அரைத்த விழுது, தென்னம் பூச்சாறு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :-மகோதரம், வல்லைக்கட்டி, கெண்டைக்கட்டி, சூதகக்கட்டி, பிலிகக்கட்டி, சுரக்கட்டி முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :-இச்சாபத்தியம்; நோய் கடினமாக இருந்தால் புளியையும், உப்பையும் நீக்கி வைப்பதால் அதிக குணமுண்டாகும்.

குறிப்பு

மேற்கண்ட மூத்திரம் அகப்படாத காலங்களில் அதிக உவர்ப்பான கிணற்று நீரை, அல்லது கடல் நீரைச் சேர்த்துச் செய்து கொள்ளலாம்.

221. நவச்சாரக் கட்டு (வேறு)

உவர்மண் 2படி, வெடியுப்பு 2 பலம்(70 கிராம்), நவச்சாரம் 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்.

செய்முறை :-ஒரு படி உவர் மண்ணை ஒரு பானையில் போட்டு சமமாக அழுத்தி விட்டு அதன் நடுவில் ஓலைச் சுருளை வைத்து 1 பலம் (35 கிராம்), வெடியுப்பைப் பொடித்து ஓலைச் சுருளுக்குள் போட்டு அழுத்தி அதன் மீது சாரக் கட்டியை வைத்து அதன்

மீது ஒரு பலம் (35 கிராம்), வெடியுப்பைத் தூள் செய்து போட்டு அழுத்தி அதன் மேல் ஒரு படி உவர் மண்ணைப் போட்டுப் பானையின் வாயை மண் பாண்டத்தால் மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி ஒரு சாமம் (3 மணி), தீபாக்கினியாகவும் இரண்டு சாமம் (6 மணி), கமலாக் கினியாகவும் ஒரு சாமம் (3 மணி), காடாக்கினியாகவும் எரிக்கவும். ஆறின பின் எடுக்கச் சாரமானது தந்தம் போல் கட்டியிருக்கும். இதனைக் கல்வத்தில் பொடித்துக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :-2முதல்4 குன்றி மணி எடை.

துணைமருந்து ;-நெருஞ்சி வேர்க் குடிநீர், முள்ளங்கிச் சாறு, வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்த பால், சோம்புத் தீநீர், முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- பாண்டு, மகோதரம், வயிற்றுக்கட்டி, வயிற்று நோய், நீர்க் கட்டு முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :-சமயோசிதம்போல் புளி உப்பு ஆகியவைகளைச் சேர்த்தும், சேர்க்காமலும் பத்தியம் செய்து கொள்ளவும்,

222. நவச்சாரக் கட்டு (வேறு)

நவச்சாரக் கட்டி 5 பலம் (175 கிராம்), சுவரோரங்களில் உதிர்த்து கிடக்கிற உப்பு மண் 1 படி, வெடியுப்பு $2\frac{1}{2}$ பலம், அப்பளக் காரம் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :-மேற்படி உப்புமண்ணை ஒரு பானையில் போட்டு அழுத்தி அதன் மத்தியில் ஓலைச் சுருளை வைத்து அதில் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), வெடியுப்பைத் தூள் செய்து போட்டு அதன் மேல் 5/8 பலம் அப்பளாகாரத்தைத் தூள் செய்து போட்டு நவச்சாரக் கட்டியை அதன் மீது வைத்து அதன் மீது பாக்கி வெடியுப்பைத் தூள் செய்து போட்டு அழுத்தி அதன் மீது பாக்கி உவர் மண்ணைப் போட வேண்டும். இந்த மண்ணானது அந்தபானை வாய் மட்டும் இருக்க வேண்டும். அப்படி இல்லா விட்டால் வாய் மட்டம் கொள்ளுகிற வரையில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். பிறகு பானை வாயை மண் பாண்டத்தால் மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி தீபாக்கினியாக இரண்டு சாமம் எரித்து ஆறின பின் எடுக்கச் சாரமானது தந்தம் போல் இறுகும்; இதனைப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம்.

அளவு, துணை மருந்து, தீரும் நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு

இதனை புளியம்புறணிச் சாம்பலுக்குள் வைத்து நான்கு சாமம் (12 மணி), எரித்தெடுக்க கடுங்காரச் சுண்ணமாயிருக்கும். இச் சுண்ணத்தின் குணமானது முன் கட்டைப் பார்க்கிலும் அதிக சிறப்பாக இருக்குமென்பதை நாமிங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை.

223. நவச்சாரக் கட்டு (வேறு)

(அ) கல்லுப்பு $\frac{1}{4}$ படி, கறியுப்பு $\frac{1}{4}$ படி, வெடியுப்பு $\frac{1}{4}$ படி சிறுநீர் 2 படி முன் மூன்றையும் பொடித்துச் சிறுநீரில் கரைத்துக் காய்ச்சி இறுகினபதத்தில் இறக்கித் தனியே வைத்துக் கொள்ளவும்.

நவச்சாரம் 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), வெண்காரத்தைச் சிவப்பு நாயுருவிச்சாற்றை விட்டு ஒரு சாம (3 மணி), நேரம் அரைத்து மேற்படிச் சாரக்கட்டிக்குக் கவசஞ் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

ஒரு பானையில் கொஞ்சம் மணலைப் பரப்பி (அ)வில் சொன்னபடி சித்தப்படுத்தி இருக்கிற உப்பைத்தூள் செய்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அந்த மணலின் மீது பரப்பி, அதன் நடுவில் முன் சித்தப் படுத்தியிருக்கிற நவச்சாரக் கட்டியை வைத்து அதன் மீது மறுபாதி உப்பை வைத்து அழுத்தி அதன் மீது மணலைக் கொட்டிப் பானை வாயை மூடி, 5 சீலை மண் செய்து உலர்த்தி இராப்பகல் மூன்று நாள் எரிக்கவும். குளிர்ந்த பின் எடுக்கச் சாரமானது தந்தம் போலக் கட்டுப்பட்டிருக்கும்.

அளவு, துணை மருந்து, தீரும்நோய்கள் மேற்கண்டவைகளாம்.

224. நவச்சாரக் கட்டு (வேறு)

சீனக்காரம் 1பலம் (35 கிராம்), வெண்காரம் 1பலம் (35 கிராம்), கம்பி வெடியுப்பு 1 பலம் (35 கிராம்), இம்மூன்றையும் தனித்தனியே

வேலிப் பருத்திச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு இரண்டு சாமம் (6 மணி) அரைத்துத் தனித்தனி வில்லை செய்து உலர்த்தித் தனித்தனி ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலை மண் செய்து தனித்தனி கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியில் தனித்தனி புடமிடவும். குளிர ஆறின பின் எடுக்க ஒவ்வொன்றும் சுண்ணமாகியிருக்கும்.

நவச்சாரக் கட்டி 1 பலம் (35 கிராம்), இதன் மீது முதலில் சீனச் சுண்ணத்தை வேலிப்பருத்திச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு மணி நேரம் அரைத்துக் கவசித்துலர்த்திக் கொள்ள வேண்டும். நன்றாயுலர்ந்த பின்பு வெண்காரச் சுண்ணத்தை மேற்படி வேலிப் பருத்திச் சாற்றை விட்டு ஒரு மணி நேரம் அரைத்துக் கவசித்துலர்த்திக் கொள்ள வேண்டும். மூன்றாவது வெடியுப்புச் சுண்ணத்தையும் முன் போலரைத்துக் கட்டியின் மீது கவசஞ் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

ஒரு சட்டியில் ஊமச்சியை இடித்த மா $\frac{1}{4}$ படி, இதனை அதில் பரப்பி அதன் மீது நத்தாங் கூட்டை இடித்தத் தூள் $\frac{1}{4}$ படி, இதனைப் பரப்பி அதன் மீது நண்டு ஓட்டுத் தூள் $\frac{1}{4}$ படி, இதனைப் பரப்பி முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சாரக்கட்டியை வைத்து அதன் மேல் முன் போல் நண்டோட்டுமா, நத்தாங் கூட்டுமா, ஊமச்சிமா ஆகிய இவைகளை வகைக்கு கால் படியாக முறையே ஒன்றன் பின் ஒன்றாகப் பரப்பி நான்கு பக்கமும் செம்மையாக அழுத்தி மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து அடுப்பேற்றி மூன்று சாமம் (9 மணி) தீபாக்கினியாகவும், மூன்று சாமம் (9 மணி) கமலாக்கினியாகவும் ஆகக் கூடிய ஆறு சாமம் எரித்து ஆறின பின் எடுக்கச் சாரமானது கட்டுப் பட்டுத் தந்தம் போலிருக்கும், இதனை எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு :-1 முதல் 2 குன்றி மணி எடை.

துணை மருந்து :-கொத்துமல்லி விதைக் குடிநீர், தேயிலைக் குடிநீர், நன்னாரி வேர்க் குடிநீர், நெருஞ்சி வேர்க் குடிநீர், கரும்புச் சாறு, முள்ளங்கிச் சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :-வல்லைக் கட்டி, கெண்டைக் கட்டி, மகோதரம், ஆம்பல் நோய், பொருமல், செரியாமை நோய், நீர்க்கோவை, நீர்ப் பாண்டு, பித்தப் பாண்டு, நீர்க் கட்டு, நீரடைப்பு, சதை யடைப்பு முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :-உடல், நோய் ஆகிய இரண்டிற்கும் ஏற்ற விதமாகவும், சமயோசிதமாகவும் ஏற்படுத்த வேண்டியது.

குறிப்பு

மேற்படி கட்டானது நாகம் முதலியவைகளை கட்டவும், இரசவாதத் தொழிலுக்கும் உபயோகமாம்.

225. நவச்சாரக் கட்டு (வேறு)

வெடியுப்புச் சுண்ணம், சீனக்காரச் சுண்ணம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), (இவ்விரண்டு சுண்ணங்களையும் மேற்படி பாகத்தில் சொல்லி இருக்கின்றபடி செய்து கொள்ளவும்.) வெள்வங்கச் சுண்ணம் 1 பலம், (இதனை முன் பாகங்களில் சொல்லி இருக்கின்ற படி செய்து கொள்ள வேண்டும்.) இம்மூன்று வகைச் சுண்ணங்களையும் கலந்து முக்கால் பலம் நவச் சாரத்தைச் சேர்த்துப் பொடித்துப் பீங்கானில் போட்டுப் பனியில் வைக்க செயநீராகும். இந்த செயநீரைப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

நவச்சாரக் கட்டி 1 பலம் (35 கிராம்), இதனை ஒட்டில் வைத்து முன் சித்தப்படுத்தி இருக்கிற செயநீரைச் சிறுகச் சிறுகத் தடவி நான்கு சாமம் (12 மணி) சுருக்குக் கொடுக்கவும்.

ஒரு சட்டியில் மூன்று அங்குலம் சவுட்டு மண்ணைப் பரப்பி அதன் மீது ஒரு ஓலைச் சுருளை வைக்கவும். நாலாங்காய்ச்சல் வெடியுப்பு, சீனக்காரம் அப்பளக் காரம், வெண் காரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), இந்நான்கையும் சேர்த்துப் பொடித்து இரண்டு பங்கு ஆக்கி ஒரு பங்கை மேற்படி ஓலைச் சுருளுக்குள் வைத்து அழுத்தி அதன் மீது முன் சுருக்கிட்டுச் சித்தப் படுத்தின நவச்சாரக் கட்டியை வைத்து அதன் மீது மறு பங்கு தூளையும் போட்டுக் கட்டி தெரியாமல் அழுத்தி அதன் மேல் சவுட்டு மண்ணைக் கொட்டி மூடிச் சட்டி வாயை மூடாமல் அடுப்பேற்றி ஆறு சாமம் தீபாக்கினியாக எரித்துக் குளிர ஆறவிட்டு எடுக்க சாரமானது கட்டுப்பட்டு இருக்கும். இதனை எடுத்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு

இந்த நவச்சாரக்கட்டு இரசவாத முறைகளுக்கும் உபயோகப் படும்.

226. நவச்சாரக் கட்டு (வேறு)

பூ நீறு, சீனக்காரம், வெண்காரம், நாலாங்காய்ச்சல் வெடியுப்பு இந்நான்கும் வகைக்கு 2 பலம் (70 கிராம்), இந்நான்கையும் தூள் செய்து சுமார் அரைப்பலம் (17½ கிராம்), தூளை எடுத்து வைத்துக் கொண்டு மற்றதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் வைத்து அதன் மீது இரண்டு பலம் (70 கிராம்), சாரக்கட்டியை வைத்து அதன் மீது மறுபாகத் தூளையும் போட்டு அழுத்தி மண்கிண்ணத்தால் மூடி அடுப்பேற்றிச் சிறுதீயாக எரிக்க வேண்டும். ஒவ்வொரு மணிக்கு ஒரு தடவை மண் கிண்ணத்தைத் திறந்து பார்த்து வரவும் வேண்டும். அப்படித் திறந்து பார்க்கையில் புகை எழும்பினால் முன்னெடுத்து வைத்திருக்கிற தூளில் கொஞ்சமிட்டு அழுத்திப் புகை வராமல் தடுக்க வேண்டும். இவ்விதம் நான்கு சாமநேரம் எரித்து ஆற விட்டு எடுக்க வைத்த எடையில் முக்காற் பாகந் தானிருக்கும். ஆனால், சாரம் கட்டுப்பட்டுப் போகும். இதனை எடுத்துப் பொடித்து பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்த வேண்டும்.

அளவு :-7 முதல் 10 குன்றி மணி எடை.

துணைமருந்து :- நீர்முள்ளிவேர்க் குடிநீர், நெருஞ்சிக் குடிநீர், மணித்தக்காளியிலைச் சாற்றை முறித்த நீர், வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்த பால், வெள்ளரிக் காயை வெதுப்பி இடித்துப் பிழிந்த சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் ;- நீர்க்கட்டு, மகோதரம், பாண்டு, வயிற்றுவலி, நீரருகல், நீர்ச்சுருக்கு முதலியவைகள் நீங்கும்.

227. நவச்சார பற்பம்

நவச்சாரக்கட்டி 1 பலம் (35 கிராம்), இதனை எருக்கம் பாலில் முழுவதும் நனையும்படியாகத் தோய்த்து உலர்த்த வேண்டும்

அது நன்ருயுலர்ந்த பின்பு இரண்டாந்தடவையும் முன் போலத் தோய்த்து உலர்த்த வேண்டும். இவ்விதம் உலர உலர ஏழு தடவைகள் மடக்கி மடக்கிச் செய்ய வேண்டும்.

கல்லுப்பு 1 பலம் (35 கிராம்), நாய் வேளைச் சமூலம் 1 பலமும் (35 கிராம்), இவ்விரண்டையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்து மேற்படி நவச்சாரக்கட்டிக்குக் கவசஞ் செய்து சட்டியை அடுப்பின் மீது வைத்து சட்டிச் சூடு கண்ட பின்பு, முன் கவசித்து வைத்திருக்கிற கட்டியைப் போட்டு புரட்டிக் கொடுக்க வேண்டும். ஈரம் உலர்ந்து போனபின்பு, கல்லுப்பையும், நாய்வேளையையும் அரைத்துக் கவசஞ் செய்து முன் போல் வறுத்துக் கொள்ள வேண்டும். மூன்றும் தடவையும் அவ்விதமே வறுத்துக் கொள்ள வேண்டும்,

வெடியுப்பு 2 பலம் (70 கிராம்), சிறுபிள்ளை மூத்திரம் $\frac{1}{4}$ படி. இவ்விரண்டையும் சேர்த்துக், கரைத்து அடுப்பேற்றிக் குழம்பும் பதமாகி வரும் போது, முன் சித்தப்படுத்தியிருக்கும் கட்டியைப் போட்டு நீர் சுண்ட எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டியை நிறுத்து, இது கண்ட எடையில் இரண்டு வராகன் எடைக்கு ஐந்து வராகன் எடை வீதம் வெடியுப்பைப் பொடித்து உமிழ் நீரால் அரைத்து மேற்படி கட்டிக்கு கவசித்து உலர்த்திச் சிறு கலயத்தில் இட்டுச் சில்லிட்டு ஐந்து சீலை மண் செய்து, உலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கு எடை வறட்டியில் புடமிட்டு, ஆறின பின் எடுக்கச் சாரமானது பற்பமாக இருக்கும். இதனைப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 3 முதல் 4 குன்றி மணி எடை.

துணை மருந்து :- வெள்ளரிக் காய்ச் சாறு, நீர்முள்ளி வேர்க் குடிநீர், தென்னை வேர், பனை வேர் முதலியவைகளின் குடிநீர், சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர், சோம்புத் தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- பாண்டு வகைகள், பெருவயிறு, மகோதரம் நீர்க்கட்டு, குன்மம், அக்கினிமந்த, முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :- உடல் வலிமை, நோய் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

228. நவச்சார பற்பம் (வேறு)

நவச்சாரக் கட்டி 1 பலம் (35 கிராம்), சீனக்காரம் 10 பலம் (350 கிராம்), எருக்கம் பால் 10 பலம் (350 கிராம்), உத்தாமணி இலை 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- படிகாரத்தை இரும்புச் சட்டியில் போட்டு அடுப்பேற்றி உருகினவுடன், நவச்சாரக் கட்டியைப் போட்டுப் புரட்டிக் கொண்டு வரவேண்டும். தீயை மெதுவாக எரித்தும் வர வேண்டும். ஈரம் எல்லாம் வறண்டு போன பிறகு, ஆறவிட்டு நவச்சாரக் கட்டியின் மீதுள்ள சீனக்காரத்தைக் கத்தியால் சுரண்டி, மேற்படி வேலிப்பருத்தி இலையை அரைத்துக் கட்டிக்குக் கவசஞ் செய்து உலர்த்தி, ஐந்து சீலை மண் செய்து கவசத்தின் மூன்று பங்கு எடை வறட்டியில் புடமிட்டு, ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 4 முதல் 8 குன்றி மணி எடை.

துணைமருந்து :- நீர் முள்ளி வேர்க் குடிநீர், நெருஞ்சி சமூலக் குடிநீர், தென்னை வேர்க் குடிநீர், வெள்ளரிக் காயை வெதுப்பிப் பிழிந்த சாறு, வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்த பால், சோம்புக் குடிநீர், சோம்புத் தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :-கவுசை, நீராம்பல், மகோதரம், பாண்டு, நீர் அடைப்பு முதலியவை தீரும்.

மருத்துணவு :- நோய் வலிமை, உடல் வலிமை முதலியவை களுக்குத் தகுந்த படி ஏற்படுத்த வேண்டியது.

229. நவச்சாரச் சுண்ணம்

நவச்சாரம் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத் தக்க அளவு, உவர் மண் செல்லத் தக்க அளவு.

செய்முறை :- சாரத்தைக் கல்வத்தில் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் (12 மணி) அரைத்து, வில்லை செய்து உலர்த்தி, இரண்டு சாண் அகலம், இரண்டு சாண் ஆழமுள்ள குழி ஒன்று தோண்டி, அதில், அரை

வாசியில் உவர் மண்ணைக் கொட்டிப் பரப்பி, அதன் மீது கவசத்தை வைத்து, அதன் மீது குழியின் வாய் மட்டம் வரையில் உவர் மண்ணைக் கொட்டிப் பரப்பி, அதன் மீது 300 பலம் (10500 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 6 குன்றிமணி எடை.

துணைமருந்து :- முன் பாகத்தில் சொல்லப்பட்டவைகளேயாம்.

தீரும்நோய்கள்:- வல்லைக்கட்டி, கவுசைக்கட்டி, கெண்டைக் கட்டி, மகோதரம், நீராம்பல், பாண்டு, சூதகக்கட்டு, சூதகக்கட்டி முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :- நோயின் வலிமைக்குத் தகுந்தபடி ஏற்படுத் தவும்.

230. நவச்சாரச் சுண்ணம் (வேறு)

நவச்சாரக்கட்டி 1 பலம் (35 கிராம்), ஊமத்தையிலைச் சாறு 1 படி (இது கரு ஊமத்தையாயிருந்தால் மிகவும் மேன்மையாகும்). ஊமத்தையிலை செல்லத் தக்க அளவு.

செய்முறை :- சாரக்கட்டியை ஒரு ஓட்டில் வைத்து மேற்படி ஊமத்தைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிட வேண்டும். சாறெல்லாம் சென்றபின்பு எடுத்து, ஊமத்தை இலையை அரைத்து அரை அங்குல கனம் எங்கும் சமமாகக் கவசஞ் செய்து உலர்த்தி, சுக்கான் கல்லை ஊமத்தைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து, மூசையும் மூடியுஞ்செய்து உலர்த்தி அதற்குள் வைத்து, ஐந்து சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியில் புடமிட்டு, ஆறின பின்னெடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய்கள் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

231. நவச்சாரச் சுண்ணம் (வேறு)

சாரக்கட்டி 1 பலம் (35 கிராம்), நாலாங் காய்ச்சல் வெடியுப்பு 5 பலம் (175 கிராம்), உலர்த்தின நாய் வெள்ளைமலம் 2 படி.

ஊமச்சிக் கிளிஞ்சில் செல்லத் தக்க அளவு, கோழி முட்டை வெள்ளைக்கரு செல்லத் தக்க அளவு.

செய்முறை :- நாய் மலத்தைத் தூள் செய்து, இரண்டு பாக மாகச் செய்து ஒரு பாகத்தை ஒரு சட்டியில் போட்டு, அதன் மீது வெடியுப்புக் கட்டிகளை வைத்து, அதன் மீது மேற்படி மறு பாகத்தைப் போட்டுச் சட்டியை மேற் சட்டியால் மூடி ஏழு சீலை மண் செய்து உலர்த்திக் கமலாக்கினியாக நான்குசாமம் (12 மணி) எரித்து ஆற விட்டெடுக்க வெடியுப்பானது சுண்ண மாகி இருக்கும்.

5 பலம் (175 கிராம்), பூநீற்றை ஒரு படி தண்ணீரில் கரைத்துப் பத்துப் பலம் (350 கிராம்), கிளிஞ்சிலை அதில் ஊற வைத்துப் பின் புறத்திலுள்ள கறுப்பு நீங்கக் காய்ச்சி கழுவி எடுத்து, உலர்த்தித் தூள் செய்து வைத்துக் கொள்ளவும்.

மேற்படி வெடியுப்புச் சுண்ணத்திற்குச் சமனெடை, மேற்படி கிளிஞ்சில் தூளைச் சேர்த்து, வெள்ளைக்கருவைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம (3 மணி) நேரமரைத்து, மேற்படி நவச்சாரக் கட்டிக்கு எங்கும் சமமாகக் கவசித்து உலர்த்தி, ஏழு சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு, துணை மருந்து முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

232. சார செயநீர்

ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பு 10 பலம் (350 கிராம்), பாகப் படுத்தின பூநீறு 10 பலம் (350கிராம்), இவ்விரண்டையும் கல்வத் திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் (12 மணி) அரைத்து, இரும்புக் கரண்டியில் போட்டு, ஈரம் சுண்டும் படியாகக் கொதிக்க வைத்தால் சுண்ணமாகும்.

(அ) இந்தச் சுண்ணத்தில் நான்கில் ஒரு பங்கு சாரத்தைச் சேர்த்துப் பொடித்துப் பீங்கானில் இட்டுப் பனியில் வைக்க, எட்டு நாளைக்குள் செயநீராகி விடும்.

இந்த செயநீரை வார்த்து சாரத்தை இரண்டு சாம (6 மணி) நேரம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அகலில் வைத்து மேல்

அகல் மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கு எடை வறட்டியில் புடமிடச் சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்துடன் கால் பங்கெடை, நவச்சாரத்தைச் சேர்த்துப் பனியில் வைக்க செயநீராகும். ஆடுஞ் சரக்குகளெல்லாம் இந்த செயநீரில் தோய்த்து வாட்டக் கட்டுப் படும். இந்த செயநீரை விட்டு அரைத்துப் புடம் போடச் சுண்ணமாகும்.

(அ) வில் சொல்லியிருக்கிற செயநீரில் சீனத்தைப் போட்டு வெய்யிலில் வைக்கச் சுண்ணமாகிவிடும். இந்தச் சுண்ணம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அண்ட ஓட்டிற்குள் போட்டு அதன் மேல் ஒரு வராகன் எடை ($3\frac{1}{2}$கிராம்), இரசகர்ப்பூரத்தை வைத்து அதன்மீது மறுபாதிச் சீனச் சுண்ணத்தைப் போட்டு அதை மறு அண்ட ஓட்டால் மூடி ஐந்து சுண்ணும்புச் சீலை செய்து உலர்த்தி ஒரு படி சுண்ணும்பு நீறின் மத்தியில் அல்லது, ஒரு படி பூநீற்றின் மத்தியில் வைத்து பானையை மண் தாலத்தால் மூடிச் சீலைமண் செய்து நான்கு சாமம் கமலாக்கினியாக எரித்தெடுக்க, இரசகர்ப்பூரமானது கட்டி மணி யாகி உருகி இருக்கும். அதனைத் தக்க துணைமருந்துகளுடன் உட் கொள்ள எல்லாவித வாத நோய்கள், வாயு நோய்கள், சன்னி நோய்கள், தோஷங்கள், புண் புரைகள் முதலிய பற்பல நோய்கள் தீரும். வாய்வேகாது, எவ்விதத் தீய குணமும் உண்டாகாது.

குறிப்பு

மேற்கண்ட இரசக்கர்ப்பூரத்தைப் போலவே வீரம், பாடாணம், கெந்தகம், தாளகம் முதலிய சரக்குகளைக் கட்டி அதற்கான நோய் களுக்கு உபயோகித்து வெற்றியடையலாம்.

233. நவச்சார செந்தூரம்

226-ல் சொல்லியிருக்கிறபடி நவச்சாரத்தைச் சீனத்தில் பாகப் படுத்தி சீவிக் கல்வத்திலிட்டுப் பொடித்து, கோங்கிலவுப் பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கச் செந்தூரமாகியிருக்கும்.

அளவு :– 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நீர்முள்ளிவேர்க் குடிநீர், பனைவேர் குடிநீர், சுக்குக்குடிநீர், சோம்புக்குடிநீர், சோம்புத்தீநீர் முதலியவை களாம்.

தீரும்நோய்கள் :- குன்மம், கட்டிகள், சூதகக்கட்டு, பாண்டு செரியாமை நோய் முதலியவைகள் தீரும். இன்னும் இதனை வில்வாதி முதலிய இளகங்களுடன் சேர்த்துக் கொடுக்க அங்கு சொல்லப்படும். நோய்களெல்லாம் அதிக சீக்கிரமாகத் தீரும். வில்வாதி முதலிய இளக வகைகளெல்லாம் பின்னுற் சொல்லப்படும்.

234. ஆக்கிராண திராவகம்

சுண்ணும்புக்கல் 4 பலம் (140 கிராம்), வெள்ளை நிறமான நவச்சாரம் 8 பலம் (280 கிராம்).

செய்முறை:- இவ்விரண்டையும் தனித் தனிப் பொடித்துப் பீங்கான் வாலையிற் போடும்போது இரண்டையும் கலந்துபோட்டு மறு பீங்கான் வாலையைப் பொருத்தி மணலில் வைத்து நல்ல தீயாக எரிக்கவும். மேற் பளிங்குக் குப்பியிலிருக்கிற திராவகத்தை எடுத்துச் பளிங்கு மூடியுள்ளகுப்பியிலடைத்து வைத்துக் கொள்ளவும், காற்றுப்பட்டால் காரம் போய்விடும்.

தீரும்நோய்கள்:- இந்த குப்பியைத் திறந்து மூக்கில் முகர வைத்தால் சன்னி, சைத்தியம். தலைநோவு, நீர்க்குற்றம், ருத்தி வாயு, மூர்ச்சை, பல்லு கிட்டிக்கொள்ளுதல் முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இந்த உழைப்புக்குப் பின்வாங்குபவர்கள் சீமையிலிருந்து வந்து விற்கும் ஆக்கிராண உப்பை வாங்கி உபயோகித்துக் கொள்ளலாம்.

235. நவச்சாராதிக் குழம்பு

நவச்சாரம், இந்துப்பு, வெடியுப்பு, ஓமத்தூள், சவுக்காரம், காந்தத் தூள், கடுகுத் தூள், தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு, மஞ்சள் கடுக்காய்த் தோல் சூரணம், இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), 5 பலம் (175 கிராம்), மஞ்சள் கடுக்காய்த் தோலை

ஒன்றரைப்படி தண்ணீரிற் போட்டு அரைப்படியாகச் சுண்டவைத் திறக்கி வடிகட்டின குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- ஆரம்பத்தில் வாளத்தைக் கல்வத்திலிட்டுத் தூள் செய்து மற்றவைகளையும் முறையே ஒவ்வொன்றாகச் சேர்த்த ரைத்து, முடிவாக எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படி குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமம்(12 மணி)அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :- சிற்றாமணக்கெண்ணெய், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர், சோம்புத் தீநீர் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:- நீராமை, பெருவயிறு, கவுசை. அகட்டுவாயு, வயிற்றுக்கட்டி. மகோதரம், வாயு, சோணித வாயு, பித்த காமாலை, எட்டு வகைப் பாண்டு நோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :- நோய்க்குத் தகுந்தபடி சுட்டப்புளி, வறுத்த உப்பு ஆகியவைகளைச் சேர்த்தும், அறவே நீக்கியும் வைக்க வேண்டியது.

குறிப்பு

இதில் கட்டின நவச்சாரத்தை அல்லது, நவச்சாரச் சுண்ணத் தைச் சேர்த்துச் செய்தால் அதிக சிறப்பான குணத்தைத்தருமென் பதை மறுப்பதற்கில்லை.

வெடியுப்பு

இதன் தூய்மை இதன் பாகம் முதலியவைகளெல்லாம் நமது இரசவாத சிந்தாமணியில் வகை விபரமாகச் சொல்லப்பட்டிருக் கின்றன. இதனைப் பார்வை இடுபவர்களுக்கும் உபயோகப்படும் படியாகச் சில பாகங்களைச் சுருக்கமாக இங்கெழுதுவோம்.

236. வெடியுப்புக் கட்டு

ஆட்டுவிலாவின் எலும்பு, அதன் மண்டையெலும்பு ஆகியவை களையிடித்து மாவாக்கிக் கொள்ளவேண்டும், இதில் அரைப்படி ாவை ஒரு பானையிற் போட்டு அதன்மீது இரண்டு பலம் வெடி

யுப்புக் கம்பியை வைத்து அதன்மீது மேற்படி அரைப்படி மாவைப் போட்டுச் சிறுசின்னியிலைச்சாற்றை சுமார் ஒரு ஆழாக்கு தெளித்து வாய்க்குச் சீல்லிட்டு அடுப்பேற்றி நான்கு சாமம் (12 மணி) எரித்துக் குளிர ஆறின பின்னெடுக்கக் கம்பியானது உருகிக் கட்டுப்பட்டிருக்கும். தீ அதிகமானல் சுண்ணமாகி விடும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணை மருந்து :- நெருஞ்சி வேர்க் குடிநீர், யானை நெருஞ்சியைக் கலக்கி தண்ணீரிற் எடுத்த கோழை, பேதாறுக் கோழை, திருநீற்றுப்பத்திரி விதைக் கோழை, முள்ளங்கிச்சாறு, வெள்ளாட்டுப் பால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- நீர்க்கட்டு, நீரடைப்பு, சதையடைப்பு, கல் லடைப்பு, குன்மம், வயிற்றுவலி, வாயு முதலியவைகள் தீரும்.

237. வெடியுப்புக் கட்டு (வேறு)

பழந்தின்னி வௌவால் சதை 2 பலம் (70 கிராம்), வெடியுப்பு 2 பலம் (70 கிராம்), மூலப்புளி (அதாவதுயௌவனம் நரமலம் உலர்ந்தது) இம்மூன்றையும் கல்வத்தில் அரைத்து, இரும்புக் குகையில் வைத்துக் கொல்லுலையில் இட்டு ஊதி வெண்காரங் கொடுக்க, உப்பானது உருகிக் கண்விட்டாடும். அப்போது அதனை எடுத்துச் சாய்த்து கம்பியாகச் செய்து நன்றாய்க் குளிர ஆறின பின்பு எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு, துணைமருந்து முதலியவைகளெல்லாம் மேற் சொன்னவைகளேயாம்.

238. வெடியுப்புக் கட்டு (வேறு)

பால்துத்தம், மயில்துத்தம், படிக்காரம், வெண்காரம், இந்துப்பு, வீரம், இரசகர்ப்பூரம் இவை வகைக்கு 6 வராகன் எடை (21 கிராம்), இவை எல்லாவற்றையுங் கல்வத்தில் பொடித்துக் கோபுரந்தாங்கி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு மணி நேரம் அரைத்து 2 வராகன் எடை (7 கிராம்), வெடியுப்புக் கம்பியின் மேல் தடவித் தடவி வாட்டி, அந்த மருந்தெல்லாஞ் சென்ற பின்பு ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியில் புடமிட்டு, ஆறின பின் எடுக்கக் கம்பியானது கட்டுப் பட்டிருக்கும்.

குறிப்பு

மேற்கண்டபடி சித்தப்படுத்தின கம்பியை, ஆட்டெலும்பு மாவை அகலில் வைத்து அதற்கு மத்தியிலிட்டு, மேலகல் மூடி சீலை மண் செய்து முன்போற் புடமிடுவது உத்தமம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

239. வெடியுப்புச்சுண்ணம்

ஆதண்டை இலையை அரைத்து ஓவ்வொரு அங்குல கனமுள்ள இரண்டடைகளாகத் தட்டி, அது கொள்கிறவரையில் வெடியுப்புக் கம்பிகளையடுக்கி அதன் மீது மற்றொரு அடையையும் வைத்து, இரண்டையும் பொருந்தும்படியாகச் செய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து கொல்லுலையில் வைத்து, ஓடு சிவக்கிற வரையிலூதி எடுத்து ஆறவிட்டுக் கவசத்தைப் பிரித்தெடுக்க, வெடியுப்பானது சுண்ணமாகியிருக்கும்.

அளவு:- 3 முதல் 5 குன்றிமணி எடை,

துணைமருந்து :- வெள்ளரிக்காயை வதக்கிப் பிழிந்த சாறு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு, சோம்புத்தீநீர், சோம்புக் குடிநீர், நெருஞ்சிக் குடிநீர், வெள்ளரிக்காய் விதையை அரைத்துப் பிழிந்த பால், வெள்ளாட்டுப் பால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- நீர்க்கட்டு, வயிற்றுவலி, பாண்டு, சூதகக் கட்டு, நீர்க்கோர்வை முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :- உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்,

240. வெடியுப்புச்சுண்ணம் (வேறு)

நாய் மண்டையோடு, அதன் விலாவெலும்பு இவ்விரண்டையுஞ் சேர்த்திடித்து மாவாக்கி, ஓர் அகலில் இரண்டங்குல கனம் பரப்பி அது கொள்ளுகிற வரையில் வெடியுப்புக் கம்பிகளை வைத்து, அதன் மீது மேற்படி எலும்பின் மாவை இரண்டங்குல கனம் போட்டுச் செம்மையாக அழுத்தி மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியில் புட

யிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்க, கட்டியானது உருகிச் சுண்ணமாகியிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு

மேற்படி வெடியுப்புக் கம்பிகளில் கொஞ்சம் வீரத்தை உமிழ் நீரிலரைத்து, மேற்கண்டபடி புடமிட்டால் கடுங்காரச் சுண்ணமாகும். இந்தக் கடுங்காரச் சுண்ணத்தை உமிழ்நீரிற் குழைத்துத் துருசுக் கட்டிக்குக் கவசித்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி இரண்டு சீலைமண் செய்து இலகு புடமிட துருசுச் சுண்ணமாகும். இந்தத் துருசுச் சுண்ணமானது வாதம், வைத்தியம் என்னும் இருவகைகளுக்குமாகும்.

241. வெடியுப்புச் சுண்ணம் (வேறு)

கப்பிவெடியுப்பு 1 பலம் (35 கிராம்), இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிறுசின்னி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து, வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபங்கெடை வறட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் முதலியவை மேற் கண்டவைகளேயாம்.

242. வெடியுப்புச் சுண்ணம் (வேறு)

காற்படி கொள்ளும்படியான கலயத்தில் இரண்டரைப் பலம் ($87\frac{1}{2}$ கிராம்), கம்பி வெடியுப்பைப்போட்டு அந்தக் கலயம் நிறையக் காட்டுக்கோவையிலைச் சாற்றை விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்து கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்கச் சுண்ணமாகி இருக்கும். புடத்தைக் காற்றில்லாத இடத்தில் போடவேண்டும். நெருப்பு பதமாயிருந்தால்தான் செம்மையாகப் பற்பமாகும். நெருப்பானது மிகினும், குறையினும் பதமல்ல. ஆகையால் இதில் புடம் போடும் காரியத்தில் சற்று கவனத்துடன் நிதானித்துப் போடவேண்டும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்சொன்னவைகளேயாம்.

2 43. வெடியுப்புச்சுண்ணம் (வேறு)

ஆட்டுத் தலையெலும்பு, ஆட்டலகின் எலும்பு ஆகியவைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி, ஒரு அங்குல கனம் பரப்பி அதன்மீது அது கொள்ளுகிற வரையில் கம்பியுப்பைப் பரப்பி, அதன் மீது மேற்படி எலும்புச் சாம்பலை ஒரு அங்குல கனம் பரப்பி, அழுத்தி விட்டு மேலகல் மூடிச் சீலைமண் செய்யாமல் கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம். இன்னும் எல்லா நோய்களுக்கும் இதனை ஆரம்பத்தில் உபயோகிக்கலாம்.

244. வெடியுப்புச்சுண்ணம் (வேறு)

மாட்டு மண்டை நெற்றியோட்டிற்குக் காற் பங்கெடை வெடியுப்பை உத்தாமணிச் சாற்றாலரைத்துப் பூசிக் கனத்த புடமிட அந்தச் சாம்பலானது நன்றாக வெளுத்துப் போகும். இதனையெடுத்துப் பொடித்துச் சுமார் 1 பலம் (35 கிராம்) தூளை ஒரு கலயத்திலிட்டு அதன் மீது ஒரு பலம்வெடியுப்புக்கம்பியை வைத்து அதன் மீதும் மேற்படி ஒரு பலம் தூளை வைத்தழுத்திச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய்து சமையலடுப்பில் புதைத்து, ஆறு வேளை அதிற் சமைத்துப் பின்பு எடுத்துப்பார்த்தால் உப்பானது விரிந்து மலர்ந்திருக்கும்.

அளவு. துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு.

மேற்படி சுண்ணத்தில் கொஞ்சம் எடுத்து சதாப்பிலைச் சாற்றை விட்டு அரைத்துச் சல்லிக்குப் பூசி உலர்த்திச் சிறு ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து ஐந்துபலம் வறட்டியில் புடமிட்டு, ஆறின பின் சல்லியை எடுத்து முன் போல் வெடியுப்புச் சுண்ணத்தில் சதாப்பிலைச்சாற்றை விட்டு அரைத்துப்

பூசி உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடிச் சீலை மண் செய்து உலர்த்திப் பத்து பலம் வறட்டியில் புடமிட வேண்டும். மூன்றுந் தடவையும் முன் போலவே செய்து பதினைந்து பலம் வறட்டியிலும் நான்காவது புடம் இருபது பலம் வறட்டியிலும் புடமிட்டு எடுக்கச் சல்லியானது பின் ஊறல் அற்றுப் போய்ச் சுத்தமாய் இருக்கும். விருப்பப் படி உபயோகித்துக் கொள்ளலாம்.

245. வெடியுப்பாதிச் சுண்ணம்

வெடியுப்பு, வெண்காரம், அவையம் வைத்த அண்டத் தோல், பலகறை, கர்ப்பூரசிலாசத்து, சீனக்காரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), இவை எல்லா வற்றையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து, வில்லை செய்து உலர்த்திக் கற்சுண்ணாம்பு குகையில் வைத்து மேலும் கற் சுண்ணாம்புச் சில்லிட்டு ஒரு சீலை மண் செய்து கவசத்தின் நான்கு பங்கு எடை வறட்டியில் புடமிட்டு, ஆறின பின் எடுக்க எல்லாம் சுண்ணமாகி இருக்கும்.

அளவு :- $\frac{1}{8}$ முதல் 1 வராகன் எடை.

துணை மருந்து :- இளநீர், முள்ளங்கிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- கல்லடைப்பு, சதையடைப்பு, நீர் அருகல், நீர்க் கட்டு ஆகியவைகள் தீரும்.

246. வெடியுப்புச் செந்தூரம்

கம்பி வெடியுப்புக் கட்டி 1 பலம் (35 கிராம்), வெங்காயத் தாளின் சாறு $\frac{1}{4}$ படி, கட்டியை ஒரு கலயத்தில் போட்டு மேற்படி சாற்றைக் கலயத்தின் வாய் மட்டம் இருக்கும்படியாக விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலை மண் செய்து கலயத்தில் இருக்கிற சாறு சுண்டும்படியாகப் புடமிட வேண்டும். ஆறின பின்பு மேற்படி வெடியுப்பை எடுத்துக் கல்வத்தில் இட்டுப் பொடித்து, மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து, வில்லை தட்டி உலர்த்தி அகலில் இட்டு மேலகல் மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கு எடை வறட்டியில் புடமிட்டு, ஆறின பின் எடுத்து முன் போல் சாற்றை விட்டு அரைத்து, முன் போல் புடமிடவும். மூன்றும் தடவையும் அவ்விதமே புடம் இடவும் செந்தூரமாகி இருக்கும்.

அளவு :- 4 முதல் 8 குன்றி மணி எடை.

துணைமருந்து :- இளநீர், முள்ளங்கிக் கிழங்குச் சாறு. தென்னம் பாளைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, நெருஞ்சிக் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- நீர்க்கட்டு, நீரெரிச்சல், பிரமேகம், பாண்டும் குன்ம நோய், வயிற்று வலி முதலியவைகள் தீரும். இன்னு அநேக நோய்களுக்கும் ஆகும்.

247. வெடியுப்பாதிச் செந்தூரம்

வெடியுப்பு 8 பலம் (280 கிராம்), கெந்தகம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), சங்குத் தூள் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இரசம் 2 வராகன் எடை (7 கிராம்), லிங்கம் 2 வராகன் எடை (7 கிராம்), இரசகர்ப்பூரம் 2 வராகன் எடை (7 கிராம்), இரச செந்தூரம் 2 வராகன் எடை (7 கிராம்) எலுமிச்சம் பழச்சாறு 1 படி.

செய்முறை :- மேற்படி சரக்குகளில் தூய்மை செய்ய வேண்டியவைகளை தூய்மை செய்து எல்லாவற்றையும் பொடித்து ஒன்றாகச் சேர்த்து, எலுமிச்சம் பழச்சாற்றை ஒரு சட்டியில் விட்டு அதில் போட்டுச் சிறு தீயாக எரித்துச் சாறெல்லாம் சுண்டின பிறகு கீழே இறக்கிக் கிண்டிவர எல்லாம் சிவத்து தூளாகி விடும். இதனை எடுத்துக் குப்பியில் பத்திரப் படுத்த வேண்டும்,

அளவு:- $\frac{1}{8}$ முதல் $\frac{1}{4}$ வராகன் எடை,

துணைமருந்து :- இளநீர், முள்ளங்கிச்சாறு, நெருஞ்சிச்சாறு, வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால், பன்னீர், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்

தீரும்நோய்கள் :- நீர்க்கட்டு, நீரெரிச்சல், பிரமேகம், பாண்டு, குன்ம நோய், வயிற்றுவலி, பழையசுரம், மேக சுரம் முதலியவைகள் தீரும்.

248. வில்லையுப்பு

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 16 பலம், (560 கிராம்), நெல்லிக் காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்).

செய்முறை :- இரும்புப் பாண்டத்தை வெள்ளையாகத் துலக்கி அதில், மேற்படி கம்பியுப்பைப் பொடித்துப் போட்டு அடுப்பின் மீதேற்றிச் சிறு தீயாக எரித்து வர, உப்பானது உருகி தண்ணீர் போல் இருக்கும் சமயத்தில் கெந்தகத்தைத் தூள் செய்து ஒவ்வொரு சிட்டிகையாக அதில் சுருக்குக் கொடுக்க வேண்டும். சுருக்குக் கொடுத்துக் கெந்தியானது பற்றி எரிந்தடங்கின பின்பு மறுபடி கொடுத்து கெந்தகமெல்லாஞ் சென்ற பின்பு, உப்பானது தண்ணீரைப் போல உருகியிருக்குஞ் சமயத்தில் ஒரு இரும்புக் கரண்டியைச் சூடேற்றி அதனால் முகந்து சூடேற்றின இரும்பு அச்சில் வார்த்து, வில்லைகளாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். உபயோகிக்கும் போது இதனைத் தூள் செய்து கொள்ளவும்.

அளவு :-$1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :- இளநீர், முள்ளங்கிச்சாறு, வெள்ளரிக்காயை வதக்கிப் பிழிந்தசாறு, நெருஞ்சி வேர்க்குடிநீர், யானை நெருஞ்சிக் கோழை, பேதாளுக்கோழை முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- நீர்க்கட்டு, நீரெரிச்சல், எரிச்சலான மேகங்கள், ஊரல், குடல், எருவாய், நீர்த்தாரை முதலிய சூடு சம்பந்த நோய்களெல்லாம் தீரும். இதைச் சால்புரநீலம் என்று சொல்வதுண்டு.

249. வெடியுப்புச் செயநீர்

வெடியுப்பு 16 வராகன் எடை (56 கிராம்), பழம்புளி $10\frac{1}{2}$ வராகன் எடை ($36\frac{3}{4}$ கிராம்), வெண்காரம் 2 வராகன் எடை (7 கிராம்), நவச்சாரம் 2 வராகன் எடை (7 கிராம்), கற்பூரம் வராகன் எடை (7 கிராம்), துருசு 2 வராகன் எடை (7 கிராம்) எலுமிச்சம் பழச் சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :- இவை எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டுப் பொடித்துப் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து, வில்லை தட்டி வெய்யிலில் வைத்து உலர்த்திப் புது ஒட்டில் வைத்து அடுப்பேற்றி எரிக்க வில்லைப் பற்றி எரிந்து சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்துடன் ஒரு பங்கு பச்சைச் சாரத்தை சேர்த்துப் பொடித்து பனியில் வைக்க செயநீராகும்.

இந்த செயநீரில் சரக்குகளைத் தோய்த்து நெருப்பனலில் வாட்ட அவை கட்டுப் படும். அவைகளை மேற்படி செயநீரை விட்டு அரைத்துப் புடமிடச் சுண்ணமாகும்.

அளவு :– மேற்படி செயநீர் 4 முதல் 10 துளிகள்.

துணைமருந்து :- எலுமிச்சம் பழச்சாறு, எலுமிச்சம் பழ மணப்பாகு, வெள்ளரிக்காயை அனலில் வாட்டிப் பிழிந்த சாறு, வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்த பால், நெருஞ்சி வேர்க் குடிநீர், இளநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- நீர் அருகல், நீர் எரிச்சல், நீர்க் கட்டு, சதையடைப்பு, கல்லடைப்பு, பிரமேகம், நீர்த்தாரை அழலை, நீர்த் தாரைப் புண் முதலியவைகள் தீரும்.

250. வெடியுப்புச் செயநீர் (வேறு)

வெடியுப்பு 4 பலம் (140 கிராம்), பழம்புளி 4 பலம் (140 கிராம்), கர்ப்பூரம் 1 பலம் (35 கிராம்), நவச்சாரம் 1 பலம் (35 கிராம்), சீனக் காரம் 1 பலம் (35 கிராம்), அப்பளக்காரம் 1 பலம் (35 கிராம்), நாயுருவியுப்பு 1 பலம் (35 கிராம்), அன்னபேதி 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- சரக்குகளையெல்லாம் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து புளியையுஞ் சேர்த்துக் கல்லுரலில் மர உலக்கையாலிடித்துப் பிறகு கல்வத்திலிட்டு மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுக சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து வில்லை தட்டியுலர்த்திச் சட்டியில் வைத்தெரிக்க எல்லாஞ் சுண்ணமாய்விடும்.

இந்தச் சுண்ணத்துடன் நான்கிலொரு பங்கு பச்சைச் சாரத்தைச் சேர்த்துப் பொடித்துப் பனியில வைக்க, செயநீராகும். இதனை பத்திரப்படுத்தவும்.

இந்தச் செயநீரில் சரக்குகளைத் தோய்த்து நெருப்பில்வாட்டக் கட்டப்படும். அவற்றை மேற்படி செயநீரை விட்டரைத்துப் புடமிடச் சுண்ணமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

251. வெடியுப்புத் திராவகம்

(அ) வெடியுப்பு 30 பலம் (1050 கிராம்), சீனக்காரம் 25 பலம் (875 கிராம்), துருசு, சவுக்காரம், வீரம், பூநீறு, நாயுருவியுப்பு, வெள்ளறுகு உப்பு, வாழைச்சருகுப்பு, உவர் மண்ணுப்பு, கொடி வேலியுப்பு, இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இந்துப்பு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்).

(ஆ) பூநீறு, வீரம், சங்குச்சுண்ணம், வெள்ளைப் பாடாணம் இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :- (அ)விலுள்ள சரக்குகளையெல்லாம் தனித் தனி பொடித்து ஒன்றாகச் சேர்த்தரைத்து மூன்று பாகமாகச் செய்து ஒரு பாகத்தை வாலையிலிட்டுப் பாகப்படி திராவகமிறக்கி அதில் மறு பாகத்தைச் சேர்த்துத் திராவகத்தையிறக்கி அதில் மற்றொரு பாகத்தையுஞ் சேர்த்துத் திராவகமிறக்கிக் கொள்ளவேண்டும்.

இந்தத் திராவகத்தில் (ஆ)விலுள்ள சரக்குகளைப் பொடித்துப் போட்டு தலைமயிரிலுள்ள எண்ணெய்க்கசிவு முதலியவைகளைச் சிகைக்காய், சவுக்காரம் ஆகிய இவைகளாற் கழுவித் தூய்மை செய்து மேற்படி திராவகத்தில் நனைந்து வெய்யிலிற் காய வைக்க வேண்டும். நன்றாய்க் காய்ந்த பின்பு மறுபடியும் முன் திராவகத்தில் நனைத்துக் காயவைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவைகள் நனைத்துக் காயவைக்க மயிர் நொறுங்கிப் போகும்.

இந்த நொறுங்கின மயிருக்குச் சமனெடை மேற்படி திராவகத்தைச் சேர்த்துக் குப்பியிலிட்டு இரண்டு மூன்று நாள் குலுக்கி வர எல்லாம் திராவகமாய் விடும்.

இந்தத் திராவகத்தில் எந்தச் சரக்கையும் நனைத்து வாட்ட அந்தச் சரக்குக்கட்டுப்படும். பிறகு இதனை மேற்படி திராவகத்தை விட்டரைத்துப் புடமிடக் கடுங்காரச் சுண்ணமாகும்.

மேற்படி பாகப்படி செய்த மயிரானது அநேக முறைகளுக்கு உபயோகமாகும். அம்முறைகளை இனி உடனே எழுதப்படும் இரசவாதசிந்தாமணியில் எழுதுவோம். மயிரை நொறுங்கச் செய்கிறது சாத்தியமான காரியமல்ல இது பெரும்பான்மையும் இரசவாத முறைகளுக்கும், வைத்திய முறைகளுக்கும் உதவுகிறபடியாலும் இங்கெழுதப்பட்டிருக்கின்றது. இதன் மர்மம் தெரிந்தவர்கள் அநேகர் இருப்பார்கள் ஆனபடியால், அவசியமானவர்கள் அவர்களிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்.

252. வெடியுப்பாதி நெய்

வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, இவ்வைந்தும் வகைக்கு 1பலம் (35 கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு 1 பலம் (35 கிராம்), நாட்டு நவச்சாரம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), சிற்ருமணக்கெண்ணெய் $\frac{1}{4}$ படி, முற்றினவைகளும், பருமனுனவைகளுமான 8 தேங்காய்.

செய்முறை :- தேங்காய்களைப் பால் பிழிந்து மற்ற சரக்குகளையும் பொடித்துப் போட்டு எண்ணெயையுஞ் சேர்த்து வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகு திரள் பதத்தில் நெய்யை வடித்துத் தனியே குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு :- 4 முதல் 5 துளிகள்.

துணைமருந்து ;- வெந்நீர், இளநீர், தேநீர், காப்பிபானம், காய்ச்சின பசுவின்பால், சுக்குக்குடிநீர் சோம்புத்தீநீர், சருக்கரை, வெல்லம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- வெட்டை நோய், குன்ம நோய், வாயு நோய், செரியாமை நோய், சூலை நோய், கை கால் பிடிப்பு, ஓடு வாய்வு, சுரங்கள், சன்னிகள், கிருமி நோய், சோகை முதலிய அநேக நோய்கள் தீரும். சுருங்கச் சொல்லில் எல்லா வகை நோய்களுக்கும் இதனை உபயோகிக்கலாம். மருத்துவ மறைவு முறைகளில் இது ஒன்று, எந்தச் சமையத்திலும் இது உதவுகிற மருந்து ஆகையால் அனுபவசாலியான வைத்தியர்கள் இதனை எப்பொழுதும் சர்வ சித்தமாய் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

253. செந்தூரத் திராவகம்

வெடியுப்பு பதினைந்து பங்கு, சீனக்காரம் பத்துப் பங்கு, நவச்சாரம் ஒரு பங்கு, அன்ன பேதி ஒரு பங்கு, துருசு அரைப் பங்கு, இந்துப்பு அரைப் பங்கு, கறியுப்பு அரைப் பங்கு.

செய்முறை :- இவைகளை எல்லாம் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து இரண்டு பாகம் ஆக்கி ஒரு பாகத்தை வாலையில் இட்டுத் திராவகம் இறக்கி அதில் மறு பாகத்தைச் சேர்த்துத்திராவகம் இறக்கிக் கொள்ளவும்,

பயன்படுத்துதல் :- குப்பியில் வைத்து எரித்துச் செந்தூரிக்க வேண்டிய முறைகளுக்கு எல்லாம் இந்தத் திராவகத்தை விட்டு

அரைத்து எரிக்க வேண்டும். சாதாரணமாய் அகத்தியர் ஆயிரத்தைந் நூற்றில் சொல்லி இருக்கிற சிந்தாமணி முதலிய செந்தூரங்களுக்கெல்லாம் இதுவே குருத் திராவகமாம். அந்நூலில் சொல்லி இருக்கிற திராவகங்கள் அவ்வளவாக உபயோகப் படாது. சில சமயங்களில் செந்தூரமாகிறதேயில்லை. கைபாகமாக இந்தத் திராவகத்தையே குப்பிவைப்புச் செந்தூரங்கட்கு உபயோகித்து வருகிற படியால், எல்லோருக்கும் உபயோகம் ஆகும்படி இங்கு எழுதி இருக்கின்றோம். சந்தேகம் உள்ளவர்கள் பரிசோதித்துப் பார்க்கலாம்.

254 அஷ்டகுன்மத் திராவகம்.

வெடியுப்பு 8 பலம் (280 கிராம்), சீனக்காரம் 3 பலம் (105 கிராம்), வெண்காரம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்). பூநீறு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), நவச்சாரம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) சவுக்காரம் 2 வராகன் எடை (7 கிராம்).

செய்முறை :- இவை எல்லாவற்றையும் தனித் தனி தூள் செய்து ஒன்றாகக் கலந்து வாலையில் இட்டுப் பாகப்படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

அளவு ;- 8 முதல் 10 துளிகள்.

துணைமருந்து :- சுக்குக்குடிநீர்; வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால், நெருஞ்சிவேர்க்குடிநீர், தென்னைவேர்க் குடிநீர், பனைவேர்க் குடிநீர் முதலியவைகளாகும்.

தீரும்நோய்கள் :- குன்மம், நீரடைப்பு, சதையடைப்பு, பாண்டு, மகோதரம், பெருவயிறு, உருத்ரவாயு, மதுமேகம், நீரிழிவு, ஆகியவைகள் தீரும்.

குறிப்பு :- இந்தத் திராவகத்தை மூன்றுதடவை மடக்கிச் செய்தால் இரசங் கட்டுப்படும்.

255. நவலோகச் செந்தூரச் செயநீர்

ஐந்தாங்காய்ச்சல் வெடியுப்பு 10 பலம் (350 கிராம்), அட்டுப்பு 5 பலம் (175 கிராம்), சீனக்காரம் 5 பலம் (175 கிராம்), நவச்சாரம், 5 பலம் (175 கிராம்), துருசு 5 பலம் (175 கிராம்), கெந்தகம் 3 பலம் (105 கிராம்), எவச்சாரம் 3 பலம் (105 கிராம்) அன்னபேதி $2\frac{1}{4}$ பலம்- ($78\frac{3}{4}$ கிராம்), பழம் புளி 15 பலம் (525 கிராம்).

செய்முறை:- இவை எல்லாவற்றையும் தனித்தனி தூள் செய்து கெந்தகத்தைத் தனியே வைத்துக் கொண்டு மற்ற சரக்குகளையும் புளியையுஞ் சேர்த்து மரஉரலில் மரவுலக்கையாலிடித்து எடுத்துக் கெந்தகத்தைச் சேர்த்துக் கலந்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்துலர்த்திச் சட்டியிலிட்டு எரித்துச் சுண்ணமாக்கிப் பீங்கானில் வைத்துச் செய நீராக்கிக் கொள்ளவும். அல்லது, பூமியில் புதைத்துச் செய நீராக்கிக் கொள்ளவும்.

பயன்படுத்துதல் :- நவலோகத்தையும் இந்தச் செயநீரால் செந்தூரமாக்கிக் கொள்ளலாம். தேவையான உலோகங்களை கெந்தகத்தை அல்லது தாளகத்தைச் சுருக்குக்கொடுத்து வெட்டையாக்கி இந்தத் திராவகத்தை விட்டரைத்துப் புடமிடச் செந்தூரமாகும். அந்தந்தச் சரக்குகளுக்குத் தகுந்தப்படி அந்தந்த நோய்களுக்கு உபயோகிக்கலாம்.

வெடியுப்புத் தூய்மை

வெடியுப்பு ஒருபங்கு, கடல்தண்ணீர் அல்லது கிணற்றுநீர் இரண்டுபங்கு.

வெடியுப்பைக் கல்வத்திலிட்டு நுண்மையாகப் பொடித்து மேற்படி நீரில் கரைத்துக் கொஞ்ச நேரம் வைத்தால் மேலே தெளிவிருக்கும். அந்தத் தெளிவையிறுத்து இரும்புச் சட்டியில் விட்டுக் காய்ச்ச உப்பாகும். அந்த உப்பை முன்போற் பொடித்து முன்போலிரண்டு பங்கு தண்ணீரில் கரைத்துத் தெளிவிறுத்து தெளிவை முன்போற் காய்ச்சி உப்பாக்கி முன்போல் இரண்டு பங்குநீரில் கரைத்துக் காய்ச்சி எடுத்துக் கொள்ள வெடியுப்பானது தூய்மையாயிருக்கும். இவ்விதம் தூய்மை செய்த உப்பை மேற்கண்ட பாகங்களில் உபயோகித்துக் கொண்டால் தனிக்குணத்தைத் தரும்.

வெடியுப்புத் தூய்மை (வேறு)

மேற்கண்ட பாகப்படியே வாழைக்கிழங்குச்சாற்றில் மூன்று தடவை செய்தால் திறமான தூய்மையாகும். ஏழு தடவை செய்தால் திறமான தூய்மையாவதுடன் வெடியுப்புக் கட்டாகும். வைத்திய வாதமுறைகளில் உபயோகித்துக் கொள்ளலாம்.

256. வெடியுப்புக் கட்டு (வேறு)

தேவையான அளவு வெடியுப்பை இரும்புச் சட்டியில் போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து வெடியுப்பு உருகினவுடன், அதனைத் திரியால் கொளுத்திவிட வேண்டும். அது எரிந்தடங்கின பின்பு அதை எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும், இவ்விதம் செய்யப்பட்டதை ஒருவகை வெடியுப்புக் கட்டென்பார்கள்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய்கள் முதலியவைகளெல்லாம் 236-ல் சொல்லி இருக்கிறபடியேயாம்.

257. வெடியுப்புக் கட்டு (வேறு)

வெடியுப்பு ஒருபங்கு, உலர்ந்த கஞ்சா மூன்று பங்கு.

செய்முறை :-கஞ்சாவைத் தூள் செய்து இரண்டுபாகமாகச் செய்து ஒருபாகத்தை இரும்புச் சட்டியில் வைத்து அதன்மீது மறு பாகத்தை வைத்து மூடி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து அதைக் கொளுத்திவிட வேண்டும். கஞ்சாவானது எரிந்தடங்கினபின் ஆறவிட்டெடுக்க வெடியுப்பானது கட்டுப்பட்டிருக்கும்.

அளவு. துணைமருந்து, தீரும்நோய்கள் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

258 வெடியுப்புக் கட்டு (வேறு)

வெடியுப்பு ஒருபங்கு, உலர்ந்த இலந்தையிலை ஆறுபங்கு

செய்முறை :- இலந்தையிலையை ஆறு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை இரும்புச் சட்டியில் பரப்பி அதன் மீது வெடியுப்பை ஐந்து பாகமாகச் செய்து ஒரு பாகத்தைப் பரப்பி அதன் மீது இலந்தை இலையின் ஒரு பாகத்தைப் பரப்பி அதன் மீது வெடியுப்பின் இன்னொரு பாகத்தைப் பரப்பவேண்டும். இவ்விதம் ஓரடுக்கு இலந்தை இலையையும் ஓரடுக்கு வெடியுப்பையுமாக அடுக்கடுக்காகப் பரப்பி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நெருப்பினால் கொளுத்தி விடவும். எரிந்தடங்கின பின்பு ஆற விட்டெடுக்க வெடியுப்பானது கட்டுப்பட்டிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலிய வைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

259. வெடியுப்புக் கட்டு (வேறு)

வெடியுப்பு 1 பலம் (35 கிராம்), எருக்கம் பால் 6 பலம் (21 கிராம்).

செய்முறை :- வெடியுப்பை இரும்புச் சட்டியில் போட்டு மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்துக் கட்டியைப் புரட்டிக் கொடுத்துக் கொண்டு வரவேண்டும். பாலெல்லாஞ் சுண்டின பிறகு குளிர ஆற வைத்தெடுக்க வெடியுப்பானது கட்டுப் பட்டிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு :- மேற்கண்ட பாகப்படியே புங்கன் வேர்ப்பட்டைப் பாலில் வெடியுப்பைக் கட்டி உபயோகிக்கலாம்.

260. வெடியுப்புக் கட்டு (வேறு)

வெடியுப்பு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), கஞ்சா 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), ஓமம் 3 வராகன் எடை($10\frac{1}{2}$ கிராம்), பின்னுள்ள இரண்டு சரக்கையும் தூள் செய்து வைத்துக் கொள்ளவும்.

செய்முறை:- மேற்படி வெடியுப்பை இரும்புச் சட்டியில் வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து வெடியுப்பானது உருகினவுடன் முன் தூளில் ஒரு சிட்டிகையெடுத்து வெடியுப்பில் சுருக்குக் கொடுக்கவேண்டும். அது எரிந்தடங்கின பின்பு மறு சிட்டிகையை சுருக்குக் கொடுத்து தூளெல்லாஞ் சென்ற பின்பு இறக்கி ஆறவிட்டெடுத்துக் கொள்ளவும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகள் மேற்கண்டவைகளே.

குறிப்பு :- வெடியுப்பை நெருப்பில் போட்டால் பற்றி எரியாது. ஒருவேளை அப்படிப் பற்றியெரிந்தால் முன் கொடுத்ததில், அரைப் பங்கு சுருக்கு கொடுத்தால் உயர்ந்த கட்டாகிவிடும். வாதம், வைத்தியமாகிய இருமுறைகளுக்கும் உபயோகமாகும்.

261 மனோசிலை செந்தூரம்

மனோசிலைத் தூய்மை:- தேவையான அளவு மனோசிலையைச் சிறுநீரில் போட வேண்டும். சிறுநீரானது மனோசிலைக்கு மேல்

நாலங்குலம் இருக்க வேண்டும். அதாவது மனோசிலை யானது சிறுநீருக்குள் நாலங்குலம் இருக்க வேண்டும். இவ்விதம் எட்டுநாள் ஊறப்போட்டு ஒன்பதாம் நாள் கழுவி எடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்வதே மனோசிலைத் தூய்மையாகும்.

மேற்கண்டபடி தூய்மை செய்த மனோசிலை 1 பலம் (35 கிராம்) கீழ்ச்சொல்கிறபடி தூய்மைப் படுத்தின கிளிஞ்சல் சுண்ணம் 4 பலம் (140 கிராம்), ஆவாரை இலையை அரைத்த விழுது 2 பலம் (70 கிராம்).

செய்முறை:- மனோசிலைக் கட்டிக்கு ஆவாரந்தழை விழுதைக் கவசஞ்செய்து ஒரு அகலில் இரண்டுபலம் கிளிஞ்சல் சுண்ணத்தைப் போட்டு அதன் நடுவில் முன் கவசத்தை வைத்து அதன்மேல் 2-பலம் (70 கிராம்), கிளிஞ்சல் சுண்ணத்தை வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண் செய்து ஈரத்தை உலரத்திக் கவசத்தின் இருபதுபங்கு வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

அளவு:- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :- கருஞ்சீரகத்தூள், அதாவது கருஞ்சீரகத்தை வறுத்திடித்து மெல்லிய துணியில் சலித்தத் தூள் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$கிராம்), நெய் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்); இவ்விரண்டையும் கலந்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண தோஷ் குட்டம், தளிர்ச்சுரம், மூச்சு முட்டல் ஆகியவைகள் தீரும்.

கார்போக அரிசி 1 பலம் (35 கிராம்). இதனைத்தூள் செய்து கல்வத்திலிட்டுத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து இளகிய பதமாக எடுத்துக் கொள்ளவும். இந்த இளகம் 1 வராகனெடை. ($3\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து நாற்பது நாள் உட்கொண்டுவர வெண்குட்டம், சிலந்தி நோய்,★ அதிகள்ளிகா நோய் ஆகியவை தீரும்.

மருத்துணவு :- உப்பு, புளி, புகை, புணர்ச்சி, முதலியவைகளை நீக்கிவைப்பது உத்தமம். அப்படிக்கூடாத வகையில் உப்பை வறுத்தும், புளியைச் சுட்டுஞ் சேர்த்துக் கொள்ள வேண்டும்:

கிளிஞ்சல்சுண்ணம் :- உழமண் தேவையான அளவு; இதை இரண்டுபங்கு சிறுநீரில் கரைத்து அதில் மூன்றங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாகக் கிளிஞ்சல்களைப் போட்டு எட்டு நாளூறவைத்து

★ கள்ளிப்பூக் கிரந்திநோய்.

ஒன்பதாம்நாள் கொல்லுகலயில் வைத்தூதினல் எல்லாஞ்சுண்ண மாகி விடும் இந்த சுண்ணத்தை மேற்சொல்லி இருக்கின்ற மனோசிலைச் செந்தூர முறையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

262. மனோசிலைப் புகை

மேற்கண்டபடி தூய்மை செய்த மனோசிலை தேவையான அளவு இதனை ஓட்டில் வைத்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்துக் கல்வத்தி லிட்டுப் பொடித்து மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

பயன்படுத்துதல் :-ஒரு இரும்புக் கரண்டியில் கரிநெருப்பைப் போட்டு அதன்மீது மேற்படி வில்லையில் கொஞ்சமெடுத்துத் தூள் செய்து போடப் புகையும். அந்தப் புகையை வெண்குட்டத்தால் வெளுத்திருக்கிற பாகத்தில் புகைபடும்படி செய்யவேண்டும். இவ் விதம் தொடர்ச்சியாகச் சிலநாள் செய்ய வெள்ளை மறைந்து உடல் நிறமுண்டாகிவிடும்.

மருத்துணவு :- மேற்கண்டபடி புகைபிடிக்கும்போதும் முன் சொன்னபடி பத்தியமாக இருக்க வேண்டும்.

மிருதார்சிங்கித் தூய்மை

இத்தூய்மை முறைகளெல்லாம் நமது இரசவாத சிந்தாமணி முதற்பாகத்தில் பல பாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால், அவசியமானவர்கள் அதைப் பார்த்துக் கொள்ள லாம். இதை படிப்பவர்களுக்கு உபயோகப்படும்படியாக இங்கு எழுதுவோம்.

மிருதார் சிங்கியைக் கல்வத்திலிட்டுப்பொடித்து தண்ணீரை விட்டு ஒரு சாம நேரமரைத்து ஒரு பாத்திரத்தில்போட்டு இன்னம் கொஞ்சம் தண்ணீரைவிட்டு நன்ருகக் கலக்கி மறு பாத்திரத்தில் வைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் இரண்டு மூன்று தடவை நன்ருகக் கலக்கிக் கொண்டும் வரவேண்டும். நான்காம் நாளெடுத்துத் தெளிவையிறுத்து நீக்கிவிட்டு அடியிலிருக்கும் வண்டலை வெய்யிலிலுலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும் இது ஒருவகைத் தூய்மையாம்.

மிருதார்சிங்கி தூய்மை (வேறு)

மிருதார்சிங்கியைப் பொடித்து ஊமத்தையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைக்க வேண்டும். பிறகு வெய்யிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். மிருதார்சிங்கி யானது தூய்மையாகியிருக்கும்.

263. மிருதார்சிங்கி பற்பம்

தூய்மை செய்த மிருதார்சிங்கி 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்). கஞ்சாயிலை பலம்-3 பலம் (105 கிராம்).

செய்முறை- கஞ்சா இலையை வெண்ணெய் போலரைத்து மிருதார்சிங்கிக்குக் கவசித்து அதன்மீது இரண்டு சீலைமண் செய்து 50 பலம் (1750 கிராம்) வறட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும். அப்படிப் பற்பமாகாதிருந்தால் முன்போல் இன்னம் ஒரு தடவையும் புடமிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 1 முதல் 2 அரிசியெடை,

துணைமருந்து:- வெண்ணெய், பாலேடு, நெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள்:- பாம்புநஞ்சு, விரியன் நஞ்சு, தேள், எலிக்கடி நஞ்சு ஆகியவைகள் தீரும். வாயு சம்பந்தமான நோய் கப சம்பந்தமான நோய் ஆகியவைகள் தீரும்.

264. மிருதார்சிங்கி பற்பம் (வேறு)

தூய்மை செய்த மிருதார்சிங்கி 3 வராகனெடை-($10\frac{1}{2}$ கிராம்), தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் $10\frac{1}{2}$ பலம் ($367\frac{1}{2}$ கிராம்), எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- வெள்ளைப்பூண்டை எருக்கம்பால் விட்டரைத்து மேற்படி சிங்கிக்குக் கவசஞ் செய்து அதன்மீது இரண்டு மண் சீலை செய்து 25 பலம் (875 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்துக்கொள்ளவும்.

இரண்டாந் தடவையும் முன்போல் வெள்ளைப்பூண்டை எருக்கம்பால் விட்டரைத்துக் கவசஞ் செய்து அதன் மீது இரண்டு

மண்சீலை செய்து 22 பலம் (770 கிராம்) வறட்டியிற் புடமிடவும் இவ் விதம் மடக்கி மடக்கி வெள்ளைப்பூண்டை எருக்கம் பாலால் அரைத்து ஏழுபுட மிடவேண்டும். ஆனால், ஒவ்வொரு புடத்திற்கும் மூன்று பலம் வறட்டியைக் குறைத்துக் கொண்டே வர வேண்டும் ஏழு புடமிட்டானல் பற்பமாயிருக்கும்.

அளவு : $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :-வெண்ணெய், பாலேடு, நெய், தேன் முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள் :- வாயு சம்பந்தமான, நோய், கப சம்மந்த மான நோய், மூலநோய், வயிற்றுப்பூச்சிகள், நாட்பட்ட பிர மேகம், தொந்தப்பிரமேகம், ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி முதலியவைகளுண்டாகும்.

265. மிருதார்சிங்கி பற்பம் (வேறு)

மிருதார்சிங்கி 4 பலம் (140 கிராம்), சதுரக் கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு .

செய்முறை :- மிருதார்சிங்கியைக் கல்வத்திலிட்டு மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து வில்லை செய் துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய் துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கு வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு மூன் பாலைவிட்டு முன்போல் இரண்டு சாமரைத்து முன்போல் புடமிட்டு எடுத்து மூன்றுந் தட வையும் முன் போலவே புடமிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :-தேன். நெய்,வெண்ணெய், கருஞ்சீரகத்தூள் சீரகத்தூள், முதலியவைகளாகும்.

தீரும்நோய்கள் :-மேகவூறல், கிரந்திகள், புண்கள், கண்டமாலை, உடற்சொறி, பேய்ச்சொறி, முதலிய நோய்கள் தீரும்.

மருந்துணவு :- நோய்வலிமை, உடல்வலிமை முதலியவை களுக்குத் தகுந்தபடி இச்சாபத்தியமாகவும், இலகு பத்தியமாக வும், கடும் பத்தியமாகவும் ஏற்படுத்த வேண்டியது.

266. சுராங்குச பற்பம்

தூய்மையான மனோசிலை 4 வராகன் எடை (14 கிராம்), சங்கு 4 வராகன் எடை (14 கிராம்), மிளகு 4 வராகன் எடை (14 கிராம்), இவை எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் போட்டு இண்டலைப் பலம் வெள்ளாட்டு நீரை விட்டு மூன்றுநாள் ஊறவைத்து நாலாம் நாள் அந்த நீரையே விட்டு மூன்று நாளரைத்து வில்லை செய் துலர்த்திச் சில்லிட்டுச் சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு வறட்டியில் புடமிட்டு எடுத்துக் கல்வத்திலிட்டு வெள்ளாட்டுச்சிறுநீரை விட்டு மூன்று நாளரைத்து முன்போல், வில்லை செய்துலர்த்தி முன்போல் புடம் போடவும். குளிர ஆறின பின் எடுக்கப் பற்பமாகி விடும்.

அளவு :- 1 முதல் 2 குன்றியெடை.

துணைமருந்து:- தேன், அரிசித்திப்பிலித்தூள்.

தீரும்நோய்கள்:- சுரங்கள், சுளை, இருமல், உளைமாந்தை முதலியவைகள் தீரும்.

267 சிங்கி எண்ணெய்

நான்கு வராகன் எடையுள்ள கட்டிகளாக நான்குபலம் மிருதார் சிங்கியை வாங்கி எருமைச் சாணியில் பொதிந்து ஒரு சட்டியில் வைத்து ஐந்து நாள் சென்று ஆறும் நாள் எடுத்துச் சாணியை நீக்கி வேறு புதிய சாணியில் பொதிந்து முன்போல் சட்டியில் ஐந்து நாள் வைத்து ஆறும் நாள் எடுத்துச் சாணியை நீக்கிவிடவும்; இவ்விதம் மடக்கி, மடக்கி ஆறு தடவைகள் சாணியில் வைத்தெடுத்து ஒரு பீங்கானில் போட்டு அவை ஆழ்ந்து கிடக்கும்படியாக பசுவின் கோமியத்தை விட்டு வெய்யிலில் வைத்துச் சுண்டின பிறகு கட்டிகளை எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். அந்தத் தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சிற்றுமணக்கெண்ணெய் 8 பலம் (280 கிராம்) இரண்டையும் கலந்து வைத்துக் கொள்வதே சிங்கி எண்ணெயாம்.

அளவு :- $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

தீரும்நோய்கள் :- ஊறல், கிரந்தி, புண், கண்டமாலை, சொறி, பேய்ச்சொறி முதலியவைகள் தீரும்.

துருசுத் தூய்மை

தேவையான அளவு காரியத்தை உருக்கி தேவையான துருசுக் கட்டிகளை, கட்டிகள் ஆழ்ந்து போகும் படியாகத் தோய்த்து எடுக்க வேண்டும். கொஞ்சம் ஆறவிட்டு மறுபடியும் முன்போல் தோய்த்தெடுக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினெரு தடவைகள் செய்யத் துருசானது தூய்மையாகி விடும்.

இவ்விதம் தூய்மை செய்யப்பட்ட துருசை, பற்பம், சுண்ணம் செந்தூரம் முதலிய முறைகளில் சேர்த்துக் கொள்வதனுல் எவ்வித குற்றமுமின்றிச் சிறந்த குணத்தையும், சிறப்பான குணத்தையும் கொடுக்குமென்பது நிச்சயம். ஆகையால் இதனை மருந்தாக உபயோகப் படுத்த விருப்பமுள்ளவர்கள் மேற்கண்டபடி தூய்மை செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

துருசுத் தூய்மை (வேறு)

தேவையான அளவு துருசைக் கல்வத்திற்பொடித்து தண்ணீரில் கரைந்துவிட வேண்டும். கொஞ்சம் தாமதித்து தண்ணீரை இறுத்து ஒரு பாத்திரந்தில் தனியே வைக்கவேண்டும். முன் அடியில் படிந்திருப்பதை முன்போலரைத்து முன்போல் தண்ணீரில் கலக்கி அந்த தண்ணீரில் இறுத்து முன்னிறுத்து வைத்திருக்கின்ற தண்ணீரில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாந்தடவை அடியிற் படிந்திருப்பதை முன் போலரைத்து முன்போல் தண்ணீரில் கலக்கி நீரை இறுத்து முன் நீரில் சேர்த்துக்கொள்ளவும். இவ்விதம்அரைத்தரைத்துக் கலக்கிக் கலக்கி வடித்த நீரை ஒன்ருகச் சேர்த்து வைக்க எல்லாம் அடியிற் படிந்து நீர் தெளிந்து போகும், இந்த தெளிந்த நீரை சிறுகச் சிறுக இறுத்து அடியிற் படிந்திருக்கும் வண்டலை வெய்யிலிலுலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்த துருசியானது தூய்மையாயிருக்கும்.

268. துருசுக்கட்டு

துருசைப் பொடித்து எருக்கம் பாலைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாம நேரமரைத்து உருண்டையாகத் திரட்டி 4 பங்கெடை சுண்ணும்பை அல்லது பூநீற்றுத்தூளை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஓர் ஓட்டில் வைத்து அதன்மீது இந்த உருண்டையை வைத்து மறு பாகத்தை அதன்மீது போட்டு மேலோடு மூடி

இரண்டு சீலைமண் செய்து கரி நெருப்பில் ஒரு மணிநேரம் வைத்தெடுத்து ஆறவைத்தெடுக்கத் துருசு கட்டாயிருக்கும். இது பெரும்பான்மையும் வாததிற்குபயோகமாகும்.

ஐங்காலல் பச்சை

மேற்கண்ட பாகப்படியே ஐங்காலல் பச்சையைத் தூய்மையுஞ் செய்து கொள்ளலாம். மேற்கண்ட பாகப்படியே கட்டியுங் கொள்ளலாம்.

269. துருசுப் பற்பம்

தூய்மை செய்த துருசு 1 பலம் (35 கிராம்), இதுஒரே கட்டியாக இருக்கவேண்டும். கோபுரந்தாங்கி இலைச் சாற்றில் மேற்படி கட்டியானது முற்றும் நனையும் படியாகத் தோய்த்து வெய்யிலில் வைத்து உலர உலர நனைத்து நனைத்து ஒருசாம நேரம் வெய்யிலில் வைத்து நன்றுயுலர்ந்த பின்பு மேற்படி இலையை அரைத்து ஒரு விரற்கனம் மேற்படி கட்டிக்குக் கவசஞ் செய்துலர்த்தி கரிநெருப்பில் வைத்து மேற்கவசம் கருப்பில்லாமல் வெந்தவாறே எடுத்து ஆற வைத்து எடுக்கத் துருசானது அலர்ந்த வெண்ணீறுய் இருக்கும். இதனைப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :-சுக்குக் குடிநீர், ஆடாதோடையிலைக்குடிநீர் கண்டங்கத்திரிக்குடிநீர், கடுக்காய்த்தோல்க் குடிநீர் அதிமதுரக்குடிநீர், அதிமதுரப்பால் பாவனம், (அதாவது) கொஞ்சம் அதிமதுரப்பாலை தாய்ப்பாலில் அல்லது பசுவின்பாலில் ஊறவைத்து அது நன்ருக ஊறினபின்பு அதில்கரைத்துக் கொள்வதேயாம். தாய்ப்பால், தேன் முதலியவைகளாம்,

தீரும்நோய்கள் :- தொண்டைக்கட்டு, நெஞ்சுக் கம்மல், இரைப்பிருமல், சுழிமாந்தம், கணைநோய், ருத்திரதிசைக்கபம் ஆகியவைகள் தீரும். கபக்கட்டானது நீராயுடைந்து வாயினுல் வெளிப்பட்டுப் போகும்.

மருத்துணவு :- இந்த மருந்தை ஆறு வேளை அல்லது ஒன்பது வேளைக்கு அதிகம் உபயோகிக்கலாகாது. அதிகமாய் கக்கல் காண்பதுண்டு. ஆகையால் பித்தத்தைச் சாந்தப் படுத்தும் பதார்த்தங்களை உபயோகிக்கவேண்டியது. இதற்காகப் பாலன்னம், பாற்கஞ்சி முதலியவைகள் தகுந்த உணவுகளாகும்.

இன்னும் சமயோசிதம் போல அவரவர்கள் உடல் இயல்பிற்கு தகுந்தது போல பத்திய மேற்படுத்திக் கொள்வது மருத்துவர் களின் கடமையாகும்.

270. துருசு பற்பம் (வேறு)

தூய்மை செய்த துருசு 1 பலம். (35 கிராம்), இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். காட்டமணக்குப்பால் செல்லத்தக்க அளவு. கோது கொட்டை முதலியவைகளை நீக்கின பழம்புளி 1 பலம் (35 கிராம்), எலிச்செவியிலை 1 பலம் (35 கிராம்).

செய்முறை :- துருசை மண்ஜோட்டில் வைத்து காட்டா மணக்குப் பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்குசாமம் சுருக்குக் கொடுத்து எடுத்துப்பழம் புளியையும், எலிச்செவியிலையும், கலந் தரைத்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி துருசுக் கட்டிக் குக்கவசஞ் செய்துலர்த்தி ஐந்து சீலமண் செய்துலர்த்திக் கவசத் தின் நாற்பது பங்கு வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்க பற்பமாக இருக்கும்.

குறிப்பு :- இந்தப் புடத்தை பள்ளந்தோண்டி அதில் போட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தீக்குறைந்து முறைப்படி ஏற்படமாகாது.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

271. துருசு பற்பம் (வேறு)

தூய்மை செய்த துருசுக் கட்டிகள் தேவையான அளவு. இவற்றை ஒரு பீங்கானிற் போட்டுக் கொஞ்சம் தேனை அதில் வார்த்துக் கட்டிகளின் மீது முழுவதும் நனையும் படியாகப் புரட்டி வெய்யிலில் வைக்கவேண்டும். அந்தக் கட்டிகளை மறுநாளும் முன்போல் ஒரு பீங்கானிலிட்டு முன்போல் தேனை விட்டு முன் போல் புரட்டி முன் போல் வெய்யிலில் வைக்க வேண்டும். இவ் விதம் நாற்பது நாள் வைத்தால் துருசுக்கட்டியானது சுத்த வெண்மையாக வெளுத்துப் போகும். இதனை எடுத்துக் உப்பையும் புளியையும் சமமாக இடித்து ஒரு விரற்கனம் கவசஞ் செய்து அதன் மேல் சீலமண் செய்துலர்த்திக் கவசத்தின் நாற்பது பங்கு வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே யாம்.

272. துருசு பற்பம் (வேறு)

தூய்மைசெய்த துருசு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), வெடியுப்பு 2 வராகன் எடை (7 கிராம்), குப்பைமேனி இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் வலுவாகச் செய்துலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கு வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறின பின்பு எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணியெடை.

துணைமருந்து :- தேன், இஞ்சிச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, சோம்புக்குடிநீர், சோம்புத்தீநீர் ஓமத்தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- வயிற்றுவலி, கபநோய்கள், சுர நோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :- புளிப்பு, கசப்பு ஆகியவைகளை நீக்க வேண்டியது.

273. துருசு பற்பம் (வேறு)

தூய்மை செய்த துருசுக் கட்டியை கவுதும்பையிலைச் சாற்றில் உலர உலர, நனைத்து ஒரு சாம நேரம் சென்றபின்பு அதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி இலையை அரைத்து வில்லை செய்துலர்த்தி மேற்படி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்து அரைத்து அந்த வில்லைக்கு ஒரு விரல் கனம் கவசஞ் செய்து ஒன்பது சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்துக் கருவூமத்தை இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி மேற்படி கருவூமத்தை இலையை அரைத்து

ஒரு விரற்கனம் மேற்படி வில்லைக்குக் கவசஞ் செய்து முன்போல் அதன்மீது ஒன்பது சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- $\frac{1}{2}$ முதல் 1 குன்றியெடை.

துணைமருந்து :- முன் பாகங்களிற் சொல்லப்பட்டிருப்பவை களேயாம்.

தீரும்நோய்கள் :- 13 வகை சன்னிகள், 44 வகை தடுமன்கள் (சலதோடங்கள்) 8 வகை குன்ம நோய்கள், 9 வகை சோகைகள், பக்கவாய்வு, 5 வகை பாண்டு நோய், 5 வகை ஈளை, காசங்கள், இரைப்பு, காமாலை, பெருவயிறு முதலியவை தீரும்.

மருத்துணவு :- புளி, கரப்பான் உணவுப்பண்டங்கள், வாய்வு உணவுப்பண்டங்கள் ஆகியவைகள் ஆகா.

274. துருசுச் சுண்ணம்

தூய்மைசெய்த துருசு 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். ஆகாசத் தாமரையிலைச் சாறு 1 படி.

செய்முறை:- மேற்படி துருசை ஒரு ஓட்டில் வைத்து மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிட வேண்டும். அந்தச் சாறெல்லாம் சென்ற பின்பு, மேற்படி ஆகாசத் தாமரை இலையை அரைத்து மேற்படி கட்டிக்கு ஒரு விரல்கனம் கவசஞ் செய்து உலர்த்தி சுக்கான்கல்லைத் தும்பையிலைச் சாற்றை விட்டு இரண்டு சாமநேரம் அரைத்து முன் கவசங் கொள்ளும்படியாகக் குகையும் மூடியுஞ் செய்து அதற்குள் வைத்து ஐந்து சீலைமண் செய்து லர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்ட பாகங்களிற் சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

குறிப்பு :- இந்தச் சுண்ணத்தில் பசுமையூறல் வராது. ஆகையால் இது வாத முறைகளுக்கும் உபயோகமாகும். அதன் விவரங்களைத் தெரிந்தவர்கள்மூலமாக அறி துகொள்ளவேண்டும்.

275. துருசுச் சுண்ணம் (வேறு)

கும்பிடு கிளிஞ்சிலின் சதையையெடுத்துக் கொஞ்சம் உலர்த்தி அரைவாசி ஈரம் இருக்கையில் அதற்குச்சமன் வெடியுப்பைச் சேர்த்திடிக்க மெழுகு போலாகும். அதனைச் சட்டியில் வைத்து செயநீர் இறக்கிக் கொள்க.

துருசு 1 பலம் (35கிராம்), இதனைக் கல்வத்திலிட்டும் பொடித்து முன் செயநீர்விட்டு இரண்டு சாமநேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து இருபது பலம் வறட்டியில் புடமிட்டாறினபின்னெடுக்கச் சுமார் $6\frac{1}{2}$ அல்லது 7 வராகன் எடை இருக்கும். பின்பு இதனை முன் போலவே முன் செயநீர்விட்டு அரைத்து கவசஞ் செய்துலர்த்தி முன்போலவே புடமிட்டாறின பின்னெடுக்க வைத்த எடைகுறையாமலிருக்கும். மூன்றுந்தடவையுப் முன்போலவே அரைத்து முன்போலவே புடமிடவும். இரண்டாந்தடவை வைத்த எடை குறையாமல் பற்மாயிருக்கும்.

இந்தப் பற்பத்துக்குச் சமனெடை வீரத்தைச் சேர்த்துப் பொடித்து முன் செயநீரைவிட்டு இரண்டு சாமநேரமரைத்து வில்லை செய்துலர்த்தி ஒட்டிலிட்டுமேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து மணலைப் பூமியிற் கொட்டி அதில் நாலங்குலத்திற்குக் கீழ்ப் புதைத்து மணல்மேல் கவசத்தின் ஆறு பங்கு வறட்டியை அடுக்கிப் புடமிட வேண்டும். புடமெரிந்தாறின பின்பு கவசத்தைப் பிரித்தெடுத்துக் கல்வத்திலிட்டு முன் செயநீரை வார்த்து முன் போல் இரண்டு சாமம் அரைத்து முன் போல் வில்லை செய்துலர்த்தி முன் போல் பணல் மறைவில புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பயன் படுத்துதல் :- தூய்மை செய்த தாம்பிரம் 4 பங்கு இதனை யுருக்கி, உருக்கு முகத்தில் மேற்படி பற்பம் ஒரு பங்கைக் கொடுத்து நன்குயுருக்கி எடுத்துக் கொள்ளவும். இந்தச் செப்பு 1 பங்கு, வெள்ளி $\frac{1}{2}$ அல்லது 1 பங்கு, தங்கம் 1 பங்கு, இவை எல்லாவற்றையும் சேர்த்துருக்க உள்ளது போலிக்கும் அவரவர்களின் நல்லவாய்ப்பைச் சோதித்துக் கொள்ளலாம்.

276 துருசுச் செந்தூரம்

தூய்மைசெய்த துருசு 1 பலம் (35 கிராம்), அன்னபேதி 1 பலம் (35 கிராம்), வெடியுப்பு 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- இம்முன்றையுங் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலை மண் செய்துலர்த்தி 128 பலம் (4480 கிராம்), வறட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின் மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு முன் போல் பழச்சாற்றை விட்டு இரண்டு சாம நேரமரைத்து முன் போல் வில்லை செய்துலர்த்தி முன்போல் கவசஞ் செய்து முன் போல் புடமிடவும் இவ்விதம் மடக்கி மடக்கி இன்னும் மூன்று புடமிடவும். ஆகக்கூடிய ஐந்து புடமும் தீர்ந்தால் சிறப்பான செந்தூரமாக இருக்கும்.

அளவு :- 1 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தயிர்ச்சக்கை, தேன், அதிவிடய குடிநீர் லவங்கக் குடிநீர், மிளகுக் குடிநீர், தாளிசப்பத்திரிச்சூரணம், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- மூலவாயு, பெருங்கழிச்சல், பாண்டு, தொடர் கழிச்சல், சுரம், சயம், இருமல், இரைப்பிருமல் ஆகியவை தீரும்

மருத்துணவு :- நோய்வலிமை, உடல்வலிமை, முதலியனை களுக்குத்தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

277. துருசுச் செந்தூரம் (வேறு)

தூய்மையான துருசுக்கட்டி தேவையான அளவு, இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் பிரமதண்டுப்பாலை மிதக்க விட்டு மூன்று நாள் நிழலில் வைத்து நாலாம்நாள் வெய்யிலில் வைத்துலர்த்தி மேற்படி இலையை அரைத்து மேற்படி கட்டிக்கு ஒரு விரல்கனங் கவசஞ் செய்து பருமனான முற்றல் தேங்காயைத் துருவி இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை வட்டோட்டில் வைத்துச் சமமாகப் பரப்பி அதன் மீது முன் கவசத்தை வைத்து அதன் மீது மறுபாதி தேங்காய் பூவைப் போட்டுச் சமப்படுத்தி மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து 15 பலம் (525 கிராம்), வறட்டியிற் புடமிடவேண்டும். மூன்று நாளாற விட்டு நாலாம் நாள் மருந்தை எடுத்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணியெடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :- மாவிலிங்கையிலை 1 பலம் (35 கிராம்), மேற்தோல் சீவினச்சுக்கு 1 பலம் (35 கிராம்), இரண்

டையும் அரைத்துப் பிழிந்த சாற்றில் ஒரு வராகன் எடைத்தேனைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம்காலை மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் உபயோகித்தால், சுழிகணம், மாந்தநோய் ஆகியவைகள் தீரும். கபக்கட்டு, கோழைக்கட்டு ஆகியவைகள் கக்கலால் வெளிப் படும்.

ஆடாதோடைச்சாறு 1 வராகன் எடை $3\frac{1}{2}$ கிராம் தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற் கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவரின் இருமல்நோய், இரைப்பிருமல், சயம், மந்தாரகாசம் ஆகிய வைகள் தீரும்.

தும்பைச்சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந் தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள, சுரம், தோடம் இரைப்பிருமல் கபநோய் ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த துணை மருந்துகளில் அநேக நோய்கட்கு பயன் படுத்தலாம். அனுபவசாலிகளுக்குத் தெரியுமாகையால் அவற்றை இங்கெழுதாது விட்டனம்.

278. துருசுச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த துருசுக்கட்டி 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். பேராமுட்டி வேர்ப்பட்டை 2 பலம் எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- பேராமுட்டிவேரைக் கல்வத்திலிட்டுச் செம்மை யாகத் தூள்செய்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமம் அரைத்து மேற்படி கட்டிக்குக் கவசஞ் செய்து அதன் மீது ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்க மஞ்சள் வர்ண மான செந்தூரமாக இருக்கும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்துகள் :- தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள் :- இருமல் நோய், கபக்கட்டு, கோழைக்கட்டு சுரம் முதலியவைகள் தீரும்.

279. துருசுச் செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த துருசு தேவையான அளவு, காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- பேற்படி துருசைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் 10 பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

இதனை இந்தப்பாலிலேயே இன்னும் இரண்டொரு தடவை புடமிட்டுக் கொண்டால், சிறந்த குணத்தைத்தரும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும்நோயும் முன் பாகத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

280. துருசுச் செந்தூரம் (வேறு)

தேவையான அளவு பலகறையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் 10 பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் சுண்ணமாயிருக்கும் இதற்குப் பலகறைச் சுண்ணமெனப் பெயர்.

இந்தப் பலகறைச் சுண்ணம் 4 வராகன் எடைக்குத் (14 கிராம்) தூய்மை செய்த துருசு 2 வராகன் எடை (7 கிராம்) வீதம் சேர்த்துப் பொடித்துக் கஞ்சாங் கோரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெள்ளரிக்காயை வெதுப்பிப் பிழிந்தசாறு, நெருஞ்சி சமூலக் குடிநீர், நீர்முள்ளிக் குடிநீர், அதிமதுரக் குடிநீர் தாளிசப்பத்திரிச் சூரணம், மிளகுத்தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- பாண்டு, நீர்க்கோவை, இரைப்பிருமல் ஈளைநோய், கபநோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :- உடல்நோய்க்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டியது தான்.

281. துருசு மெழுகு

தூய்மை செய்த துருசு 8 வராகன் எடை (28 கிராம்), இதில் 4 வராகன் எடை (14 கிராம்), பொடித்து வெண்ணிறமாகிற வரையில் வறுத்து அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். சாதிக்காய்த்தூள், சாதிப்பத்திரித்தூள், லவங்கத்தூள், ஏலரிசித் தூள், கடுக்காய்ப்பிஞ்சுத்தூள், கொட்டைப் பாக்குத்தூள், காசுக் கட்டித்தூள் இவை வகைக்கு 8 வராகன் எடை (28 கிராம்), எலுமிச்சம்பழம் 125 இவற்றைத் தனிச்சாருகப் பிழிந்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

செய்முறை :- எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்க வேண்டும். எல்லாச்சாறும் சென்ற பின்பு மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 10 முதல் 12 குன்றிமணி எடை.

துணைமருந்து :- இதனை ஒரு மாத்திரையாக உருட்டித் தயிர் சக்கைக்குள் வைத்துப் பொதிந்து வாயிற் போட்டு விழுங்கி விடவும்.

தீரும்நோய்கள் :- மேகக் கிரந்தி, மேகச் சட்டை, சட்டைக் கிரந்தி, சொறி கிரந்தி, குஷ்டம், ஆனைக்கால் வீக்கம், ஆனைக்கால் வீக்கசுரம் முதலியவை தீரும்.

282. துருசு மெழுகு (வேறு)

தூய்மை செய்த துருசு 1 பலம் (35 கிராம்), வேப்பிலைச் சாறு செல்லத் தக்க அளவு.

மருத்துணவு :- நல்லெண்ணெய், வெல்லம், பால் இம்மூன்றும் அறவேயாகாது இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவும்.

செய்முறை :- கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் கைவிடாமல் அரைக்கவும். மெழுகு பதத்தில் பீங்கான் பாத்திரத்தில் வழித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- மாத்திரையை நெய்யில் தோய்த்து விழுங்க வேண்டும். இந்த மருந்தால் கக்கல் அதிகமானால், நெய்யைப் பருகினால் கக்கல் நின்று போகும். நோய் பலத்திற்குத்தகுந்தபடி 9 முதல் 17 நாள்கள் கொடுக்கவும்.

தீரும்நோய் :- எண்பது வகை வாத நோய்களுந்தீரும் மற்றும் அநேக நோய்களுக்கும் உபயோகிக்கலாம்.

மருத்துணவு :- இச்சாபத்தியம்.

283. துருசு மாத்திரை

துருசுக்கட்டி 1 பலம் (35 கிராம்), முள்ளித்தண்டு சமூலத்தை அரைத்த விழுதை மேற்படி கட்டியின் மீது இரண்டங்குல கனம் கவசம் செய்து அதன் மீது மூன்று சீலை மண் செய்து கவசத்தின் இருபது பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க வெளுத்திருக்கும். இதற்குத் துருசுச் சுண்ணம் எனப் பெயர்.

பலகறையைக் கல்வத்தில் பொடித்துக் கற்சுண்ணாம்புத் தெளிநீரை விட்டு ஒரு சாம நேரம் அரைத்து வில்லை செய்து, உலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடு மூடி சீலை செய்து உலர்த்திக் கவசத்தின் எட்டுப் பங்கு எடை வறட்டியில் புடமிடச் சுண்ணமாகும். இதற்குப் பலகறைச் சுண்ணம் எனப் பெயர்.

மேற்படி துருசுச் சுண்ணம், பலகறைச் சுண்ணம், இரண்டையும்சமபாகமாகச் சேர்த்து நல்ல தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து ஒரு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

அளவு :- ½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :- வெண்ணெய், நெய்.

தீரும்நோய்கள் :- எல்லாவகைக் குட்ட நோய் மேக நோய்கள் முதலியன தீரும்.

மருத்துணவு :- இச்சாபத்தியம். நோய் கடினமாயிருந்தால் நோய்க்குத் தகுந்தபடி புளி, புகை உப்பு முதலியவைகளை நீக்கிப் பத்தியம் ஏற்படுத்தவும்.

284. அன்னபேதி செந்தூரம்

அன்னபேதி தேவையான அளவு சிறுநீர் இதற்கு ஆறு பங்கு.

செய்முறை :- சிறுநீரைக் கலயத்தில் விட்டு அதில் அன்ன பேதியைப் போட்டு கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து கவசத்தின் நான்கு பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

நன்ருய்ச் சிவந்திராவிட்டால் எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஒட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தேன், நெய், வெண்ணெய், வில்வாதி இளகம், பஞ்ச தீபாக்கினி இளகம், அட்ட தீபாக்கினிச் சூரணம் முதலிய வைகளாம்,

தீரும்நோய்கள் ;- அக்கினிமாந்தம், பித்த வாயு, மூலவாயு, தொடர்கழிச்சல், வயிற்று நோவு, வயிற்று இரைச்சல், வயிற்றுப் பொருமல், மாந்தநோய் ஆகியவைகள் தீரும்.

285. அன்னபேதிச் செந்தூரம் (வேறு)

அன்ன பேதி தேவையான அளவு, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு

செய்முறை :- அன்னபேதியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் இட்டு மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கல்வத்தில் இட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு அரைத்து முன் போல் புடமிடவும். இவ்விதமே மூன்றுந் தடவையும் புடமிட்டு எடுக்க மாதளம்பூ வண்ணமான செந்தூரமாக இருக்கும்.

அளவு, துணை மருந்து முதலியவைகளெல்லாம் மேற்கண்டவை களேயாம்.

286. அன்னபேதிச் செந்தூரம் (வேறு)

அன்னபேதி 8 பலம் (280 கிராம்), இதனைக் கால்படி கொள்ளும் படியான ஒரு கலயத்திற் போட்டு அந்தக் கலயம் நிறைய எலுமிச்சம் பழச்சாற்றை விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய்து கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்துப் வில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கச் செந்தூரமாக இருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

287. பேதிச்சத்து செந்தூரம்

அன்னபேதி 5 பலம் (175 கிராம்), சிலாசத்து 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையுங் கல்வத்திற் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி மேற்சொல்லி இருக்கிறபடி புடம் போடவும். இவ்விதம் மேலும் இரண்டு புடம் போட்டெடுக்க மேலான செந்தூரமாயிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம். இன்னும் எரிச்சல் சம்பந்தமான நோய்கள். நீரெரிச்சல், நீர்க்கடுப்பு ஆகியவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

288. பேதிவீரச் செந்தூரம்

அன்னபேதி 5 பலம் (175 கிராம்), வீரம் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்கண்ட இரண்டு சரக்கையுங் கல்வத்திற் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திற் பொடித்து முன்போலவே எலுமிச்சம் பழச்சாற்றை வார்த்து அரைத்து வில்லைசெய்து முன்போல் புடமிடவும். மூன்றுந் தட

வையும் இவ்விதமே புடமிட்டெடுக்க மேலான செந்தூரமாயிருக்கும். வீரமானது தன் சத்தைக் கொடுத்துவிட்டு ஓடிப்போகும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :— 376ல் சொல்லப்பட்டவையாம்.

தீரும்நோய்கள் :— 376ல் சொல்லியிருக்கிற நோய்களும், வாயு சம்பந்தமான நோய்களும், சுரம், சன்னி ஆகியவைகளுந் தீரும்.

289. அன்னபவழச் செந்தூரம்

அன்னபேதி 5 பலம் (175 கிராம்), நற்பவளம் அல்லது பவளக் கொடி 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேர மரைத்துப் வில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போலவே எலுமிச்சம்பழச்சாற்றை வார்த்து முன் போலரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதமே மூன்ருந் தடவையும் புடமிட்டெடுத்துக் கொள்ள சிறப்பான செந்தூரமாயிருக்கும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 குன்றி மணி எடை.

துணைமருந்து :— தேன், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— சயம், இரைப்பிருமல், இருமல், இரத்த காசம், இரத்தச்சூடு, பித்தச்சூடு, மேகச்சூடு, என்புச்சூடு முதலிய அநேகநோய்கள் தீரும்.

சுருக்கிச்சொல்லில் இது எல்லா நோய்களுக்கும் உபயோகப் படும். அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளில் அந்தந்த நோய்கள் தீரும். இது மருத்துவ மறைபொருள் முறைகளில் ஒன்று.

அண்டத் தூய்மை

குஞ்சு பொரித்த கோழி முட்டையின் ஓடுகளை அப்பளாக் காரத்தைக் கரைத்த தண்ணீரிலிட்டு வேகவைத்து ஓடுகளில்

ஒட்டிக் கொண்டிருக்கும் சவ்வுகளைப் போக்கி வேறு நீர் விட்டு நன்ருகக் கழுவி அலம்பித் தூய்மை செய்து வெய்யிலிலுலர்த்தி எடுத்துத் தூள்செய்து துணியில் சலித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே அண்ட தூய்மையாம். இவ்விதம் தூய்மை செய்த அண்டத்தைப் பற்பமாக அல்லது சுண்ணமாகச் செய்து உபயோகிப்பதிஞல் அதிக சிறப்புமிகு குணத்தைத் தரும்.

290. அண்டச் சுண்ணம்

மேற்சொல்லியிருக்கிறபடி தூய்மை செய்யப்பட்ட அண்டத் தூள் தேவையான அளவு, நஞ்சறுப்பான் அல்லது விசப்பாலை யென்னும் பூண்டின் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி அண்டத்தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி மூலிகைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச்சாமம் அரைக்க வேண்டும்.

இதனை அரைப்பதற்கு முன்பு மேற்படி சாற்றில் நாலைந்து நாள் ஊறவைத்து எடுத்துக் கொள்வது உத்தமம். இதனை எத்தனை சாமம் அதிகமாக அரைக்கின்ருேமோ அத்தனையும் நன்மையே தரும். பின்பு வில்லைகட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி ஐந்நூறு பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ குன்றியெடை;

துணைமருந்து :— நெய், தேன், பஞ்சதீபாக்கினி இளகம் சுக்குத்தூள், சோம்புத்தூள், முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— வாய்வு நோய்கள், அண்டவாயு, அண்ட வீக்கம், அண்டவேதனை முதலியவைகள் தீரும்.

இதனைக் கொஞ்சமெடுத்து தண்ணீர்விட்டுக் குழைத்து மெல்லிய துணியில் தடவி இரவில் நோயால் பெருத்திருக்கும் அண்டத்தின்மீது வைத்துக்கட்டி வரவேண்டும். இவ்விதம் சில தடவைகள் செய்யின், எவ்வித அண்டநோயும் நாளடைவிற் கரைந்து இயல்பு நிலையில் ஆகிவிடும். மேலும் இழந்து போன ஆண்தன்மை முன் போலுண்டாகிவிடும்.

விண்ணப்பம் :— அண்டச் சுண்ண முறைகள் இரசவாத சிந்தாமணி முதற் பாகத்திற் பல சொல்லப்பட்டிருக்கின்றன. அவ

சியமானவர்கள் அதனைப் பார்த்து அங்குச் சொல்லி இருக்கிறதை செய்து உபயோகித்துக் கொள்ளவும்.

291. அண்ட பற்பம்

மேற்கண்டபடி தூய்மை செய்த அண்டத்தோல் 2 பலம் (70 கிராம்), இதனை அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்துலர்த்தி 160 பலம் (5600 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும், அல்லது மூசையில் இதனைப் போட்டு மூசை வாய்க்குச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கொல்லுலையில் வைத்து மூசை அழுக ஊதியெடுத்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- இரண்டரிசியெடை முதல் நாலரிசியெடை வரையில்

துணைமருந்து :— வெண்ணெய், பாலாடை, தேன், வெற்றிலை முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- விந்துக்குறைவு, விந்துவெளிப்பாடு, அண்டவாயு முதலியவைகள் தீரும்.

292. அண்ட பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மைசெய்த அண்ட ஓட்டுத் தூள் தேவையான அளவு. இதனை ஒரு பீங்கான் கிண்ணத்தில் போட்டு அதில் எலுமிச்சம்பழச்சாற்றை விட வேண்டும். தூளானது நாலங்குலம் ஆழ்ந்திருக்க வேண்டும். அந்தக் கிண்ணத்தை வெய்யிலில் வைத்து விட்டசாறுனது உலர்ந்த பின்பு மறுபடியும் முன்போல் அந்தச் சாற்றை விட்டு முன்போல் உலர்த்த வேண்டும். இவ்விதம் 7 தடவைகள் சாற்றை விட்டு விட்டு உலர்த்தி உலர்த்தி எடுத்து ஒரு அகலில் வைத்து மேலகல் மூடிப் பத்துச் சீலைமண் செய்துலர்த்தி 120 பலம் (4200 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும். அப்படி வெண்மையான பற்பமாகாவிட்டால் மறுபடியும் புடமிட்டெடுக்கற் தூய்மையான பற்பமாகிவிடும்.

அளவு :— 2 முதல் 4 அரிசியெடை.

துணைமருந்து :— வெண்ணெய், பாலேடு, நெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் .- விந்துக்குறைவு, விந்து வெளிப்பாடு ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி உண்டாகும் ஒழுக்கு மேகம் வெள்ளை

யொழுக்குமேகம் முதலியவைகளுந்தீரும். மகளிர்க்கு எப்போதும் மூடிக்கொண்டிருக்கிற மேகநீர் ஒழுக்கு, வெள்ளை நீர் ஒழுக்கு முதலிய கருப்பமேக நோய்களுந் தீரும். அல்குல் கெட்டிப்படும்.

293. அண்ட பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த அண்ட ஓட்டுத்தூள் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்) இதனைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து 80 பலம் (2800 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு பொடித்து முன்போல் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு முன்போல் அரைத்து முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் புடமிட்டால், உயர்ந்த பற்பமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

294. அண்ட பற்பம் (வேறு)

மேற்கண்ட பாகப்படியே சோற்றுக் கற்றாழைச் சாற்றில் மடக்கி மடக்கி அரைத்து ஏழு புடமிடப் பற்பமாகிவிடும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

295. அண்ட பற்பம் (வேறு)

393-ல் சொல்லியிருக்கிறபடி செய்த அண்ட பற்பம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), லிங்கம் $3\frac{1}{4}$ வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்துக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமநேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து 250 பலம் (8750 கிராம்), வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- இரண்டு அரிசி எடை முதல் நான்கு அரிசி எடை வரையில்.

துணைமருந்து :- வெண்ணெய், நெய், பாலேடு, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- தாதுவிருத்தி, விந்தழுத்தம் ஆகியவைக ளுண்டாகும். விந்து ஒழுங்கு, விந்துவெளிப்பாடு, கனவு ஒழுக்கு ஆகியவைகள் நீங்கும் குளிர்ச்சி சம்பந்தமான நோய்களுக்கெல் லாம் சஞ்சீவிக்கொப்பானது.

குறிப்பு :- மேற்படி முறையில் மேற்கண்ட வகைகளில் எந்த விதமாகவேணும் சித்தப்படுத்தின பற்பத்தைச் சேர்த்து மேற் கண்ட பாகப்படி சித்தப்படுத்திக் கொள்ளலாம்.

296. அண்ட பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த அண்டவோட்டுத்தூள் 1 பலம் (35 கிராம்), நீர்முள்ளிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை : மேற்படி தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற் றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய் துலர்த்தி 60 பலம் (2100 கிராம்) வறட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் முன் சாற்றையே விட்டு நான்கு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 50 பலம் (175 கிராம்) வறட்டியிற் புடமிடவேண்டும். மூன்றுந் தடவையும் மேற் கண்டபடியே அரைத்துலர்த்திக் கவசித்து 40 பலம் (1400 கிராம்) வறட்டியிற் புடமிட வேண்டும். நான்காந்தடவையும் மேற்கண்ட படியே அரைத்துலர்த்திக் கவசித்து 30 பலம் (1050 கிராம்), வறட் டியிற் புடமிட்டாறினபின் எடுக்க மேலான பற்பமாயிருக்கும்.

அளவு :- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், பாலேடு, வெற்றிலை, தேன் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரைப்பிருமல், நாள்பட்ட இருமல், குருதி கக்கல், சயநோய், விந்துக் குறைவு, விந்து வெளிப்பாடு, சூதகக் கட்டு, பிள்ளைப் பேற்றழுக்குக்கட்டு, பெண்களுக்குண்டாகும் மேக நீர் ஒழுக்கு. வெண்மேக ஒழுக்கு முதலியவைகள் தீரும், மகளிரின் கருப்பையின் தளர்ச்சி, அல்குல் தளர்ச்சி ஆகியவைகள் நீங்கி அவை கெட்டிப்படும். தாதுவிருத்தி, விந்தழுத்தம் ஆகியவைகளும் உண்டாகும்.

மேற்கண்ட நோய்களில் அந்தந்த நோய்க்குத் தகுந்தபடி இளகம், சூரணம், சர்பத்து முதலியவைகளைச் செய்து மேற்படி பற்

பத்தை துணைமருந்துகளில் உபயோகித்து வந்தால், மிக விரைவாகவும் நிச்சயமாகவும் மேற்கண்ட நோய்களைக் கண்டித்து சிறப்பான குணத்தைத் தரும். இதன் சிறந்த குணத்தை மருத்துவ பயிற்சியாளர்கள் எளிதில் நிச்சயித்துக் கொள்ளுவார்கள்.

297. அண்ட பற்பம் (வேறு)

கோழிமுட்டை ஓட்டைக் காடியில் ஒரு இரவு முழுவதும் ஊற வைத்துக் காலையில் எடுத்துச் சவ்வுகளை நீக்கி ஒரு புதுக் கலயத்தில் போட்டுக் கலயம் நிறையச் சோற்றுக் கற்றாழைச் சாற்றை விட வேண்டும். (இந்தச் சாறானது அண்டஓட்டிற்கு எட்டுப் பங்கெடை இருக்கவேண்டியது.)

கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும். வெண்ணிறமாகாமல் கருநிறமாக இருந்தால் மறுபடியும் முன்போல் ஒருபுடமிட்டெடுக்க வெண்மையாகி விடும்

அளவு :- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- ஆடாதோடை சர்பத்து, ஆடாதோடாயிலைக் குடிநீர், வெண்ணெய், பாலேடு, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- சயநோய், இரைம்பிருமல், இருமல் நோய் முதலிய ஷயம்பந்தமான நோய்களெல்லாம் தீரும்.

பாக்குத் புகையி ம்)

298. அண்ட பற்பம் (வேறு)

தூய்மைசெய்த அண்ட ஓட்டுத்தூள், வெடியுப்பு, படிக்காரம், அன்னபேதி, இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம மரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவை புடமிட்டால் செஞ்சாயலான பற்பமாகி விடும். அப்படி ஆகாவிட்டால்

இன்னும் இரண்டொருபுடம் முன்போல் போட்டெடுத்துக்கொள்ள சிறந்த பற்பமாகி விடும்.

அளவு :- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தேன், வெண்ணெய், பாலாடை, ஆடாதோடைக் குடிநீர், ஆடாதோடை சர்பத்து, பிரண்டைத்தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- எழுவகைக்காசங்கள், அறுவகை மூலங்கள் முதலியவைகள் தீரும்.

299. அண்ட மெழுகு

1 கோழிமுட்டை. இதனைக் கொஞ்சம் உடைத்து வெண் கருவை நீக்கிவிட்டு மஞ்சட் கருவில் கட்டின நவச்சாரம் 1 வராகன் எடை (3½ கிராம்), கட்டின வெண்காரம் 1 வராகன் எடை (3½ கிராம்), (இக்கட்டுகளெல்லாம் முன்னே சொல்லப்பட்டிருக்கின்றன.)

இரண்டையும் பொடித்து மூன்றுநாள் கடும் வெயிலில் வைக்க மெழுகாகி விடும். இதனை எடுத்து நன்றாக கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 1 முதல் 1½ குன்றிமணியெடை.

துணைமருந்து :- சீனிச்சர்க்கரை, நாட்டுச்சர்க்க[illegible] வெல்லம், சுக்கையரைத்த விழுது, சோம்பை அரைத்த வி[illegible], பஞ்சதீபாக்கினி இளகம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- அண்டவாயு, ஆந்திரவாயு, விரைவாதம், குன்மநோய் ஆகியவைகள் தீரும்.

இன்னும் இந்த மெழுகினால் நெருப்பிற்கோடும் சரக்குகளை நெருப்பிற் கோடாமற் கட்டிக் கொள்ளலாம். அதற்கு எடுத்துக் காட்டாக இங்கொரு முறையை எழுதுவோம். அதுவாம் இது,

லிங்கக்கட்டுப் பற்பம்

லிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்). இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்.

இதனை அப்பிரகத் தகட்டின் மீது வைத்து இரண்டு பலம் தாய் பாலைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிட வேண்டும். இந்தப் பால் எல்லாம் சென்ற பின்பு இரண்டு பலம் தேனைச் சிறுகச் சிறுக முன் போல் சுருக்கிட வேண்டும். இந்தத் தேன் எல்லாம் சென்ற பின்பு 4 குன்றிமணி எடை மேற்படி மெழுகை எடுத்து மேற்படி லிங்கத்திற்குக் கவசம் செய்து வில்வவேர்ப்பட்டையை அரைத்த விழுது 10 பலம், இதனை லிங்கத்திற்கு முன் கவசம் செய்து அதன் மேல் மூன்று சீலைமண் செய்து ஒரு குழிவெட்டி 6 படி உமியை அதில் போட்டு அதன் மீது முன் கவசத்தை வைத்து அதன்மீது 6 மரக்கால் உமியைக் கொட்டி நெருப்பிட்டு எரிந்தானபின் எடுக்க லிங்கமானது வெளுத்த பற்பமாக இருக்கும். இதுவாதம், வைத்தியமென்னும் இருவகைகளுக்குமாகும்.

இவ்விதமாகவே எல்லாச் சரக்குகளையும் கட்டிப் பற்பஞ் செய்து கொள்ளலாம். ஆனால் அந்தந்தச் சரக்கிற்கு இனமான மூலிகைகளில் புடமிட வேண்டும். இதன் விவரம் முன் சொல்லப்பட்டிருக்கிறது.

300. அண்ட மெழுகு (வேறு)

ஒரு கோழி முட்டைக்கு 5 பலம் (175 கிராம்), கண்டங்கத்திரி வேர்ப்பட்டையை அரைத்து முழுவதுங் கவசஞ் செய்து காய வைத்து ஈரமில்லாமல் நன்றாக உலர்ந்த பின்பு மேற்கவசத்தை உதிர்த்து முட்டையை மாத்திரம் வைத்துக் கொள்ளவும் கொட்டைப் பாக்குத்தூள் 7 பலம் (245 கிராம்), வெற்றிலை 7 பலம் (245 கிராம்), புகையிலை விதை 7 பலம் (245 கிராம்), புகையிலை 7 பலம் (245 கிராம்), ஆக நான்கையும் அம்மியில் வைத்து உடனே நீற்றின சுண்ணாம்புத் தெளிநீரை விட்டு அரைத்து வெண்ணெய் போல் ஆன பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற முட்டைக்குக் கவசஞ் செய்து அதன் மீது, ஏழு சீலை மண் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் இரண்டு படி பூ மணலைக் கொட்டி அதன் மீது கவசத்தை வைத்து அதன் மீது இரண்டு படி மணலைக் கொட்டி மேல் சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து காய வைத்து 200 பலம் (7000 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்தால், சிவந்த வண்ணமான பற்பமாக இருக்கும்.

இந்தப் பற்பம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் இரும்புக் கரண்டியில் போட்டுக் கரிநெருப்பில் வைத்து மெதுவாயூத

இரண்டுஞ் சேர்ந்து விடும், மறுபடியும் கரண்டியில் வைத்து முன் பற்பத்தைச் சேர்த்து ஊதி எடுக்க மெழுகாகி விடும்.

இந்த மெழுகானது வாதம், வைத்தியம், என்னும் இரு முறைகளுக்குமாகும்.

மேற்கண்ட விதமாகவே சாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை கெந்தகம், சீனுக்காரம், வெடியுப்பு, வெள்ளைப்பாடாணம், நவச்சாரம் ஆகிய ஒன்பது சரக்குகளையும் மெழுகாகச் செய்து கொள்ளலாம். அந்தந்த மெழுகுகளினால் அந்தந்தச் சரக்குகளுக்கு நீங்கும் நோய்களுக்கு உபயோகிக்கலாம்.

முத்துச்சிப்பித் தூய்மை

முத்துச்சிப்பியைச் சிறு துண்டுகளாகப் பொடித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அது ஒரு அங்குலம் ஆழ்ந்திருக்கும் படியாகப் புளித்த பசுவின் தயிரை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். அந்தத் தயிரெல்லாஞ் சுண்டின பின்பு மறுபடியும் முன் போல் மேற்படி தயிரையெல்லாம் விட்டு முன் போல் உலர்த்த வேண்டும். மூன்றுந் தடவையும் முன் போல் தயிரை விட்டு முன் போல் உலர்த்திக் கொள்ளவும். ஈரம் இல்லாமல் நன்றாய் உலர்ந்த பின்பு நீரை விட்டுக் கழுவிச் செம்மையாக அலம்பி வெய்யிலில் உலர்த்தி எடுத்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்திக் கொள்ளவும். இதுவே முத்துச் சிப்பியின் தூய்மையாம்.

301. முத்துச்சிப்பி பற்பம்

மேற்கண்ட பாகப்படிசெய்த முத்துச்சிப்பி 1 பலம் (35 கிராம்) வெள்ளைச் சாறுவேளைச் சமூலச் சாறு, வெள்ளெருக்குச் சமூலச் சாறு,அத்தியிலைச்சாறு, மருதயிலைச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி முத்துச் சிப்பியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து * வெள்ளைச் சாறுவேளை சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி 26 பலம் (910 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெள்ளருகுச் சமூலச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து முன்போல்

* வெள்ளைச் சாறணை

வில்லை செய்து முன்போல் கவசஞ் செய்து 24 பலம் (840 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து அத்தியிலைச் சாற்றில் முன்போல் நான்கு சாமம் அரைத்து முன்போல் உலர்த்தி முன் போல் கவசஞ் செய்து 22 பலம் (770 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து மருதமிலைச் சாற்றில் முன்போல் அரைத்து முன்போல் கவசஞ் செய்து உலர்த்தி 20 பலம் (700 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறின பின்எடுக்க மிகச் சிறப்பான பற்பமாயிருக்கும்.

அளவு :- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணை மருந்து :- பசுவின் தயிர், பசுவின் நெய், தேன், திராட்சைப் பழம், கம்மாறு வெற்றிலைச் சாறு, வெண்ணெய், பன்னீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- சயம், இருமல், நீரிழிவு, மயக்கப் பாண்டு, பிரமியம், நீரெரிவு, நீர்ப்பீனசம், தாகநோய், சொறி சிரங்கு, பித்தகுன்மம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

302. முத்துச்சிப்பி பற்பம் (வேறு)

முத்துச் சிப்பிகளைத் தூள் செய்து ஒரு மண் பாத்திரத்தில் போட்டு ஒரு அங்குலம் ஆழ்ந்திருக்கும் படியாகத் துருஞ்சி நாரத்தம் பழச்சாற்றை, அல்லது எலுமிச்சம் பழச்சாற்றை அதில் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துச் சாறெல்லாஞ் சுண்டின பின்பு எடுத்து ஆற வைத்து தண்ணீரை விட்டுச் செம்மையாகக் கழுவி வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். இதுவும் ஒரு வகை முத்துச் சிப்பித் தூய்மையாம்.

மேற்கண்ட பாகப்படி தூய்மை செய்த முத்துச் சிப்பி 1 பலம் (35 கிராம்), துருஞ்சி நாரத்தம் பழச்சாறு, அல்லது எலுமிச்சம் பழச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்படி சிப்பியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி 135 பலம் (4725 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 1 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :- இஞ்சிச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுபடி கலந்துண்ண இரைப்பிருமல் நோய், இருமல் நோய் ஆகியவைகள் தீரும்.

முருங்கைப் பட்டைச்சாறு $\frac{3}{4}$ வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப் படி கலந்துண்ண, வயிற்றுபுசநோய், கட்டிநோய், மூத்திரக் குண்டிக்காயின் நோய் ஆகியவைகள் தீரும்.

துளசிச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட அளவுப்படி கலந்துண்ண முறைசுரம், நாட்பட்டசுரம் முதலியவைகள் தீரும்.

சிறு நெருஞ்சிச்சாறு, வெள்ளரிக் காய்ச்சாறு, கரும்புச்சாறு, தேன் இவை வகைக்கு 2 வராகன் எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட அளவுப்படி சேர்த்துண்ண கல்லடைப்பு, கண்டமாலை நோய் ஆகியவைகள் தீரும்.

தூய்மை செய்த மைசாட்சித்தூள் 8 குன்றிமணி எடை, மர மஞ்சள்தூள் 8 குன்றிமணி எடை. தேன் 2 வராகன் எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட அளவுப்படி சேர்த்துண்ண, பிரமேக நோய்கள், வாயு சம்பந்தமான நோய் ஆகியவைகள் தீரும்.

நெல்லிவற்றல் தூள் 4 குன்றிமணி எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி அளவுப்படி கலந் துண்ண கண்நோய்கட்கு உபயோகமாகும்.

சிறு தேக்குத் தூள் 4 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட அளவுப்படி சேர்த் துண்ண இரைப்பிருமல் நோய், பெருமூச்சு நோய் ஆகியவைகள் தீரும்.

303. முத்துச் சிப்பிச் சுண்ணம்

மேற்கண்ட இரு வகைகளில் ஒரு வகையாகச் சுத்தம் செய்த முத்துச்சிப்பி 1 பலம் (35 கிராம்), இதனைக் கல்வத்தில் இட்டுப் பொடித்துச் சதுரக்கள்ளிப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து, நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி மேற்படி சதுரக்கள்ளிக் கட்டை ஒரு முழம் எடுத்து அதில் அந்த வில்லை

கொள்ளும் படியாகத் துவாரமிட்டு அந்தக் கள்ளிச் சக்கை யினுலேயே அதை அடைத்து ஏழு சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள் :- இரைப்பிருமல், இருமல், இளைப்பு,சயம்,குட்ட சம்பந்தமான நோய்கள், வாயு சம்பந்தமான நோய் ஆகிய வைகள் தீரும்.

ஆமை யோட்டுத் தூய்மை

சாம்பலையும் உப்பையும் சமமாகச் சேர்த்து வெந்நீரில் கரைத்து அதில் ஆமையோட்டைப் போட்டு இரண்டு மூன்று கொதி வருகிற வரையில் நன்ருகக் காய்ச்சிக் கீழிறக்கி நன்ருகத் தேய்த்து வெந்நீரில் கழுவி எடுத்து ஈரமுலர வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். இதனுல் ஆமையோடானது தூய்மையாகிவிடும்

ஆமை யோட்டுத் தூய்மை (வேறு)

முள்ளியை எரித்த சாம்பல் ஒரு பங்கு, உப்பு ஒரு பங்கு இவ்விரண்டையும் வெந்நீர் வார்த்து அரைத்து ஆமையோட்டின் மீது பூசி வெயிலில் வைத்து உலர்ந்த பின்பு வெந்நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி இரண்டு மூன்று தடவைகள் செய்து கொண்டால் ஆமையோடானது சுத்தமாகி விடும்.

304. ஆமை யோட்டுப் பற்பம்

மேற்கண்ட தூய்மை செய்த ஆமையோடு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), ஆடாதொடை இலையை அரைத்த விழுது 20 பலம் (700 கிராம்).

செய்முறை :- மேற்கண்ட விழுதில் மேற்கண்ட ஓட்டை நடுவில் வைத்து அதன் மீது இரண்டு மண் சீலை செய்து எட்டு வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும். இதனை எடுத்துப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- தேன், நெய், வெண்ணெய், சுக்குத்தூள் சோம்புக் குடிநீர், ஆலம் விழுதை அரைத்த விழுது, தயிர்ச் சக்கை, இலவங்கத்தை வறுத்திடித்த தூள் முதலியவைகளாம்

தீரும்நோய்கள் :- வாயு சம்பந்தமான நோய்கள், இரத்த பித்த நோய்கள், இரத்த சயம், காசநோய்கள், இரத்தமூலம், குருதிக் கழிச்சல், கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

மருந்துளவு :- நோய் வலிமை, உடல்வலிமை ஆகியவை களுக்குத் தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

305. ஆமை யோட்டுப் பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த ஆமையோடு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), வயிற்றிலுள்ள மண் முதலியவைத் தூய்மை செய்த பூநாகம் என்னும் நாக்குப் பூச்சி 20 பலம் (700 கிராம்).

செய்முறை :- நாக்குப் பூச்சிகளை அம்மியில் வைத்து மை போல் அரைத்து இரண்டடையாகச் செய்து ஒரு அடையை ஒரு ஓட்டில் வைத்து அதன் மீது மறு அடையை வைத்து நன்றாக அழுத்தி மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து எட்டு வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- பெரியவர்களுக்கு முன் சொல்லியிருக்கின்ற வைகளேயாம். சிறுவர்களுக்கு முலைப்பால், தேன், பொடுதலை இலையைப் பிட்டவித்துப் பிழிந்த ரசம், ஓமத் தீநீர், சிற்ற ரத்தையில் முலைப்பாலை விட்டு அரைத்துப் பிழிந்தபால் முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள் :- பெரியவர்களுக்கு மேற்கண்ட நோய்கள் எல்லாவற்றிற்கும் உபயோகிக்கலாம். சிறுவர்களுக்கு மாந்த நோய் செரியாமை நோய், பால் செரிக்காமல் அடிக்கடி உண்டாகும் கக்கல், மாந்தத்தாற் காணுஞ்சுரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

பூநாகத் தூய்மை

செம்மண் பூநாகமானால் உத்தமம். அது அகப்படாத இடங் களில ஆங்காங்கு கிடப்பவைகளை உபயோகித்துக் கொள்ளவும்.

பூநாகம் தேவையான அளவு. இதனைப் பசுவின் மோரில் போட வேண்டும். அந்த மோரானது பூச்சிகளின் மீது நான்கு அங்குல அளவு இருக்க வேண்டியது. இவ்விதம் ஆறுமணி நேரம் ஊற வைக்கப் பூச்சிகளின் வயிற்றிலுள்ள மண்ணெல்லாம் வெளிப் பட்டுப் போம். பிறகு தண்ணீரை விட்டுச் செம்மையாகக் கழுவி வெய்யிலில் உலர்த்தும் போது காக்கை, கோழி முதலியவைகள் தின்று விடாமல் அதிக விழிப்பாக இருக்க வேண்டும். இவ்விதம் செய்து எடுத்தால் பூநாகம் என்னும் நாக்குப் பூச்சி தூய்மை யாகி விடும்.

மேற்கண்ட விதமாகவே பசுவின் பாலிலும் தூய்மை செய்து கொள்ளலாம்.

குறிப்பு :- இதனைத் தூய்மை செய்வதும், இதனை உலர்த்தி எடுப்பதும் சற்று கடினமான வேலையாயினும் இதில் தாம்பிர சத்திருப்பதால் தாம்பிரத்திற்கு உண்டான குணங்களை இது கொடுக்கும். மேலும் தாம்பிரத்திற்கு உண்டான தீக்குணங்கள் இதிலில்லை எவ்விதமான சிறுவர்க்கும் இதனை உபயோகிக்கலாம். தாம்பிரமானது சரியான முறைப்படி பற்பஞ் செய்யப் படாதிருந் தால் அதனால் கக்கல், உணவேலாமை, புண்கள் முதலியன உண்டாகும். இந்தப் பற்பத்தினாலோ எவ்வித தீக்குணங்களும் உண்டாகாமல் உடலுக்கு அனுகூலமே உண்டாகும். அநேகர் தாம்பிரபற்பத்தைப் பற்றி அதிகவிருப்பமாக இருப்பார்கள். அவ்வித பற்பங்களைத் தக்க விதமாகத் தேர்ந்து அறியாமல் ஒரு சிறிதளவு உபயோகிக்கலாகாது. இந்தப் பற்பத்திற்கோ அவ்வித தேர்வுகள் அவசியமே இல்லை. தாம்பிர பற்பத்தை உபயோகிக்கும் போது, பத்தியத்தைக் கண்டிப்பாகக் கவனித்து வரவேண்டும். இந்தப் பற்பத்தை உபயோகிக்கும் போதோ எவ்வித கண்டிப்பான பத்தியமுமில்லை. ஆனால், சிலர் அவரவர்கள் மதாச்சாரப்படி இதனை உபயோகப் படுத்தப் படாதாகையால் அவ்வகையார்கள் முறைப்படி செய்யப்பட்ட தாம்பிர பற்பத்தை அதிக விழிப்புடன் உபயோகிக்க வேண்டும். அவ்வித விருப்பமில்லாதவர்கள் இதனை உபயோகித்தால் அதிகப் பயன்களும் உண்டு.

306 பூநாக பற்பம்

மேற்கண்டபடி தூய்மை செய்த பூநாகம் 2 பலம் (70 கிராம்), இதனைத் தூள் செய்து புளிப்பு மாதுளம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் செஞ்சாயலான பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றி மணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், நெய், தேன், வாதுமை அல்வா, கோதுமைப்பால், அல்வா, பாலேடு, பால் கவ்வா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- விந்துக் குறைவு, விந்து வெளிப்பாடு, ஆகியவைகள் தீர்ந்து, தாது வலிமை, விந்து விருத்தி உடல் வலிமை, உடல் வளமை முதலியவைகள் உண்டாகும். இன்னும் உடலில் உள்ள நோய்களை நீக்கி உடல் நலத்தை உண்டாக்கும். இது நாளடைவில் குணத்தைத் தருவதால் இதனைத் தொடர்ந்தேற்றியாக இடைவிடாது உபயோகித்து வரவேண்டும் அவசரப்படுகிறவர்களுக்கு இது அவ்வளவு ஏற்றதல்ல நிதானமாகவும், பொறுமையாகவும் இதனை உபயோகித்து வந்தால் நாளாவட்டத்தில் இதனால் உண்டாகும் அரிய குணங்களை அனுபவத்தில் தெரிந்து கொள்வார்கள்.

307. பூநாகப் பிரயோகம்

மேற்கண்டபடி தூய்மை செய்து உலர்த்தி இடித்து தூய்மை செய்த பூநாகத்தூள் செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி 1 முதல் 10வராகன் எடை, கோதுமைமா, அல்லது கருங்குறுவை அரிசிமா, அல்லது அல்லிவிதைமா ஆகியவைகளுள் ஒன்று செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி $\frac{1}{4}$ முதல் 1 ஆழாக்கு வரையில் பசுவின் நெய், செல்லத்தக்க அளவு, சீனிசர்க்கரை செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்படி பூநாகச் சூரணத்தையும், மாவையும் ஒன்றுகச் சேர்த்துக் கொஞ்சம் ஜலம் தெளித்துப் பிசைந்து அடைபோல் தட்டி நெய்யைக் காய்ச்சி அதில் விட்டுப் பொரித்து எடுத்துத் தனக்கு விருப்பமான வரையில் சர்க்கரையைச் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் உபயோகித்து வந்தால் விந்து வெளிப் பாடு, விந்துக் குறைவு ஆகியவைகள் தீர்ந்து தாதுவளமை, மிகுபுணர்ச்சி முதலியவைகளுண்டாகும்.

மருத்துணவு :- தாது இழப்புக்கு உள்ளானவர்கள் அதற்காக இதனை உபயோகித்து வரும் போது புணர்ச்சி சங்கமத்தை நீக்கி வைக்க வேண்டியது.

308. பூநாக மேற்பூச்சுத் தைலம்

மேற்கண்ட பாகப்படி தூய்மை செய்த பூநாகம் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), சதாபிலைச் சாறு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), கோஷ்டத்தூள் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), நல்லெண்ணெய் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :- இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து நீரொல்லாஞ் சுண்டிப் பூச்சிகள் மொறுமொறென்றுன பதத்தில் எடுத்து, வடிகட்டி பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள் :- இதில் நான்கு குன்றிமணி எடை எண்ணெயை எடுத்து அவசியமான இடத்தில் மேற்பூசி அதன்மீது வெற்றிலையை அல்லது எருக்கிலையை வைத்துக் கட்டிக் காலையில் வெந்நீரால் கழுவித் தூய்மை செய்ய வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு இரவிலும் நோய்க்குத் தகுந்தபடி ஏழு நாள், பதினொரு நாள், பதினான்கு நாள் செய்தால், நரம்புகளின் தளர்ச்சி, நரம்புகளின் சோர்வு ஆகியவைகள் நீங்கி, உடல்வலிவு போகசக்தி ஆகியவைகளுண்டாகும்.

குறிப்பு :- இதனையும், இதைப் போன்ற மேற்பூச்சு மருந்துகளையும் உபயோகிக்கும் போது தலைமூளை, இரைப்பை, ஈரல், இருதயம் முதலிய இராச கருவிகளைப் பலப்படுத்தும் அல்வாக்கள் திராவகங்கள் ஆகியவைகளை உபயோகித்தும் வரவேண்டும். இம் முறைகளெல்லாம் யூனானி வைத்திய தாது விர்த்தி போதினி முதல், இரண்டாம் பாகங்களில் அநேகம் சொல்லப் பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அந் நூல்களைப் பார்வையிட்டுத் தமக்கு விருப்பமுள்ளவைகளைச் செய்து உபயோகித்துச் சுகம் பெறலாம்.

309. பூநாகத் தைலம்

மேற்கண்டபடி தூய்மை செய்த பூநாகம் 1 பலம் (35 கிராம்) பூண்டுத் தைலம் 1 பலம் (35 கிராம்), சதாப்பிலைச் சாறு 2 பலம் (70 கிராம்), பசுவின் வெண்ணெய் 5 பலம் (175 கிராம்) இலவங்கத் தூள் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :- இவை எல்லாவற்றையுஞ் சேர்த்து ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நெய்யான பதத்தில் இறக்கி வடிகட்டி பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 5 முதல் 10 துளி இதனை ஒரு வெற்றிலையில் விட்டு ஒரு லவங்கத்தை வைத்துச் சேர்த்து மென்று தின்று விட வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டு வர, நரம்புத்தளர்ச்சிகள் நீங்கி உடல்வலிமை, உடல்வளமை,

ஆகியவைகளுண்டாகும், இதை உபயோகிக்கும் போது சீரண சக்திக்குத் தகுந்தபடி நல்ல ஆகாரங்களை உபயோகித்து வரவும் வேண்டும். அசைவ உணவினர்கள் ஆட்டிறைச்சி, பறவைகளின் இறைச்சி முதலியவைகளை உபயோகித்து வரவும். மேலும் பால், மிட்டாய் ஆகியவைகளை செரித்தல் சக்திக்குத் தகுந்தபடி உபயோகித்து வரவும்.

310. பூநாகத் திலா

மேற்கண்ட பாகப்படி தூய்மை செய்த பூநாகம் 1 பலம் (35 கிராம்), இலவங்கம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சம்பங்கி எண்ணெய் செல்லத் தக்க அளவு.

செய்முறை .- மேற்படி இரண்டு சரக்குகளையும் மேற்படி எண்ணெயில் பொன் வறுப்பாக வறுத்துக் கல்வத்தில் பொடித்து மேற்படி எண்ணெயை விட்டரைத்து மெழுகு பதமாகப் பீங்கான் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள் :- இதில் நான்கு குன்றிமணி எடை எடுத்து அவசியமான இடத்தில் பூசி அதன் மீது வெற்றிலையை அல்லது எருக்கிலையை வதக்கி வைத்துக் கட்டிக் காலையில் அவிழ்த்து வெந்நீர் விட்டுக் கழுவி விடவேண்டும். இவ்விதம் செய்து வந்தால் தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு சக்தியுண்டாகும். நரம்பு களிலுள்ள நச்சு நீர்கள் வெளிப்பட்டு அவை பலப்படும்.

311. பூநாகத் திலா (வேறு)

மேற்கண்ட தூய்மை செய்த பூநாகம் 1 பலம் (35 கிராம்) உலர்த்தின அட்டை 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையும் சம்பங்கி எண்ணெயை விட்டு பொன் வண்ணமாக வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். குங்குமப்பூ $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இலவங்கப் பட்டைத் தூள் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சம்பங்கி எண் ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி எண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும்நோய்கள் :- இதில் நான்கு குன்றிமணி எடையை எடுத்து அவசியமான பாகத்தில் பூசி அதன் மீது வெற்றிலையை வதக்கிக் கட்ட வேண்டும். காலையில் கட்டு அவிழ்த்து வெந்நீரை

வார்த்துக் கழுவ வேண்டும். தளர்ந்து சுருங்கிச் சோர்ந்த நரம்புகள் பலப்பட்டு நீண்டு பருமனாகும்; ஆண்மை உண்டாகும்.

312. பூநாகத் திலா (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த பூநாகம் 1 பலம் (35 கிராம்), உலர்த்தின அட்டை 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையும் ஜெய்த்தூன் எண்ணெயில் (*Olive oil*) பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். அக்கிராகாரம், இலவங்கம், சாதிக்காய் இவற்றின் தூள் வகைக்குப் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) ஜெய்த்தூன் எண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டு, ஜெய்த்தூன் எண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து, மெழுகு பதத்தில் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள் :- முதலியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

313. பூநாகத் திலா (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த பூநாகம் 1 பலம் (35 கிராம்), உலர்த்தின தம்பலப் பூச்சி 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையும் சம்பங்கி எண்ணெயில் பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். குங்குமப்பூ, அக்கிராகாரம், இலவங்கம், சாதிக்காய், இலவங்கப் பட்டை இவற்றின் தூள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சம்பங்கி எண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டு மேற்படி எண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள் :- இதில் நான்கு குன்றிமணி எடை எடுத்து அவசியமான இடத்திற்பூசி வெற்றிலையை வதக்கி மேலே வைத்துக் கட்ட வேண்டும். இவ்விதம் ஒரு வாரம் அல்லது, இரண்டு வாரம் செய்து வந்தால் நரம்புகளிலுள்ள நச்சுநீர், கபநீர், ஆகியவைகள் வெளிப்பட்டு, நரம்புகள் பலமாகி, நரம்புகளின் சுருக்கம், சோர்வு, சிறுத்திருத்தல் முதலிய இழி குணங்கள் தீர்ந்து அவைகள் பெருத்து வலுத்து ஆண்மை உண்டாகும்.

314. பூநாக மகாவீரிய திலா

மேற்கண்டபடி சுத்தி செய்த பூநாகம், உலர்த்தின தம்பலப் பூச்சி, உலர்த்தின அட்டை, இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), அக்கிராகாரம், வெள்ளலரி வேர்ப்பட்டை, சாதிக்காய், இலவங்கம் இவற்றின் தூள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சதாப்பிலைச்சாறு 5 பலம் (175 கிராம்).

செய்முறை :- முன்னுள்ள மூன்று பொருள்களையும் ஜெய்த்தூன் எண்ணெயில் அல்லது சம்பங்கி எண்ணெயில் பொன் வண்ணமாக வறுத்துக் கொள்ளவும். பின்பு ஜெய்த்தூன் எண்ணெயை அல்லது சம்பங்கி எண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும்.

தீரும்நோய்கள் :- இதில் இரண்டு குன்றிமணி எடை எடுத்து இரண்டு குன்றிமணி எடை வெண்ணெயும் ஒரு குன்றிமணி எடை புனுகுஞ் சேர்த்து அவசியமான பாகத்தில் பூசி வெற்றிலையை வாட்டி அதன் மீது வைத்துக் கட்ட வேண்டும். காலையில் வெந்நீர் விட்டுக் கழுவிக் கம்பிளியால் ஈரத்தைத் துடைத்து விட வேண்டும். இவ்விதம் ஒரு வாரம் செய்து வந்தால் கைமுட்டி கெட்ட செய்கைகளினால் நேரிட்ட நரம்புத் தளர்ச்சி, சோர்வு, சுருக்கம், அடி சிறுத்து நுனிபெருத்தல், வளைந்திருத்தல் முதலிய துர்க்குணங்கள் யாவும் நீங்கி அவை பலப்பட்டு ஆண்மையும் உடல் வலிவும் உண்டாகும். பிறவியில் இருந்தே இத்தீயக் குணங்களுண்டாகி இருந்தால் அவை நீங்குவது கடினம். இடையில் இக்குணங்களுண்டாகி இருந்தால் இந்தத் திலாவினால் அவசியம் தீர்ந்து போகும். அப்படித் தீராவிட்டால் மற்ற மருந்துகளினால் தீரும் எனச் சொல்வது சாத்தியமன்று. ஆனால் அவ்வகை நோய்களுக்கு எருக்கம் பால் வேறுவகை மருந்துகளை உபயோகிப்பதைப் பார்க்கிலும் அர்க்க உரப் பிரயோகங்களை உபயோகிக்க வேண்டும். அம்முறைகளெல்லாம் நமது தாது விருத்தி போதினி இரண்டாம் பாகத்தில் வகை விவரமாகச் சொல்லப் பட்டு இருக்கின்றன. அவசியமானவர்கள் அதனைப் பார்த்து அங்குள்ளபடி செய்து தம் கோரிக்கையை அடையலாம்.

315. பூநாக அல்வா

மேற்கண்ட பாகப்படி சுத்தி செய்து உலர்த்தி இடித்த பூநாகத்தூள் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), நீர்முள்ளி, பஹமனே சுபேத், தூதரி சுபேத், இலவங்கம், இலவங்கப் பட்டை, மேத்ரேல் சீவின

சுக்கு, மேற்ருேல் சீவின சிற்றரத்தை இவற்றின் தூள் வகை 1 க்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்). மேற்ருேல் போக்கின வாதுமைப் பருப்பு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), சாரப்பருப்பு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), அக்ரோட் பருப்பு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), சர்க்கரை 20 பலம் (700 கிராம்), நெய் 10 பலம் (350 கிராம்), தேன் 5 பலம் (175 கிராம்).

செய்முறை :- பருப்பினங்களை எல்லாம் நெய்யில் வறுத்து அம்மியில் வைத்து மைபோல் அரைத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் எல்லாத் தூள்களையும் ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்ளவும். சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில், முன் சித்தப் படுத்தி வைத்திருக்கும் கலவையைச் சிறுகச் சிறுக போட்டுச் சந்தன மத்தாற் கடைந்து கலந்து ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்த வேண்டும்.

குறிப்பு :- சக்தியுள்ளவர்கள் ஐம்பது தங்கரேக்கையும், நூறு வெள்ளிரேக்கையும், ஒரு வராகன் எடை தூயகஸ்ரியையும் சேர்த்துக கொள்ள வேண்டும். மேற்படி ரேக்குகளை மேற்படி இளகத்தைக் கீழ் இறக்கினவுடன் அதிக சூடாக இல்லாமல் இளஞ் சூடாக இருக்கும் போது ஒவ்வொரு ரேக்காகப் போட்டுக் கடைய வேண்டும். கஸ்தூரியுடன் ஒரு பலம் கற்கண்டைச் சேர்த்துப் பொடித்து மேற்படி இளகத்தை தூவிக் கடைந்து கொள்ள வேண்டும்.

அளவு :- $\frac{1}{2}$ முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை, கஸ்தூரி சேர்ந்தால் $\frac{1}{8}$ முதல் 1 வராகன் எடை.

தீரும்நோய்கள் :- தலைமூளை, இரைப்பை, இருதயம், ஈரல் முதலிய இராச கருவிகள் பலப்பட்டு நரம்புகள் முறுக்கேறிப் பலத்து உரத்து, உடல் வளமை, உடல் வலிமை, ஆண்மைத் தன்மை முதலியவைகள் உண்டாகும். இரத்த பெருக்கம் விந்து விருத்தி முதலியவைகளுண்டாகிஆண்மைத்தன்மை உண்டாகும். விந்து விருத்தி குறைகள் நீங்கிப் பிள்ளைப்பேறு பெறுவதற்கு ஏதுவாகும். இதனைத் தொடர்ந் தேற்றியாக உபயோகித்து வந்தால் இது ஒரு கற் பற்பத்திற் கொப்பாகி உடலில் நோயை அண்ட விடாது அதைக் காப்பாற்றி வரும்.

தம்பலப்பூச்சித் தூய்மை :- தம்பலப் பூச்சி தேவையான அளவு. இதை வெந்நீரில் போட்டு இரண்டு நிமிட நேரம் மூடி வைத்திருந்து பிறகு மேலுக்கு மேலாக அதை அரித்து எடுத்து அதில்

உள்ள மண், தூசி முதலியவைகளை நீக்கி தூய்மை செய்து வெய்யிலில் உலர்த்தி எடுத்துக் கொள்வதே அதன் தூய்மையாம்.

316. தம்பலப் பூச்சி பற்பம்

தூய்மையான தம்பலப் பூச்சி $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு செல்லத் தக்க அளவு, (தண்ணீர் விட்டான் கிழங்கை இரண்டொரு நாள் தண்ணீரில் ஊற வைத்து அதன் மீதுள்ள தோலையும், நடுவிலுள்ள நரம்பையும் நீக்கி விட்டு மரஉரலில் மரஉலக்கையால் இடித்துச் சாறு பிழிந்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்)

செய்முறை :- மேற்படி பூச்சியைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும்,

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், நெய், பாலேடு, தேன், வாதுமை அல்வா, கோதுமைப் பால், அல்வா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- மூளை பலப்பட்டு நரம்புகள் பலத்து ஆண்மைச் சத்து உண்டாகும். இருமல், இரைப்பிருமல் முதலிய நுரையீரல் நோய்களும் தீரும்.

317. இந்திரகோபப் பூநாக பற்பம்

தூய்மை செய்த இந்திர கோபம் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த பூநாகம் 1 பலம் (35 கிராம்), ஆடாதோடைச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்படி இரண்டு பண்டங்களையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு ;- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- மிளகுத்தூள், தாளிசப்பத்திரித்தூள், வாதுமையையும், கற்கண்டையும் சமமாகச் சேர்த்தரைத்த அல்வா, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- சயம், காசம், இருமல் முதலிய நோய்கள் தீர்ந்து, உடல்வலிமை, உடல்வளமை உண்டாகித் தாதுப்பெருக்கம் உண்டாகும். இழந்து போன ஆண்மைச் சக்தி முன்போல் உண்டாகி விடும்.

குறிப்பு :- இதனை உபயோகிக்கும்போது சிலருக்குப் பசிதீபனம் அதிகப் படுவதுண்டு. அந்தச் சமையங்களில் பாலன்னம், பால் பாயசம் முதலியவைகளை செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி உபயோகித்து வரவேண்டும்.

318. இந்திரகோப அல்வா

(அ) தூய்மை செய்த இந்திர கோபப்பூச்சி 10 பலம் (350 கிராம்) நிலப்பனைக் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

(ஆ) ஆலம் விதை, அரசம் விதை, கஞ்சாவிதை, அத்திவிதை, அல்லி விதை, பூனைக்காலி விதை, நீர்முள்ளி விதை இவைகளின் தூள் வகைக்குப் 1 பலம் (35 கிராம்), சீனிசர்க்கரை 13 பலம் (455 கிராம்), நெய் 5 பலம் (175 கிராம்), தேன் 5 பலம் (1˘5 கிராம்) மேற்றோல் போக்கின வாதுமைப் பருப்பு, சாரப்பருப்பு, இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), கற்கண்டு 5 பலம் (175 கிராம்), பசுவின் பால் 1 படி, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 1 படி.

செய்முறை :- தம்பலப் பூச்சியைக் கல்வத்திலிட்டு மேற்படி நிலப்பனைக் கிழங்குச் சாற்றை சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமா இருக்கும். இந்தப் பற்பத்தையும் (ஆ) விலுள்ளத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்க. வாதுமைப் பருப்பையும் சாரப் பருப்பையும் கொஞ்சம் நெய்யில் வறுத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போல அரைத்து முன் சித்தப் படுத்தி வைத்திருக்கிற தூள்களுடன் கலந்து கொள்ளவும். பால், தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு ஆகிய இரண்டையுங் கலந்து சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில் முன் சித்தப் படுத்தி வைத்திருக்குந் தூளைச் சிறுகச் சிறுகப் போட்டுச் சந்தன மத்தாற் கடைந்து கீழிறக்கித் தேனையும் நெய்யையும் விட்டு நன்றாக

கலந்துக் கற்கண்டை இடித்துத் தூள் செய்து தூவி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்

அளவு :- ½ முதல் 1½ வராகன் எடை.

தீரும்நோய்கள் :- இருமல், சயம், ஆகியவைகள் தீரும். இரத்த விருத்தி, விந்துப் பெருக்கம் முதலியவை உண்டாகி தாது வளமை உண்டாகும், நரம்புகள் சக்தியுற்று ஆண்மை சக்தி உண்டாகும். இதனைத் தொடர்ந்தேற்றியாய் உபயோகித்து வந்தால், வேறு நோய்கள் வராமல் தடுத்து உடலைக் காப்பாற்றி வரும்.

குறிப்பு :- சக்தியுள்ளவர்கள் மேற்கண்ட அல்வாவில் தம் தம் சக்திக்குத் தகுந்தபடி தங்கரேக்கு, வெள்ளிரேக்கு, கஸ்தூரி அம்பர் முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டால், சிறப்பான குணத்தைத் தருமென்பதற்கு மறுப்பு இல்லை.

பவழத் தூய்மை :- நற்பவளம் 1¼பலம், பேரீச்சங்காய் 15பலம் (525 கிராம்) இதிலுள்ள விதைகளை நீக்கி நையச் சிதைத்து நான்கு படி நீரிற் போட்டுப் புதுப் பானையில் விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். நாள் ஒன்றிற்கு இரண்டு மூன்று தடவை செம்மையாகக் கலக்கியும் வரவேண்டும். மறுநாள் மறு புதுப் பாண்டத்தில் அதை விட்டு வெய்யிலில் வைத்து முன்போல் கலக்கி வரவேண்டும் முன் பானையை வெய்யிலில் வைத்து உலர்த்த வேண்டும் மூன்று நாள் முன் உலர்த்தின பானையில் விட்டு வெய்யிலில் வைத்து உலர்த்த வேண்டும். மூன்றும் நாள் முன் உலர்த்தின பானையில் விட்டு வெய்யிலில் வைத்து முன்போல் கலக்கி வரவேண்டும். மறு பானையை வெய்யிலில் வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் நாள்தோறும் பானையை மாற்றி மாற்றி விட்டு வெய்யிலில் வைத்து வரவேண்டும். இவ்விதம் ஒரு வாரம் அல்லது, பத்து நாள் சென்றால் நீரில் புளிப்பேறிக் காடி வாசனை உண்டாகி விடும் அந்தச் சமயத்தில் அடுப்பேற்றி நான்கிலொரு பாகமாகச் சுண்ட வைத்து வடிகட்டித் திப்பி நீக்கின குடிநீரை மூன்று பாகமாகச் செய்து ஒரு பாகத்தில் மேற்படி நற்பவளத்தை ஒன்றிரண்டாக உடைத்து அதில் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து அந்தக் குடிநீரெல்லாம் சென்ற பின்பு குடிநீரின் மறுபாகத்தை விட்டு முன்போல் சுண்டவைத்து அதுவும் சுண்டின பின்பு மற்றொரு பாகத்தையும் விட்டு அதையும் சுண்டவைத்து இறக்கிக் குளிர ஆறின பின்பு நீரை விட்டுக் கழுவி வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தூய்மையானது எல்லாவற்றிற்கும் முதன்மையானது. பவழத்தின் தூய்மை

வறு அநேகம் இருப்பினும் இந்தத் தூய்மைக்குஒப்பாகாது. பாட்டிற்குத் தகுந்த பலன் உண்டென்பது உலகறிந்த சொல்லாகும்.

319. பவழ பற்பம்

மேற்கண்டபடி தூய்மை செய்த பவழம் 1 பலம் (35 கிராம்) ஆத்தி இலைச்சாறு, சரக்கொன்றை இலைச்சாறு, வேங்கைப்பட்டைச் சாறு, எருக்கின் இலை, பூ ஆகிய இரண்டையும் சமமாகச் சேர்த்திடித்த சாறு (இது வெள்ளெருக்கானல் அதிக சிறப்பு) இந்நான்கும் வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட பவழத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஆத்தி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி 60 பலம் வறட்டியில் புடமிட்டுஆறினபின் எடுத்துக் கொள்ளவும்.

இதனைக் கல்வத்திலிட்டுச் சரக்கொன்றைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல் நான்கு சாம (12 மணி) நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி முன்போல் கவசஞ் செய்துலர்த்தி ஐம்பது பலம் (1750 கிராம்), வறட்டியில் புடமிட வேண்டும்.

ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டு வேங்கைப் பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல நான்குசாம (12 மணி) நேரம் அரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி முன்போல் கவசஞ் செய்துலர்த்தி 60 பலம் வறட்டியில் புடமிட வேண்டும்.

ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன்சொல்லி இருக்கிற படி சித்தப்படுத்தின எருக்கிலை பூச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல் நான்கு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி முன்போல் கவசஞ் செய்துலர்த்தி 50 பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கக் கடவுளினது அருளினால் சிறப்பான பற்பமாய் இருக்கும்.

அளவு :- 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி மணி எடை.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :- பசுவின் நெய் 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, கபநோய் உப்புச வாந்தி, உளைமாந்தை, பீசவாயு, கோரவாயு ஆகியவைகள் தீரும்.

பனங்கள் 2 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்

துண்ண, சுரம், உப்புச சன்னி, பெரும்பாடு, பித்தசுரம், பித்தா பித்தம், பெருவயிறு, பித்த உதிரவாயு, இரைப்பிருமல், பித்த பாண்டு, பித்தமூலம், பித்த சேத்தும பிரமை, பித்தசன்னி ஆகியவை தீரும்.

பசுவின்பால் 2 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, சேத்தும சுரம், நச்சுசுரம், நீரிழிவு, மலநீர்கட்டு, தடுமன், விக்கல், மாரக சன்னி, மூர்ச்சை, வாத சன்னி, விப்புருதி, பாரிச சன்னி, இருமல் ஆகியவைகள் தீரும்.

பசுவின் தயிர் 5 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை இவ் விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, கடுப்புவாதம், பெருவிக்கல், மேற்சுவாசம், சன்னி பொருமல், பைசாச சன்னிவாயு, மோகசன்னி ஆகியவைகள் தீரும்.

பசுவின் மோர் ½ பலம், தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நடுக்கு வாதம், உதறுவாதம், பக்கவாயு, வாதகுன்மம், புகைச்சல், கண்படலகாசம் ஆகியவை தீரும்.

குளிர்ந்த நீர் 2 பலம், தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நரம்புப்பிடிப்பு, நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

துளசிச்சாறு 2 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, பாரிசவாதம், வாதாதி முத்தோட சுரம் ஆகியவைகள் தீரும்.

இளநீர் 2 பலம், தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி செய்ய, பித்தகாசம், பெருவாரிப் பிணி ஆகியவை தீரும்.

பனங்காய் நொங்கின் நீர் ½ பலம், தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, கபகாசம், மகாநீர்ப்பிணி ஆகியவைகள் தீரும்.

நெல்லிக்கனிச்சாறு 2 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி கலந்து உண்ண, பித்த மேகத்தினவு, மேகவெட்டை, மேகஊறல் ஆகியவைகள் தீரும்.

கொத்துமல்லிக் கீரைச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, பித்த வாதம், வல்லைக் கட்டி, பெருவயிறு ஆகியவைகள் தீரும்.

சந்தனக் குழம்பு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, பித்த வாதம், பெருவயிறு ஆகியவைகள் தீரும்.

பனைவெல்லம் 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட பற்பத்தை மேற்கண்டபடி உண்ண, கபவாதம், பல்வாதம் ஆகியவைகள் தீரும்.

தேன் 1 வராகன் எடை இதில் மேற்படி பற்பத்தை மேற்கண்டபடி உண்ண, பித்தவாத நடுக்கல், அல்குல் புற்று ஆகியவைகள் தீரும்.

வில்வ இலைச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி செய்ய, சேத்தும வாத நடுக்கல், சுவேத சன்னி ஆகியவைகள் தீரும்.

மகிழம்பூச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி செய்ய, பித்தவாத பந்தம், மாரடைப்பு ஆகியவைகள் தீரும்.

மூங்கிற் கிழங்குச் சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையுங் கலந்து மேற்கண்டபடி உண்ண, சேத்தும பந்தம், தலைநோய் ஆகியவை தீரும்.

கருங்குறுவையரிசியை வறுத்திடித்தமா 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, வாத அனல்நோய், பித்த வல்லைக்கட்டி ஆகியவைகள் தீரும்.

புன்னைப் பூச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, சேத்தும வயிற்றுவலி, நீரேற்றம், பல்லடிப் பிணி ஆகியவைகள் தீரும்.

சரபுன்னை இலைச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, மேக அனல்பிணி, பித்த அனல்பிணி ஆகியவைகள் தீரும்.

வெந்நீர் 5 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்டபடி உண்ண, மாரக சன்னி, பட்சவாதப் பிரமை ஆகியவைகள் தீரும்.

காற்பலம் மாதுளை விதையை மூன்று பலம் குளிர்ந்த நீரில் மூன்று மணி நேரம் ஊற வைத்து, ஒன்றே காற் பலம் பழைய வெல்லம் சேர்த்தரைத்து, மூன்று பலம் பசுவின் பாலில் கரைத்து, அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் உண்டு, நல்லெண்ணெய், கடுகு, புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை அறவே நீக்கி, அவசியமான போது பசுவின் பாலையே குடித்து, அத்திப் பழம், தித்திப்பான மாம்பழம் என்னும் இவற்றையே உணவாகக் கொண்டு இவ்விதம் ஒரு (48 நாட்கள்) மண்டலம் உட்கொண்டால் வாத பிரமேகத்தால் உண்டான தாது இழப்பு, ஆண்குறித் தளர்ச்சி, விந்து நீர்த்திருத்தல் ஆகியவை தீர்ந்து, தாதுப் பெருக்கம் உண்டாகி நரம்புகளின் சோர்வு ஆகியவைகள் தீரும்.

முருங்கை விதைப் பருப்பு $2\frac{1}{2}$ பலம் இதனைக் குளிர்ந்த நீரில் மூன்று மணி நேரம் ஊற வைத்து, ஒன்றே கால் வராகன் எடை சர்க்கரையைச் சேர்த்து அரைத்து, செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி பசுவினெய் விட்டுக் கலந்து, அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாகப் புசித்து மேற்கண்ட பத்தியத்தையே அனுசரித்து, வேண்டும் போது வெந்நீரில் பருகச் செய்து; பலாப்பழம், பனம்பழம் என்னும் இவற்றை உணவாகப் புசித்து வந்தால், பித்த சம்பந்தத்தினால் உண்டான பிரமேகம், அதனால் உண்டான விந்து இழப்பு, நரம்புத்தளர்ச்சி, நரம்புச் சோர்வு ஆகியவைகள் தீர்ந்து, தாது சக்தி உண்டாகி, நரம்புகள் பலப்பட்டு உடல்வளம் உண்டாகும்.

புல்லாஞ்சி விதை 3 வராகன் எடை, இதனை மூன்று பலம் குளிர்ந்த நீரில் மூன்று மணி நேரம் ஊற வைத்து $1\frac{1}{4}$ வராகன் எடை கற்கண்டைச் சேர்த்து அரைத்து, ஒரு பலம் பசுவெண்ணெயில் குழைத்து, இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் உண்டு. மூன் பத்தியமுங்காத்து வந்து, அவசியமான போது

கிச்சிலிப்பழம், வாழைப்பழம், என்னும் இவற்றைப் பலகாரமாகச் சாப்பிட்டு வந்தால், சேத்தும சார்பான பிரமேகம், அதனால் உண்டான தாது இழப்பு, நரம்புகளின் தளர்ச்சி, சோர்வு ஆகியவைகள் தீர்ந்து, தாது வளம் உண்டாகி, நரம்புகள் பலப்பட்டு, உடல் வலிமை, உடல் வளம் முதலியவைகள் உண்டாகும்.

மருத்துணவு :- இதற்கு ஏற்ற பத்தியம்; புணர்ச்சி அறவே நீக்க வேண்டியது தான். இதைச் சாப்பிடும் போது பெண்ணிச்சை உண்டாகும் ஆகையால் மனதை நழுவ விடாமல் அதிக விழிப்புடன் மேற்கண்ட பத்தியத்தைப் பாதுகாத்து வந்தால், இயல்பான வலிமையைக் காட்டிலும் பதினைந்து பங்கு அதிகமான வலிமை உண்டாகும். அப்படிப் பத்தியம் காக்கா விட்டால், தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி வீணாகி விடும்.

320. பவழ பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த பவழம் 1 முதல் 7 பலம் வரை (35 முதல் 235 கிராம் வரை) எருக்கம் பால் செல்லத் தக்க அளவு. (வெள்ளெருக்கின் பாலாயின் மிக நல்லது).

செய்முறை :- மேற்படி பவழத்தைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஒட்டில் வைத்து மேல் ஓடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி எட்டு வீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாக இருக்கும்.

அளவு :- $\frac{1}{2}$ முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :- வெண்தாமரைப் பூச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, கப சம்பந்தமான இரத்தபித்த நோய் தீரும்.

பசுவின் வெண்ணெய் 3 வராகன் எடை, கற்கண்டுத்தூள் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உண்ண, நாட்பட்ட சுரம், சயகாசம், இரத்தபித்த நோய் ஆகியவைகள் தீரும்.

விதை நீக்கின திராட்சைப்பழம் 2 வராகன் எடை, ஆடாதொடை இலைச்சாறு 3 வராகன் எடை தேன் 3 வராகன் எடை, திராட்சைப் பழத்தை வெண்ணெய் போல் அரைத்து மற்றிரண்

டையும் சேர்த்து கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, இரைப்பிருமல் எல்லா வகை இருமல்கள் ஆகியவைகள் தீரும். பசியுணர்வு அதிகப்படும். உடல் வலிமை, உடல் வளமை ஆகியவைகள் பெருகும். உடற்பொலிவு, முகக்களை ஆகிடவைகள் உண்டாகும்.

வில்வ இலைச்சாறு 3 வராகன் எடை, மேற்சருகை நீக்கின சீந்திற் கொடிச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, பித்த சம்பந்தமான நோய் முதலியவை தீரும்,

கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் 8 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட அளவுப்படி பற்பத்தைச் சேர்த்துண்ண உணவு செரிக்கும்போது உண்டாகும் பித்த குன்மம், வாயு குன்மம் ஆகியவைகள் தீரும்.

கொத்துமல்லிக் கீரைச்சாறு 9 வராகன் எடை தேன் 6 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, இரத்தக் கழிச்சல், பித்த சம்பந்தமான நோய்கள் ஆகியவைகள் தீரும். அதிகப்பசி உண்டாகும்.

தண்ணீர் விட்டான் கிழங்குத் தூள் 8 குன்றிமணி எடை, பூனைக்காலி விதைத் தூள் 8 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண தாதுவளம் உண்டாகும்,

மருத்துணவு :- புணர்ச்சியை அவசியம் நீக்க வேண்டியது. பிறகு, சமயோசிதம் போல் பத்தியத்தை ஏற்படுத்தவும்.

321. பவழ பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த நற்பவழம் 1 பலம் (35 கிராம்) கற்கண்டு 3 பலம் (105 கிராம்).

செய்முறை :- கற்கண்டை இடித்துத் தூள் செய்து இரண்டு பாகமாக்கி, ஒரு பாகத்தை ஒரு சிறு கலயத்தில் பரப்பி, அதன் மீது பவழத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து வைத்து அதன் மீது கற்கண்டின் மறுபாகத்தைப் போட்டுச் சமமாக அழுத்திக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி

ஐம்பது வீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாக இருக்கும்.

அளவு :- 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெ பசுவின் நெய், பசுவின் பாலேடு, பசுவின் பாலல்வா ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :- மூத்திரத்தில் இரத்தம் விழுதல், மூக்கில் இருந்து இரத்தம் விழுதல், இரத்த பேதி, இரத்தக் கடுப்பு ஆகியவைகள் தீரும். உள் உறுப்புகளில் எந்த உறுப்பிலாவது இரத்தம் வெளிப்பட்டாலும் அதனை நிறுத்துவதில் இது சஞ்சீவிக் கொப்பானது.

மருந்துணவு :- சூடுதரும் பண்டங்கள், புளிப்புப் பண்டங்கள், ஆகியவைகளை நீக்க வேண்டியது.

322. பவழ பற்பம் (வேறு)

பத்து பலம் (350 கிராம்) கொள்ளும்படியான பீங்கான் கிண்ணத்தில் அதன் வாய்மட்டம் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு அதில் அரைப்பலம் ($17\frac{1}{2}$ கிராம்), கற்கண்டைப் பொடித்துப் போட்டு ஒரு பலம் (35 கிராம்), நற்பவழத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து அதில் போட்டுக் கிண்ணத்தின் வாயை மெல்லிய துணியால் கட்டி வெய்யிலில் வைத்து வரவேண்டும். சாறெல்லாஞ் சுண்டின பின்பும் வெய்யிலில் வைத்துப் பவழம் நன்றாய் வெண்மையாகிற வரையில் வைத்து வர வேண்டும். நன்றாய் வெளுத்த பின்பு எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பசுவினெய், வாதுமை அல்வா, கோதுமைப் பால் அல்வா, நன்னாரி வேர்த்தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரத்தக் கெடுதலினால் உண்டான சொறி, சிரங்குகள், புண்கள், கட்டிகள், ஆறாத இரணங்கள் ஆகியவைகள் தீரும். இரத்தத்திலுள்ள குற்றத்தைப் போக்குவதற்கு இது சஞ்சீவிக்கு ஒப்பானது. இன்னும் உடல்வலிமையைப் பெருக்கச் செய்வதில் இது ஒப்பற்றதென பழக்கத்தால் உறுதியாக்கப் பட்டிருக்கிறது.

குறிப்பு :- இந்தப் பற்பமானது வெகு நாள் பழக்கத்தால் கண்டு பிடிக்கப் பட்டது. மற்றவைகளைப் பார்க்கிலும் இதில் ஏதோ சிறப்பான குணம் இருக்கின்றது என்பது இதனைச் செய்து அனுபவ சித்தமாக உபயோகித்து வருபவர்களுக்கே தெரியும். இதனைச் செய்து முடிக்கச் சுமார் இரண்டு வாரம் செல்லும். ஆனால் வேறெவ்விதத் துன்பமும் இல்லை. அவசரமாகச் செய்து கொள்ள வேண்டுமானால் மேற்கண்டபடி சித்தப் படுத்திக் கலயத்தில் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலமண் செய்யாமல் ஐந்து வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும். ஆனால், சூரிய புடத்தில் செய்த பற்பத்திற்கும் தீப்புடத்தில் செய்த பற்பத்திற்கும் பெருத்த வேறுபாடு இருக்கின்றது. ஓய்வான காலங்களில் மேற்கண்டபடி சூரிய புடத்தில் செய்து சித்தமாக வைத்திருந்தால் உற்ற நேரங்களில் உதவியாகும். பெரிய மருத்துவ அறிஞர்கள் மேற்கண்ட முறைப்படி செய்து சித்தமாக வைத்திருந்து வேண்டுங் காலங்களில் பயன் படுத்தி மிக்க கீர்த்தியையும், நற்பேறும் அடைவார்களென நம்பப் படுகிறது.

323. பவழ பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த பவழம் 1 பலம் (35 கிராம்), அன்றலர்ந்த ரோஜாப்பூ இதழ் 5 பலம் (175 கிராம்), தாமரைக் கிழங்கு 5 பலம் (175 கிராம்).

செய்முறை :- பின்கண்ட இரண்டையும் வெண்ணெய் போல் அரைத்து இரண்டு அடையாகச் செய்து மேற்படி பவழத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து ஒரு கெட்டி துணியில் ஒரு அடையை வைத்து அதன்மேல் மேற்படி பவழத்தை வைத்து மேலும் மற்றொரு அடையை வைத்து சுருட்டி அதன் மேல் மூன்று சீலமண் செய்து மூன்று வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாக இருக்கும்.

அளவு :- 2 குன்றிமணி எடை.

துணை மருந்து :- வெள்ளறுகின் இலையை அரைத்த விழுது, பசுவின் வெண்ணெய், வால்மிளகுத் தூள், சந்தனத் தூள் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :- பிரமேகம், விந்து ஒழுக்கு ஆகியவைகள் தீரும்

324. பவழ பற்பம் (வேறு)

மேற்கண்டபடி தூய்மை செய்த நற்பவழம் 1 பலம் (35 கிராம்) சோற்றுக் கற்றாழைச் சாறு 20 பலம் (700 கிராம்).

செய்முறை :- இவ்விரண்டையும் ஒரு கலயத்தில் போட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு இரண்டு சீலைமண் செய்து கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பவழமானது பற்பமாகி இருக்கும்.

அளவு :- 1 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து ;- சோம்புத் தீநீர், காசினிவிதைத் தீநீர், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- மண்ணீரல் வீக்கம், கழிச்சல், இரத்தகாசம் ஆகியவைகள் தீரும். இரத்த சயமுள்ளவர்களுக்கு ஆடாதோடை இலை 1, வெண்மிளகு 2 இவ்விரண்டையும் அரைத்து அதில் சேர்த்துக்கொடுக்க, மேற்கண்ட நோய், இரத்தங்கக்கல் ஆகியவை தீரும். இரத்தகாசம், இரத்த கபமுள்ளவர்களுக்குக் கழுதைப் பாலில் சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

325. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த நற்பவழம் 3 வராகன் எடை, சோற்றுக் கற்றாழைச்சாறு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), மாதுளையிலைச்சாறு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), வேப்பிலைச் சாறு 2 பலம் (70 கிராம்) மருதோன்றி யிலைச் சாறு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :- இவை எல்லாவற்றையும் ஒரு புதுக் கலயத்தில் போட்டுக் கரிநெருப்பின் மீது வைத்து ஒரு குச்சியால் கிண்டிக் கொண்டிருக்க வேண்டும். அது குழம்பு பதமானவுடன் எடுத்துக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய்து இரண்டரை வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க உயர்ந்த பற்பமாக இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பசுவினெய், ஆலம் விழுதை அரைத்த விழுது, வெள்ளறுகை அரைத்த விழுது முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரத்த சயம், இரத்த காசம், இரத்தங்கக்கல் மூக்கிலிருந்து இரத்தம் வருதல், மலத்தில் இரத்தம் விழுதல், மூலத்தில் இரத்தம் விழுதல் முதலியன தீரும்.

மருந்துணவு :- சூடுதரக்கூடிய பண்டங்கள், புளிப்புப் பண்டங்கள் ஆகியவைகளை நீக்க வேண்டியது.

326. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த நற்பவழம் 1 பலம் (35 கிராம்), வாழைக் கிழங்குச்சாறு செல்லதக்க அளவு.

செய்முறை :- பவழத்தைக் கரி நெருப்பில் காய்ச்சி மேற்படி கிழங்குச் சாற்றில் தோய்க்க வேண்டும். அது ஆறின பின்பு மறு படியும் கரிநெருப்பிற் காய்ச்சித் தோய்க்க வேண்டும், இவ்விதம் மடக்கி மடக்கி இருபத்தொரு தடவைகள் காய்ச்சித் தோய்க்க வேண்டும். பவழமானது நொறுங்க ஆரம்பித்தால் புது ஓட்டில் வைத்து ஒடு சிவக்கக் காய்ச்சி மேற்படி நீரில் போட வேண்டும். பிறகு அந்த நீரை மெதுவாயிறுத்து விட்டுப் பவழத் துண்டுகளை ஒரு மண் கலயத்தில் போட்டு அது நிறைய வாழைக்கிழங்குச் சாற்றை விட வேண்டும். இந்தச் சாருனது பத்துப் பலத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். பிறகு கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய்து ஐந்து வீசை வறட்டியில் புட மிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும்நோய்கள், துணைமருந்து முதலியவைகள் எல்லா மேற் கண்டவைகளேயாம்.

327. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த நற்பவழம் 1 பலம் (35 கிராம்), தண்ணீரில் ஊற வைத்து மேற்றோல், உள்நரம்பு ஆகியவைகளை நீக்கின தண்ணீர் விட்டான் கிழங்கு 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- மேற்படி தண்ணீர் விட்டான் கிழங்கை மை போல் அரைத்து இரண்டடையாகச் செய்து ஒன்றில் மேற்படி பவளத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து வைத்துப் பரப்பி மறு ‡ அடையால் மூடி இரண்டோரங்களையும் பொருந்தும் படியாகச் செய்து அதன் மீது மூன்று சீலைமண் செய்து கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றி மணி எடை.

குறிப்பு :- ‡ மேற்படி அடைகளை வைக்க ஒரு கெட்டித் துணியை உபயோகித்தல் மிக்க நலமாம்.

துணைமருந்தும், தீரும்நோய்களும் மேற்கண்டவைகளேயாம்.

328. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த நற்பவழம் $1\frac{1}{4}$பலம் ($43\frac{3}{4}$கிராம்), இதனை ஐந்து பலம் எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டுச் சூரிய புடம் வைக்க வேண்டும். சாறெல்லாஞ் சுண்டின பின்பு அதில் ஐந்து பலம் எருக்கம்பாலை விட்டு மூன்று நாள் சூரிய புடம் வைத்து நான்காம் நாள் அதை வச்சிர மூசையில் இட்டு மேல் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒருமணங்கு வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றி மணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பாலேடு, பசுவின் நெய், ஆடாதோடைப் பாணிதம், முயல் நெய் முதலியவைகளாம் இம் முறைகளெல்லாம் பின்னெழுதப்படும்.

தீரும்நோய்கள் :- இருமல், சயம், அழல் சம்பந்த நோய், வெட்டை முதலியவைகள் தீரும்.

329. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த நற்பவழம் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்) இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் ஐந்து பலம் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்துச் சாறெல்லாஞ் சுண்டின பின்பு பவழத்தைச் சோற்றுக்கற்றாழை மடலுக்குள் செலுத்தி அதன்மீது மூன்று சீலைமண் செய்து 50பலம் (1750கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றி மணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பசுவினெய், தேன் ஆலம் விழுதை அரைத்த விழுது, வெள்ளறுகை அரைத்த விழுது முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- எலும்புருக்கி நோய், இருமல் நோய், மேக நீரெரிச்சல், சயம், என்புச்சூடு, மேகச்சூடு, இருமல், புகைச்சல் ஆகியவைகள் தீரும்.

330. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழம் 1 பலம் (35 கிராம்), கீழ்க்காய் நெல்லி இலை 20 பலம் (700 கிராம்).

செய்முறை :- கீழ்க்காய் நெல்லி இலையை வெண்ணெய் போல் அரைத்துப் பவழத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து அதற்குள் வைத்து மூன்று சீலைமண் செய்து எட்டு வீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாக இருக்கும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :- முலைப்பால், கழுதைப்பால், வெண்ணெய் முதலியவைகள் தீரும்.

தீரும்நோய்கள் :- காசம், ஈளை, இருமல், என்புச்சுரம், என்புச் சூடு ஆகியவைகள் தீரும்.

331. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழம் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுப் பருமனுள்ள மூன்று எலுமிச்சம் பழங்களைப் பிழிந்து அதில் விட்டு ஒரு இராத்திரி ஊற விட்டுக் காலையில் எடுத்துக்கழுவி பத்துப் பலம் (350 கிராம்), தேள் கொடுக்கி இலையை அரைத்து இரண்டடையாகச் செய்து ஒரு அடையில்பரப்பி மேலடை வைத்து மூடிச் செவ்வையாகக் கெட்டிப் படுத்தி மூன்று சீலைமண் செய்து ஐந்து வீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாம்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், பசுவினெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- சயநோய், இரைப்பிருமல் கணைச்சூடு எலும்புச்சூடு முதலியவைகள் தீரும்.

332. பவழ பற்பம் (வேறு)

தூய்மை செய்த நற்பவழம் 1 பலம் (35 கிராம்) பருமனுள்ள எலுமிச்சம்பழம் மூன்று, இலந்தையிலை 5 பலம் (175 கிராம்).

செய்முறை :- பவழத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஓரிரவு ஊற வைத்துக் காலையில் எடுத்து மேற்படி இலந்தை இலையை அம்மியில் வைத்து மைபோல் அரைத்துக் குகையும் மூடியுஞ்

செய்து அதற்குள் முன் பவழத்தை வைத்து மூடியால் மூடி மூன்று சீலைமண் செய்து 200 பலம் (7000 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், நெய்.

தீரும்நோய்கள் :- மேக வெட்டை, பிரமேகம், நீரெரிச்சல், விந்துக் குறைவு, விந்து ஒழுக்கு ஆகியவைகள் தீரும்.

பவழப்புற்று பவழக் கொடி

பவழப்புற்று, பவழக் கொடியின் தூய்மைகள் பவளத்தைச் செய்வது போலவே செய்து கொள்ளலாம்.

மேற்படி தூய்மை (வேறு)

பவழக்கொடி, புற்றுகளை ஒருசிறு பொட்டணமாகக் கட்டிச் சிறு தோண்டிக்குள் முக்கால் வாசி சோற்றுக்கற்றாழைச் சாற்றை விட்டு அதில் மேற்படி பொட்டணத்தைக் கிழி கட்டித் தொங்க விடவேண்டும். பொட்டணமானது பாத்திரத்தின் அடியிற் படாமல் சற்று உயரமாகவே தொங்க வேண்டும். விட்ட சாறுனது சுண்டின பின்பு எடுத்து நீர் விட்டுக் கழுவி ஈரம் போக உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் பவழத்தையும் தூய்மை செய்து கொள்ளலாம்.

333. கொடிப்பவழச் சுண்ணம்

தூய்மை செய்த கொடிப்பவழம் தேவையான அளவை ஒரு சட்டியில் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றையும், புளித்த மோரையும் சமமாகக் கலந்து அதில் விடவேண்டும். கொடிப் பவழமானது நாலங்குலம் ஆழ்ந்திருக்க வேண்டியது. இதனை அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நீர் சுண்டின பின்பு ஒரு நாள் வெய்யிலில் வைத்து முயல் இரத்தத்தை விட்டுப் பிசறி வெய்யிலில் வைத்து மறுநாள் ஓட்டில் இட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்யாமல் 300 பலம் (10500 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கக் கடுங்காரச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றி மணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய். பசுவினெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- சயம், இருமல், சுவாசகாசம் ஆகியவைகள் தீரும்.

334. பவழப்புற்று பற்பம்

தூய்மை செய்த பவழப்புற்று 2 பலம் (70 கிராம்), மிளகாய் விதை செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மிளகாய் விதையை அம்மியில் வைத்து நீர் வார்த்து வெண்ணெய் போலரைத்துப் பவழப்புற்றிற்கு ஒரு விரற் கனம் கவசஞ் செய்து உலர்த்தி மூன்று சீலமண் செய்து உலர்த்தி முந்நூறு பலம் வறட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரத்தகாசம், இரத்தங்கக்கல், இருமல் முதலியவைகள் தீரும்.

335. பவழக்கொடி பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழக்கொடி 2 பலம் (70 கிராம்); சோற்றுக் கற்றாழைச் சாறு 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- மேற்படி சாற்றை ஒரு கலயத்தில் நிறைய விட்டுப் பவழக்கொடியைப் போட்டுச் சில்லிட்டுச் சீலமண் செய்து 250 பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 4 அரிசி எடை.

துணைமருந்து :- தேன், பாலேடு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரைப்பு இருமல், நாட் பட்ட இருமல், விந்து ஒழுக்கு ஆகியவைகள் தீரும். தாது விருத்தி உண்டாகும்.

336. பவழக் கொடி பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழக்கொடி 1 (35 கிராம்), காவிமண், அல்லது பூங்காவி செல்லத்தக்க அளவு, முட்டை வெள்ளையம் பிலி செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி காவியை, அல்லது பூங்காவியைக் கல்வத்தில் விட்டு வெள்ளைக் கருவைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு மணி நேரம் அரைத்து ஒரு விரற்கனமுள்ள இரண்டடை யாகச் செய்து ஒரு அடையில் மேற்கண்ட பவழக்கொடியைப் பரப்பி மறு அடையால் மூடி ஓரங்களைக் கெட்டிப்படுத்தி அதன் மீது இரண்டு சீலைமண் செய்து 250 பலம் (8 கிலோ 750 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கவும். தீ சரியாக இருந்தால் ஓரே புடத்தில் வெண்மையான பற்பமாகி விடும். அப்படியாகா விட்டால் மறுபடியும் வெண்மையாகிற வரையில் புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும்.

அளவு :- 2 முதல் 3 அரிசி எடை.

துணைமருந்து :- தேன், பாலேடு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- நாட்பட்ட இருமல், இரத்த சயம், இரத்த காசம், இரத்த வாந்தி, நுரையீரல் புண் ஆகியவைகள் தீரும்.

337. பவழக்கொடி பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழக்கொடி 1 பலம் (35 கிராம்) அன்ற லர்ந்த ரோஜா பூ 5 பலம் (175 கிராம்)

செய்முறை :- மேற்படி பூவை வெண்ணெய்போல் அரைத்து அதற்குள் பவழக்கொடியைப் பொதிந்து மூன்று சீலைமண் செய்து நூறு பலம் (3500 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து முன் போல் ரோஜாப் பூவை அரைத்துக் கவசஞ் செய்து முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று அல்லது நான்கு புடமிட்டால் வெண்மையான பற்பமாகி விடும்.

அளவு :- 2 முதல் 4 அரிசி எடை.

துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகள் மேற்கண்டவைகளாம்.

338. பவழக்கொடி பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழக்கொடி 1 பலம் (35 கிராம்) ஆடாதோடையிலை 5 பலம் (175 கிராம்).

செய்முறை :- ஆடாதோடை இலையை அரைத்துப் பவழக் கொடிக்குக் கவசஞ் செய்து மேலும் இரண்டு சீலைமண் செய்து நூறு பலம் வறட்டியில் புடமிட வேண்டும், பிறகு எடுத்து முன் போல் மேற்படி இலையை அரைத்துக் கவசித்து முன் போல் புடமிட வேண்டும். இவ் விதம் மடக்கி மடக்கி மூன்று நான்கு தடவை புடமிடப் பற்பமாகி விடும்.

அளவு :- $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், முலைப்பால், பசுவின்நெய், தேன் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரத்தங் கக்கல், சயம், காச நோய் ஆகியவைகள் தீரும்.

339. பவழக்கொடி பற்பம் (வேறு)

தூய்மை செய்த பவழக்கொடி 1 பலம் (35 கிராம்) இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துச் சிறு கலயத்தில் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திச் சமையல் அடுப்பின் கீழ்ப் புதைத்து விட வேண்டும். ஒரு நாள் முழுவதும் சமையல் செய்த பின்பு மறு நாளெடுத்துப் பார்க்க, சுத்த வெண்மையாய் இருந்தால் உத்தமம். அப்படி இல்லா விட்டால் மறுபடியும் முன் போல் செய்து முன் போற் புதைத்து எடுக்க வெண்மையான பற்பமாகி விடும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :- பாலேடு, வெண்ணெய், பசுவினெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரத்தத்தைத் தூய்மை செய்து உடல் வலிமையை விருத்தி செய்யும்; இரத்தக் கெடுதியினுல் உண்டான சிரங்கு, சொறி, கட்டிகள், இரணங்கள் ஆகியவைகள் தீரும்.

340. நற்பவழ வைப்பு

சங்குத்தூள் 4 பலம் (140 கிராம்), சாதிலிங்கம் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), இவ்விரண்டையும் கல்வத்தில் போட்டுப் பொடித்துச்

செம்மறியாட்டுச் சீம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு நாள் ஒன்றிற்கு நான்கு சாமமாக மூன்று நாள் பன்னிரண்டு சாமம் அரைத்துப் பவழம் போலுருட்டித் தமரிட்டு உலர்த்தி ஊற வைத்த நெல்லை ஒரு பானையில் முக்கால் வாசி போட்டு அதன் மேல் இதை வைத்து அதன் மேலும் நெல்லைப் பானை நிறையப் போட்டுப் பானை வாயை மூடி நெல்லை அவித்து நெல் வெந்த பதத்தில் எடுக்கப் பவழ வண்ணஞ் சரியாயிருக்கும். சற்றேறக் குறையப் பவழத்தின் குணமும் இதற்குண்டு.

முத்துத் தூய்மை

(அ) தேவையான துளையிடாத நன்முத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அது நான்கு அங்குலம் ஆழ்ந்திருக்கும் படியாகப் புளித்த பசுவின் தயிரை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். தயிரானது சுண்டி உலர்ந்து விட்டால் முன் போல் தயிர் விட்டு வெய்யிலில் வைத்து உலர்த்த வேண்டும். இவ்விதம் மூன்று தடவை விட்டு மூன்று தடவை உலர்த்தி எடுத்து நீரை விட்டுக் கழுவி எடுத்து ஈரம் வற்ற வெய்யிலில் வைத்து உலர்த்தி எடுத்துக் கொண்டால் முத்தானது தூய்மையாகி விடும்.

மேற்படி தூய்மை (வேறு)

(ஆ) தாழம்பூத் திராவகம், காடி, இவ்விரண்டையும் சமபாக மாகச் சேர்த்து ஒரு சிறு கலயத்தில் முக்கால் வாசி இருக்கும் படியாக விட்டு அதில் தேவையான அளவு துளையிடாத நன் முத்தை மெல்லிய துணியில் முடிந்து அந்தப் பாத்திரத்தில் கிழிக்கட்டித் தொங்கவிட வேண்டும். அந்த முடிப்பானது பாத்திரத்தின் அடியில் படாத விதமாகவும் இருக்க வேண்டும். அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துத் திரவமெல்லாஞ் சுண்டின பின்பு ஆறவிட்டு எடுத்து நீரை விட்டுக் கழுவிக் கழுவியெடுக்க முத்திலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கித் தூய்மையாகி விடும். இவ்விதம் தூய்மை செய்யப் பட்ட முத்தைப் பற்பமாகப் பற்பித்து உபயோகித்தாலும், அல்லது, பாகப் படுத்தி உபயோகித்தாலும் சிறந்த குணம் உண்டாகும்.

முத்துத் தூய்மை (வேறு)

(இ) பசுவின் பாலை ஒரு பாத்திரத்தில் அரைவாசி இருக்கும் படியாக விட்டுத் தேவையான அளவு, தொளையிடாத நன் முத்தை மெல்லிய துணியில் முடிந்து அந்தப் பாத்திரத்தில் கிழி கட்டிப் பாத்திரத்தின் அடிப்பாகத்திற்கு படாமல் இரண்டங்குலம்

உயரமாயிருக்கும் படியாகத் தொங்கவிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாலெல்லாஞ் சுண்டின பின்பு இறக்கி ஆற வைத்து நீரை விட்டுச் சுத்தமாகக் கழுவி ஈரமில்லால் உலர்த்தி எடுத்துக் கொள்ள அதிலுள்ள குற்றங்கள் எல்லாம் நீங்கி முத்தானது தூய்மையாகி விடும்.

341. முத்துப் பற்பம்

(அ) வில் சொல்லியிருக்கிறபடி தூய்மை செய்த துளையிடாத நன்முத்து 1 பலம் (35கிராம்), வெள்ளைச்சாறு வேளைச் சமூலச்சாறு, வெள்ளெருக்கின் பூ, வெள்ளெருக்கின் இலை இவ்விரண்டையுஞ் சமபாகமாகச் சேர்த்து இடித்துப் பிழிந்தசாறு, அத்தியிலைச்சாறு மருதம் இலைச்சாறு இந் நான்கும் வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெள்ளைச்சாறுவேளைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி இருபது பலம் வறட்டியில் புடமிட்டு ஆறின பின்பு எடுத்துக் கொள்ளவும்.

மேற்படி மருந்தைக் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கின் பூ, இலை ஆகியவைகளின் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து முன் போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் கவசஞ் செய்து உலர்த்திப் பதினாறு பலம் வறட்டியில் புடமிட வேண்டும்.

புடம் ஆறினபின் எடுத்து அதைக் கல்வத்திலிட்டு அத்தி இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்திப் பதினான்கு பலம் வறட்டியில் புடமிட வேண்டும்.

பிறகு குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் மருத இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் நேரம் அரைத்து முன் போல் வில்லை செய்து உலர்த்தி முன் போல் கவசஞ் செய்து உலர்த்திப் பன்னிரண்டு பலம் வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க உயர்த்த பற்பமாகி இருக்கும்.

அளவு :- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :- கள்ளிக் கொழுந்துச் சாறு 1 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை இவ்விரண்டும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, வாதத்தைப் பற்றி வரப்பட்ட பிடிப்பு, கை கால் குத்து, உழைப்பு, நீர்க்கோர்வை போல் வயிற்றில் கட்டிக் கொண்டு மிகவும் வலித்தல் ஆகியவைகள் தீரும்.

குளிர்ந்த தண்ணீர் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, சத்தி, விக்கல், பெரும்பாடு, வல்லைக் கட்டி, மகோதரம், பாரிசவாதத் தொடர்ச்சி, வெப்ப வாயு, மேகக் குட்டம் ஆகியவைகள் தீரும்.

பசுவின் தயிர் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துட்கொள்ள, நீர்க்கோர்வை, பாரிச சன்னி, பெருவயிறு இரசப்பரு ஆகியவைகள் தீரும்,

பசுவினெய் 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டிருக்கின்றபடி உண்ண, உன்மத்த சோகை, பெரும் பாடு, பைத்திய வாதம், பெருவயிறு, பித்தசூலம், மயக்கப் பாண்டு, நீரிழிவு, சேத்தும சுரம், பிரமியம் ஆகியவைகள் தீரும்.

பசுவின் பால் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி கலந்துண்ண, இரத்த நீரிழிவு. உற்பாத பெருங்கழிச்சல், உற்பாத சத்தி, வெப்பானிலம் ஆகியவை தீரும்.

பனங்கள் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி கலந்துண்ண, சொறி சிரங்கு, தேமல், பாண்டு ஆகியவைகள் தீரும்.

வெந்நீர் ½ பலம் (17½ கிராம்), தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி உண்ண, அத்திப் பயோதரச்சிலந்தி, எலும்புருக்கிப்பரு, பாரிச வெப்பப் பெரும்பாடு, முகப் பரு, வாய்ப்பூட்டுச் சன்னிப்பரு, மேக வெட்டை, பெருங்கழிச்சல் ஆகியவை தீரும்.

தேன் 1 வராகன் எடை இதில் பற்பத்தை மேற்கண்டபடி கலந்துண்ண, மூத்திரக்கிரிச்சரம், நீரறுகள், மேல் மூச்சுமுட்டல், விக்கல், நீர்க்கட்டு, நீரொழுக்கு, நீரெரிவு, நீர்ப்பீனசம், மது மேகம், யோனிப் புற்று, லிங்கப் புற்று, உமரோமக் கிரந்திப்புண், வாத மூலம் ஆகியவைகள் தீரும்.

திராட்சைப்பழரசம் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, வலியுடன் கூடின அண்ட வாதம், வலியில்லாத அண்டவாதம் என்னும் இருவகை அண்டவாதங்கள், கால் வீக்கம், கால்இசிவு பாரிச வாதம் ஆகியவை தீரும்.

கைம்மாறு வெற்றிலைச் சாறு 1¼ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1¼ வராகன் எடை (5¼ கிராம்) ஆகிய இரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, இருமல், தாகம் ஆகியவை தீரும்.

பன்னீர் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, பித்தசன்னி பாதம், நேத்திரப் படலிகை, நேத்திர வாயு, பாரிசாந்தகாரம், மாலைக்கண், பித்தகுன்மம் ஆகியவைகள் தீரும்.

பசுவின் வெண்ணெய் ½ பலம் (17½ கிராம்), தேன் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, மாரிகாலத்தில் கால்களெல்லாம் மரத்தைப் போல் திமிரடைந்து அசைக்க இயலாமல் இருப்பதும் எப்போதும் வலித்துக் கொண்டு உப்புசமும் பெருவயிறும் உடம்பெங்குந் தேள் கொட்டினது போன்ற கடுகடுப்பும், எரிச்சலும், விக்கலும், பிரமையும் உண்டாக்கத் தக்கதுமான இருவகை நோய்களும் தீரும்.

சீனிசர்க்கரை 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, சொறி சிரங்கு, கரப்பான், சிலந்தி, செவ்வாப்பு, உடல் எல்லாம் மொத்தையாகக் கட்டிக் கொண்டு அசைக்க வொட்டாத வேதனையையும், திமிரையுங் கொடுத்து அத்துடன் கோடைக் கொப்பளம், தேமல் ஆகிய இவைகளை உண்டாக்கும்; வாதத்தைப் பற்றிய நோய்களும், முதலில் உற்பாதக் காய்ச்சலும், குளிருங்கண்டு அத்துடன் வாந்தி, விக்கல், இருமல் ஆகிய இவைகள் தோன்றி உடல் முழுவதும் சங்கம் பழத்தைப் போன்ற கொப்புளங்கள், பருக்கள், கட்டிகள் ஆகியவை

புறப்பட்டு வலியைக் கொடுக்கும் பித்தத்தைப் பற்றிய நோய்களும், வயிற்றெரிவு, உடல்பருத்தல் வேதனை, வீக்கம் ஆகிய இவைகளை உண்டாக்கி அவற்றுடன் ஒக்காளம், விக்கல், ஆகியவைகளை வரச் செய்து எருவாயைச் சேர்ந்த இரண்டு பக்கங்களிலும் புட்டங்களிலும் பருக்கள், கட்டிகள், ஆகியவைகளை வரப் பண்ணி ; அங்குள்ள சதைகளை வெடிக்கச் செய்கின்ற சேத்துமத்தைப் பற்றிய நோய்களும் தீரும்.

குளிர்ந்த நீர் ½ பலம் (17½ கிராம்), தேன் ½ பலம் (17½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, பாதத்தில் இரணங்கண்டு திமிருண்டாதல் அக்கினி மந்தப்படுதல் ஆகிய இக் குணங்களுடைய வாதக்களவுரணம் தீரும்.

களாச் சமூலச்சாறு 2 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட அளவுப்படி பற்பத்தை கலந்துண்ண பல்லடியில் அதிக ரணங்கண்டு மிக வேதனை தோன்றுதல், கக்கலும், அதிகப் பசியும், தாகமும் உண்டதால் ஆகிய இக் குணங்களையுடைய பித்தக்களவு ரணம் தீரும்.

மூங்கிற் கிழங்குச்சாறு 2 வராகன் எடை, தேன் 5 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, மூக்குத் தண்டில் அதிக இரணங்கண்டு வெகு உபத்திரவத்தைக் கொடுத்தல், ஒரு வேளை அதிகப் புசியையும். மறுவேளை அக்கினி மந்தத்தையும் உண்டாக்குதல் என்னுமிக் குணங்களையுடைய சேத்துமக் களவுரணம் என்னும் நோய்கள் தீரும்.

விளாவிலைச் சாறு ½ பலம் (17½ கிராம்). தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி உண்ண, கண்டத்தில் இரணங்காணல், வாயில் சுவையின்மையாக உமிழ்நீரை உண்டாக்குதல் ஆகிய குணங்களுடைய வாத மோகைரணம் தீரும்.

முந்திரிகைப் பழச்சாறு ½ பலம் (17½ கிராம்), தேன் ½ பலம் (17½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, நெற்றியில் இரணங்கண்டு சதா எரிச்சலையும், பசி தாகத்தையும் உண்டாகுதல் என்னும் குணத்தையுடைய பித்த மோகை ரணம் தீரும்.

நாணற் கற்கண்டு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி கலந்துண்ண, முழங்காலில் இரணங்கண்டு வலியுடன் பசி

தாகம் இல்லாதிருத்தல் என்னுங் குணத்தையுடைய சேத்தும மோகைரணம் தீரும்.

வாழைச் சமூலச் சாறு 1 பலம் (35 கிராம்), தேன் ½ பலம் (17½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவோடு கலந்துண்ண. இடுப்பைச் சுற்றிலும் வட்டமான ரணங் கண்டு உணர்ச்சியின்றி பசி இல்லாதிருத்தல் என்னுங் குணத்தை யுடைய வாத நகை ரணம் தீரும்.

சம்பு நாவற்பழச் சாறு ½ பலம் (17½ கிராம்), தேன் ½ பலம் (17½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவோடு கலந்துண்ண, கை விரல்களின் அடியில் ரணங்கண்டு தோலுரிந்து எரிச்சலும் நமைச்சலும் உண்டாகி பசியும் மயக்கமும் காணுதல் என்னும் குணத்தையுடைய பித்த நகைரணம் தீரும்.

பசுவின் தயிர் ½ பலம் (17½ கிராம்), தேன் ½ பலம் (17¼ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி அளவோடு பற்பத்தைக் கலந்துண்ண, அடிவயிற்றில் புண்கண்டு அதிக நீரேற்றங் கொண்டு பசி தாகமின்றி வெள்ளைப் பூண்டின் வாசனை உடைய ஏப்பத்தை உண்டாக்குதல் என்னுங் குணத்தையுடைய சேத்தும நகை ரணம் தீரும்.

புளித்த காடி ½ பலம் (17 ½கிராம்), தேன் ½ பலம் (17½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி அளவோடு பற்பத்தைக் கலந்துண்ண, முதுகில் புண்கண்டு அதிக நோயின்றி மார்பின் பள்ளத்தில் நெரிகட்டிப் பசி தாகமின்றி அக்குளில் நோவுண்டாதல் என்னும் குணத்தையுடைய வாத தாகைரணம் தீரும்.

தென்னங்கள், அல்லது சாராயம் ½ (17 கிராம்), தேன் ½ பலம் இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி பற்பத்தை அளவோடு கலந்து அரையில் ரணங்கண்டு அது வெடித்துச் சிலை தீரும். இரத்தமும் சதாவடிந்து உணவில் வெறுப்பு ஏற்பட்டிருத்தல் என்னுங் குணத்தையுடைய பித்த தாகைரணம் தீரும்.

வெந்நீர் ½ பலம், தேன் ½ பலம், இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்டபடி உண்ண விதைகளில் புண் கண்டு அதிற் சீழும், சிலைநீரும், வடிந்து பக்குக்கட்டிச் சதா வேதனையை உண்டாக்கி வயிற்றை வீங்கச்செய்து பசிதாகம், நித்திரை இல்லாமை ஆகிய வைகளை உண்டாக்குதல் என்னும் சிலேத்தும தாகைரணம் தீரும்.

மருத்துணவு :- புணர்ச்சியை அறவே நீக்கவேண்டும். புளி, புகை, உப்பு, ஆகியவைகளை உடல்நோய் ஆகியவைகளுக்குத்

தகுந்தபடி நீக்கியும் சுட்டும் வறுத்தும் சேர்த்தும், அரைப்பாக மாகச் சேர்த்தும் சமயோசிதம்போல கடும்பத்தியம், இலகுபத்தியம், இச்சாபத்தியம் ஆகியவைகளில் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

342. முத்து பற்பம் (வேறு)

மேற்கண்ட பாகங்களில் ஒரு வகையாகத் தூய்மை செய்யப்பட்ட தொளையிடாத நன்முத்து 3 வராகன் எடை, எருக்கம் பால் செல்லத் தக்க அளவு.

செய்முறை :- முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி ஒரு மணாக்கு வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் சித்தர் அருளால் சிறப்பான பற்பமாகி இருக்கும்.

அளவு :- 1 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோய்களும :- ஏலரிசித்தூள் 8 குன்றிமணி எடை, மூங்கிலுப்புத் தூள் 4 குன்றிமணி எடை, வெண்ணெய் 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண மேல் மூச்சு, இருமல் முதலிய நுரையீரல் சம்பந்தமான எல்லா நோய்களையும் நீக்கி நுரையீரலைப் பலப் படுத்தும். இருதயம், தலைமூளை ஆகியவைகளைப் பலப்படுத்தி உற்சாகத்தை உண்டாக்கும்.

மாதுளம் பழச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, இரத்தபித்த நோய், பிரதாநோய் ஆகியவைகள் தீரும்.

வெண்மருதம்பட்டைச் சாறு 3 வராகன் எடை, சீந்திற்சர்க்கரை 8 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை, இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி துணை மருந்து சேர்த்துண்ண, விந்து சார்பான நோய்கள் தீரும். கண் பார்வை மந்தம் நீங்கி கண்ணொளி அதிகப்படும்.

வெள்ளரிவிதைப் பருப்பு $\frac{3}{4}$ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து வெண்ணெய் போலரைத்து மேற்கண்ட பற்பத்தைப் அளவுப்படி கலந்துண்ண, மூத்திரக் கிரிச்சர நோய் பிரமிய நோய் ஆகியவைகள் தீரும்.

ஐந்தியாறு சூரணம் $\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கல்லடைப்பு ஆகியவைகள் தீரும்.

அரித்திப்பிலித்தூள் 4 குன்றியெடை, ஏலரிசித்தூள் 4 குன்றியெடை, தேன் 2 வராகன் எடை, இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை சேர்த்துண்ண, இரைப்பிருமல்நோய், இருமல் நோய் ஆகியவைகள் தீரும். என்புச்சூடு முதலிய உட்சூடுகளினால் உடல் இளைத்துப் போதல் தீர்ந்து, உடல் பருக்கும் வாயு, சூலை ஆகியவைகள் தீரும்.

343. முத்து பற்பம் (வேறு)

தூய்மைசெய்த துளையிடாத நன்முத்து 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), வாழைக்கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு,

செய்முறை :- மேற்படி முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி ஒரு வீசை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பாலேடு, பசுவின் நெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இருதயத்தின் உஷ்ணம், உஷ்ணத்தினால் நேரிட்ட இருதயத்துடிப்பு, இருதய அதிர்ச்சி ஆகியவைகள் தீரும்.

344. முத்து பற்பம் (வேறு)

தூய்மை செய்த முத்து 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தாழை விழுதுச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி முத்தை ஒரு சிறிய புது அகலில் வைத்துக் கரிநெருப்பில் அகல் சிவக்கும்படி ஊத வேண்டும். அது சிவந்த

வுடன் அதை எடுத்து மேற்படி சாற்றில் விடவேண்டும். ஆறின பின்பு முன்போல் அகலில் வைத்து முன்போல் காய்ச்சி முன்போல் மூன்சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிக் காய்ச்சிக் காய்ச்சித் தோய்த்து வெண்ணெய் போல் அரைப்ப தற்குத் தகுந்தபடியாய்ப் பக்குவமான சமயத்தில் எடுத்து ஈரமில் லாமல் உலர்த்திக் கல்வத்தில் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

345. முத்து பற்பம் (வேறு)

தூய்மை செய்து துளையிடாத கசகசா முத்து 3 வராகன் எடை. இதனை ஒரு சிறு பீங்கான் பாத்திரத்தில் போட்டு எலுமிச்சம் பழச் சாற்றை அதில் விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும் சாறானது சுமார் மூன்று பலம் இருந்தால் போதுமானது. பகலில் வெய்யிலில் வைத்து மறுநாள் காலையில் அந்தச் சாற்றை இறுத்து விட்டுப் புதிய சாறு விட வேண்டும். இவ்விதம் இருபத்தொரு நாள் செய்து இருபத்திரண்டாம் நாள் ஒரு சிறு கலயத்தில் அந்தச் சாற்றுடனே விட்டு வாய்டிச் சீலைமண் செய்து ஒரு மணங்கு வறட்டியில் புட மிட்டாறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 1 முதல் $1\frac{1}{2}$ குன்றியெடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், தேன், பசுவின் நெய், வாதுமை அல்வா, கோதுமைப் பால் அல்வா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- தாது இழப்பு, விந்து இழப்பு, உடல் வலுக்குறைவு, தலைமூளை வலுக்குறைவு, இரைப்பை, ஈரல், தமரகம் ஆகியவைகளின் வலுக்குறைவு, நீங்கி மேற்படி இராசகருவிகள் பலப்பட்டு தாதுவளமை, விந்துவளமை ஆகியவைகள் உண்டாகும். பிரமேகம் வெட்டை நோய், விந்து வெளிப்பாடு, விந்து நீர்த்திருத் தல் முதலிய நோய்களுக்கு இது சஞ்சீவிக்கு ஒப்பானது.

346. முத்து பற்பம் (வேறு)

தூய்மை செய்த துளையிடாத நன்முத்து 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), பருமனுள்ள 5 எலுமிச்சம்பழம்.

செய்முறை :- மேற்படி முத்துக்களை ஐந்து பாகமாகச் செய்து ஒவ்வொரு எலுமிச்சம் பழத்திலும் பல துவாரங்கள் இட்டு ஒவ் வொரு பாகத்தைத் துவாரத்திற்கொன்றாக ஒவ்வொரு எலுமிச்சம் பழத்திற்குள் செலுத்தி ஒவ்வொரு எலுமிச்சம்பழத்தையும் மும் மூன்று சீலைமண் செய்து ஒருமணங்கு வறட்டியில் புடமிட்டு எடுத்து

முன்போல் எலுமிச்சம் பழத்திற்குள் செலுத்தி முன்போல் புடமிட வேண்டும். இவ்விதம் மூன்று அல்லது, நான்கு புடமிட்டால் முத்தானது பற்பமாகிவிடும். விழிப்பாக எல்லாவற்றையும் சேர்த்துப் பொடித்து பளிங்குக்குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பசுவின் நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இருதயம், தலைமூளை, ஈரல் முதலிய இராசகருவிகளின் வலுக்குறைவை நீக்கி அவற்றைப் பலப்படுத்தி அவற்றிற்கு மகிழ்ச்சியை உண்டாக்குவதில் இது முதல்தரமானது. உடல் வலிமை, உடல் வளமை ஆகியவைகளுண்டாகும். இன்னும் விந்து ஒழுக்கு, பிரமேகம், வெட்டை நோய், விந்து வெளிப்பாடு, தாது வலுக்குறைவு ஆகியவைகளைப் போக்கும். தாது வளமையையும், ஆண்மைச்சத்துதனை அதிகப்படுத்தும்.

347. முத்து பற்பம் (வேறு)

தூய்மை செய்த நன்முத்து 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இதை ஒரு கலயத்தில் போட்டு அதில் ஐந்து பலம் பசுவின் பாலை விட்டு வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய்து ஒரு வீசை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும். நெருப்புக் குறைவினால் ஒரு புடத்தில் பற்பமாகாவிட்டால் மறுபுடம் முன்போலிடப் பற்பமாகி விடும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :- பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், தேன், வாதுமை அல்வா முதலியன.

தீரும்நோய்கள் :- தலைமூளை, இதயம், ஈரல் முதலிய இராசகருவிகளின் நோயில் இது அதிகம் உபயோகப்படுகிறது. அவற்றின் வலுக்குறைவை நீக்கி அவற்றைப் பலப்படுத்துவதில் இது மிகவும் சிறந்தது. இதனைத் தகுந்த அல்வாக்கள், இளகங்கள் ஆகியவைகளுடன் சேர்த்து உபயோகிக்க நிச்சயமான குணத்தைத் தரும்.

348. முத்து பற்பம் (வேறு)

தூய்மை செய்த நன்முத்து 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), பசுவின்பால் செல்லத்தக்க அளவு, காவுஜுபான் இலை 5 பலம் (175 கிராம்).

செய்முறை :- முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி காவுஜுபான் இலையை அரைத்து அதற்குள் வைத்துக் கவசஞ் செய்து இரண்டு சீலைமண் செய்து ஒரு வீசை வறட்டியிற் புட்டமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாகி விடும்.

அளவு : 1 முதல் 2 அரிசியெடை.

துணைமருந்து : சீமை இலந்தைப் பழச்சாறு, சேப்முறப்பா, பசுவின் வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- இரத்த சயம், இரத்தகாசம், என்புவெட்டை, என்புச் சூடு, எலும்புருக்கி நோய் முதலியவைகள் தீரும்.

349. முத்து பற்பம் (வேறு)

முத்து 4 வராகன் எடை (14 கிராம்), இதனை 5 பலம் (175 கிராம்), சங்கம் பழச்சாற்றிலாவது, பூவந்திப் பழச் சாற்றிலாவது புளியிலைச் சாற்றிலாவது போட்டு நான்கு சாம நேரம் ஊறவைத்து எடுத்து முள்ளுக்கத்திரிச் சாற்றில் ஒரு நாளூற வைத்து ஒரு சிறு கலயத்தில் மேற்படி சாற்றை விட்டு மூன்று சிலைமண் செய்து 500 பலம் விராட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு : 1 குன்றியெடை.

துணைமருந்து : பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், தேன், முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் : காசம், என்புசயம், சயம், என்புச்சூடு, என்பு வெட்டை, எலும்புருக்கி நோய் ஆகியவைகள் தீரும்.

350. முத்துச் சுண்ணம்

தூய்மை செய்த முத்து 3 வராகன் எடை. இதனை ஒரு பீங்கானில் போட்டு எருக்கம்பாலை மிதக்க விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். அது சுண்டிப் போனவுடன் முன்போல் எருக்கம் பாலை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதம் பதின்மூன்று தடவைகள் விட்டுச் சுண்ட வைத்து எல்லாவற்றையும் மொத்தையாகத் திரட்டி ஒரு உருண்டையாகச் செய்து வெய்யிலில் வைத்து நன்முய் உலர்ந்த பின்பு ஐந்து சீலை மண்

செய்து உலர்த்தி 40 பலம் விராட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 அரிசியெடை வரையில்.

துணைமருந்து :- வெண்ணெய், நெய், தேன், முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- மேகநோய்கள், என்புச்சூடு, மேகச்சூடு, எலும்புருக்கி நோய், இருமல் நோய், காச நோய், சுவாச நோய், கிராணி, ஆகியவைகள் தீர்ந்து தாது விருத்தியுண்டாகும்; விந்து கட்டுப்படும்.

வயிரத் தூய்மை

தேவையான வயிரத்தைப் பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் குதிரை மூத்திரத்தை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும் அது சுண்டினவுடன் மறுபடியும் முன்போல் மூத்திரத்தை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்தால் வைரமானது தூய்மையாகி விடும்.

351. வயிர பற்பம்

தூய்மை செய்த வயிரம் 1 குன்றிமணி எடை, மூட்டுப்பூச்சி 8 குன்றிமணி எடை, மூட்டுப்பூச்சியை வெண்ணெய் போல் அரைத்து மேற்படி வயிரத்திற்குக் கவசஞ் செய்து கழுதையின் தாடையெலும்பைத் தூள் செய்து அதில் அரைப்பலத்தை ஓட்டில் வைத்து அதன் மீது முன் கவசஞ் செய்ததை வைத்து அதன் மீது அரைப்பலம் முன் தூளைப் போட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து ஐந்து வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க வயிரமானது பற்பமாகி இருக்கும்.

மேற்கண்டபடி வயிரத்தைக் கவசஞ் செய்து கழுதையின் தாடையெலும்பைத் தமரிட்டுத் துவாரஞ் செய்து அதற்குள் இக் கவசத்தைச் செம்மையாக அழுத்தித் தாடையெலும்பின் மீது ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி முன்போல் புடமிடப் பற்பமாகி விடும்.

அளவு :- அரைக்கடுகு முதல் ஒரு கடுகு வரையில்.

துணைமருந்தும் தீரும்நோயும் :- சாமந்திப் பூச்சாறு 2 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து

மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, எல்லா வகைச் சுரங்களும் தீரும். இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு ஆகியவைகள் நீங்கும்.

வேப்பிலைச்சாறு, அரசங்கொழுந்துச் சாறு, தேன் இவை வகைக்கு 3 வராகன் எடை. இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, என்புசுரம், கப சம்பந்தமான இருமல் ஆகியவைகள் தீரும்.

அரிசித்திப்பிலித் தூள், சாதிக்காய்த் தூள், ஓமத் தூள் இவை வகைக்கு 3 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, இரைப்பிருமல், நச்சுசுரம், சுரக்கட்டி கப சம்பந்தமான இருமல், வயிற்றுநோய் ஆகியவைகள் தீரும்.

துளசியிலைச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, மிளகுத் தூள் 4 குன்றிமணி எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, மூன்றுமுறைச் சுரம், நான்காம் முறைச் சுரம் ஆகியவைகள் தீரும்.

மஞ்சட்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, இவற்றைத் தனித்தனி இடித்துத் துணியில் சலித்தத் தூள் வகைக்கு 4 குன்றிமணி எடை, தாளிசப்பத்திரித் தூள் 3 குன்றிமணி எடை, தேன் 2 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, தலைமூளையைப் பற்றின நோய்களெல்லாம் தீரும். உடல்வலிமை அதிகப்படும்.

352. வயிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த வயிரம் குன்றிமணி எடை, பச்சைச் சிற்றரத்தை அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- மேற்கண்ட சிற்றரத்தை விழுதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அடையாகத் தட்டி அகலில் வைத்து அதன் மீது வயிரத்தை வைத்து அதன் மீது மறுஅடையை வைத்துச் செம்மையாக அழுத்தி மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்து 500 பலம் வறட்டியில் புடமிட்டு எடுக்கப் பற்மாயிருக்கும் ஒரு புடத்தில் பற்பமாகா விட்டால் மறுபடியும் இரண்டொரு புடம் போட்டுக் கொள்ளப் பற்பமாகி விடும்.

அளவு :- அரைக்கடுகு முதல், ஒரு கடுகு வரையில்.

துணைமருந்து :- வெண்ணெய், பசுவினெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- உடலியல்புச் சூட்டை விருத்தி செய்யும்; தலைமுளை, இருதயம், ஈரல் முதலிய இராச கருவிகளை வலுப்படுத்தும். வேறெந்த மருந்திலும் தீராதெனக் கைவிடப் பட்ட நோய்கள், நாட்பட்ட நோய்கள் ஆகியவைகளைத் தீர்ப்பதில் இது சிறப்பான குணத்தை உடையது.

353. வயிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த வயிரம் 8 குன்றிமணி எடை, எண்ணெய் வெண்காரம், தூய்மை செய்த வெள்ளைப்பாடாணம், இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை :- பின் கண்ட இரண்டையும் தூள் செய்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தைப் போட்டு அதன் மீது வைரத்தை வைத்து அதன் மீது மறு பாதி மருந்தைப் போட்டு வாயைப் பீங்கான் தாலத்தால் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஐந்நூறு பலம் வறட்டியில் புடமிட வேண்டும். கடவுளினது அருளால் ஒரே புடத்தில் பற்பமாகி விடும்.

துணைமருந்து, தீரும்நோய், அளவு முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

354. வயிர பற்பம் (வேறு)

வயிரம் 8 குன்றிமணி எடை, கழுதையின் தாடை 1 எலும்பு, வெள்ளெருக்கின் இலையும் பூவும் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- தாடை எலும்பின் மத்தியில் தமரினால் துவாரமிட்டு அதற்குள் வைரத்தைச் செலுத்தி முன் தூளையே அதில் போட்டுச் செம்மையாக அழுத்தி வெள்ளெருக்கின் இலையையும், பூவையும் சமபாகமாகச் சேர்த்து வெண்ணெய் போலரைத்து அதன் மீது ஒரு அங்குல கனம் கவசம் செய்து அதன் மீது மூன்று மண்சீலை செய்து ஐந்து வீசை வறட்டியில் புடமிட வேண்டும். சித்தரது அருளால் ஒரே புடத்தில் பற்பமாகி விடும். அப்படி ஆகாவிட்டால் மறுபடியும் முன்போல் புடமிட அவசியம் பற்பமாகிவிடும்.

அளவு :- அரைக் கடுகளவு முதல், ஒரு கடுகளவு வரை.

துணைமருந்தும் தீரும்நோயும் :- ஒரு குன்றிமணி எடை கஸ்தூரியுடன் மேற்கண்ட அளவுப்படி கலந்து தேனில் அல்லது, தாய்ப் பாலில் கலந்து கொடுக்க அரைப் பிணமாகி இறப்புகால இருப்பவர்கள் ஒரு மணி நேரத்திற்குள் இயல்பு நிலையை அடைந்து இயல் பாகப் பேசும்படியான சக்தி உண்டாகும்.

தங்கரேக்கு 1 குன்றிமணி எடை, இதனைத் தேனில் அல்லது தாய்ப்பாலில் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கொடுக்க இருதயநடை தடைப்பட்டு, அல்லது, இருதயத்தில் குளிர்ச்சியுண்டாகி சில்லிட்டுப் போனவர்களுக்கும் இருதய நடையைச் சரிப் படுத்தி அதிலுள்ள குளிர்ச்சி முதலியவைகளை நீக்கிச் இயல்பான நிலையிலாக்கி விடும்.

தேன், தாய்ப்பால் முதலியவைகளில் மேற்கண்ட அளவுப்படி கலந்துண்ண, இருதய சம்பந்தமான எல்லா நோய்களையும் கண்டிக்கும்.

இன்னும் சிறப்பான துணைமருந்துகளில் அளவுப்படி உட்கொள்ள நாட்பட்ட கடின நலப்படுநோய்கள், முதலிய அநேக நோய்கள் தீரும்.

355. வயிர பற்பம் (வேறு)

வயிரம் 8 குன்றிமணி எடை, இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் சுமார் ஐந்து பலம் குதிரை சிறுநீரை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். அது உலர்ந்த பின்பு முன்போல் அந்த சிறுநீரைவிட்டு முன்போல் உலர்த்த வேண்டும் மூன்றுந் தடவையும் முன்போல் விட்டு உலர்த்தி அதிலுள்ள எல்லாவற்றையும் ஒரு கலயத்தில் சுரண்டிப் போட்டு அதில் பத்து பலம் பிரண்டைச் சாற்றைவிட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்து வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்து ஐந்நூறு பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க வயிரமானது பற்பமாகி இருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

356. வயிர பற்பம் (வேறு)

தூய்மைசெய்த வயிரம் 8 குன்றிமணி எடை, பெருங்காயம், இந்துப்பு இவை வகைக்கு 5 வராகன் எடை, கொள்ளை வேக வைத்த நீர் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- பின்சொன்ன இரண்டு சரக்குகளையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி குடிநீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையில் சுமார் மூன்று வராகன் எடையை ஒரு சிறு பீங்கானில் விட்டுக் கொண்டு மேற்படி வயிரத்தைக் கரி நெருப்பில் காய்ச்சித் தோய்க்க வேண்டும். குளிர ஆறின பின்பு அந்த நீரை இறுத்துவிட்டு முன்போல் மறுபடியும் நீரை விட்டு முன்போல் காய்ச்சி முன்போல் தோய்க்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி இருபத்தொரு தடவைகள் செய்ய வயிரமானது பற்பமாகி விடும். சில சமயங்களில் அப்படிப் பற்பமாகா விட்டால் இன்னும் ஐந்தாறு தடவை முன்போல் காய்ச்சித் தோய்த்துக் கொள்ள வேண்டும். பற்பமாகி விடும். இதனைக் கல்வத்திலிட்டுப் பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுசாம நேரமரைத்து வெய்யிலிலுலர்த்தி மறுபடியும் பொடித்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :- அரைக்கடுகு முதல், ஒரு கடுகு வரையில்.

துணைமருந்தும் தீரும்நோயும் :- செம்பரத்தம் பூச்சாறு 6 வராகன் எடை, கற்கண்டு தூள் 3 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இதய நடுக்கம், இருதய அதிர்ச்சி, உடல் நடுக்கம் முதலியவைகள் தீரும். பசிதீபனம் அதிகப்படும். தாது வளமுண்டாகும் தலைமுளை, தமரகம் ஆகியவைகளைப் பலப்படுத்தும். முகம், உடல் ஆகியவைகளிலுள்ள திரைகள் மாறி முக அழகு, உடல் பொலிவு, ஆகியவைகள் உண்டாகும்.

தேன் 3 வராகன் எடை, பசுவினெய் 3 வராகன் எடை மூங்கிலுப்புத் தூள் 4 குன்றிமணி எடை இவை எல்லாவற்றிலும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, கப நோய், காச நோய் ஆகியவைகள் தீரும்.

வில்வ இலைச்சாறு 3 வராகன் எடை, மிளகுத் தூள் 4 குன்றிமணி எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள, எல்லாம் வகை சன்னி பாத சுரங்களும் தீரும்.

கையாந்தகரைச் சாறு 4 வராகன் எடை. தேன் 6 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, இரத்த பித்த நோய், பிரதர நோய், இரத்த மூலநோய் ஆகியவைகள் தீரும்.

துளசியிலைச் சாறு 3 வராகன் எடை, மிளகுத் தூள் 4 குன்றி மணி எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண தருணசுரம் தீரும்.

மஞ்சள் கடுக்காய்த் தோல் தூள், தான்றிக்காய்த் தோல் தூள், நெல்லில் வற்றல் தூள் இவை வகைக்கு $\frac{1}{4}$ வராகன் எடை, சோம்புத் தூள் $\frac{1}{4}$ வராகன் எடை, தேன் 6 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, மூளை சம்பந்தமான நோய்கள், நீர்ப்பீனிச நோய் சிராய்ப் பீனிச நோய் முதலிய எல்லா வகைப் பீனிச நோய், ஆகியவைகள் தீரும்.

357. வயிர பற்பம் (வேறு)

தூய்மை செய்த வயிரம் 8 வராகன் எடை, பெண் செம்மறி யாட்டுக் கொம்பு, நல்ல பாம்பின் எலும்பு, உலர்த்தின பூநாகம் முயலின் பல், உலர்த்தின எலுமிச்சம் பழம் இவை வகைக்கு 1 வராகன் எடை கள்ளிப் பால் செல்லத் தக்க அளவு.

செய்முறை :- முன் சொன்ன சரக்குகளை எல்லாம் தனித் தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துக் கள்ளிப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மூசையும் மூடியுஞ் செய்து உலர்த்தி அது நன்ருக உலர்ந்த பின்பு முன் வயிரத்தை அந்த மூசைக்குள் வைத்து அந்த மூடியால் மூடிக் கொல்லுலையில் வைத்து ஆறு மணி நேரம் ஊதி எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

குறிப்பு :- மூசையின் மீது ஏழு சீலமண் செய்து உலர்த்தி உலையில் வைத்து ஆரம்பத்தில் மெதுவாயூதிக் அளவாகத் தீயை அதிகப் படுத்தி வரவேண்டும். இதனைச் செய்து முடிப்பதற்குக் கொஞ்சம் கைபாகமும், கொஞ்சம் அறிவு நுட்பமும் வேண்டும்.

அளவு :- அரைக் கடுகு முதல் ஒரு கடுகு வரையில்.

துணைமருந்தும் தீரும்நோயும் :- பசுவின் வெண்ணெய், 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, சயநோய், கணைநோய், இருமல் நோய், இரத்தகாச நோய், இரத்தங்கக்கல் ஆகியவை தீரும். பசி அதிகப்படும். சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்

புண்டாகும். தாது விருத்தி, தாது வலிமை ஆகியவையுண் டாகும்.

வெண்மருதம் பட்டைத் தூள் 1½ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, மந்தப் பார்வை தீர்ந்து பார்வைச் சத்து அதிகப்படும். சுக்கிலப்பிரமிய நோய் தீரும். உடலானது உரத்துப் பெருத்து உடல் வலிமை, உடல் வளமை, வீரத் தன்மை முதலியவைகள் உண்டாகும்.

குறிப்பு :- இதனைப் பாகப்படி செய்து முறைப்படி உபயோகித்தால் அநேக குணங்களுண்டாகும். அப்படிச் செய்கிறவர்கள் மிகவும் அரிதென்றால் செய்து கொள்பவர்கள் மிகவும் அரிதிலும் அரிதென்றே சொல்ல வேண்டும்.

மாணிக்கத் தூய்மை

பிராந்திச் சாராயம், கவுஜுபான் தீநீர், பன்னீர்காடி ஆகிய இந் நான்கையும் சமபாகமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு மாணிக்கத்தை அப்பி ரேகத்தகட்டின் மீது வைத்து மேற்படி கலவைத் திரவத்தைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம நேரஞ் சுருக்கிட மாணிக்கமானது தூய்மையாகி விடும்.

358. மாணிக்கப் பற்பம்

தூய்மை செய்த செந்நிறப் பற்றுள்ள மாணிக்கம் 3 வராகன் எடை. சோற்றுக்கற்றாழைச் சாறு 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- வச்சிர மூசையில் மேற்படி சாற்றை விட்டு அதில் மேற்படி மாணிக்கத்தைப் போட்டு மேலும் வச்சிரச்சில்லால் மூடி ஏழு சீலமண் செய்து பத்து வீசை வறட்டியில் புடமிடவும். ஒரு புடத்தில் பற்பமாகி விடும். அப்படி ஆகாவிட்டால் இரண்டாந் தடவை முன்போல் புடமிடப் பற்பமாகி விடும்;

குறிப்பு :- இங்கு வச்சிர மூசை என்பதின் கருத்தாவது :— பலமான மூசையாயிருக்க வேண்டுமென்பதே. வச்சிர மூசை, அல்லது, பலமான மூசை செய்யும் விவரங்கள் நமது இரசவாத சிந்தாமணியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அவைகளைப் பார்த்துச் சித்தப்படுத்திக் கொள்ளவும்.

அளவு :- ½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், தேன், நெய், மாதுளம்பழ சர்பத்து, கோராப்பட்டு சர்பத்து, சீமை அத்திப்பழ சர்பத்து, சீமை அத்திப்பழ முறப்பா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- தலைசுழலை, இருதயக் கலக்கம், இளைப்பு முதலிய இராசகருவிகளின் வலிமைக் குறைவை நீக்கி அவைகளைப் பலப்படுத்தி உடல் வலிமை, மனோதைரியம், உற்சாகம் ஆகியவைகளை உண்டாக்கும். இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, மனக்கலக்கம், மன அதிர்ச்சி முதலியவைகளை நீக்கி இருதயத்தைப் பலப்படுத்தும்.

இதனைப் பாகப்படி செய்து உபயோகித்துவரின், இரும்பு வச்சிராயுதம் போலாக உடலைக் காப்பாற்றி வரும்.

359. மாணிக்க பற்பம் (வேறு)

தூய்மைசெய்த செந்நிறப் பற்றுள்ள மாணிக்கம் 3 வராகன் எடை, நற்பவளம் $\frac{3}{4}$ வராகன் எடை, யஷெப் என்னும் கல் 1 வராகன் எடை, அகீக் என்னும் மாணிக்கம் 8 குன்றிமணி எடை, பிராந்தி சாராயம், பன்னீர், இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்டவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பிராந்தி சாராயத்தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்துப் பிறகு பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒன்றரை மணங்கு வறட்டியில் புடமிட்டு எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :- காவுஜபான், தீநீர், பேதானாப்பழ முறப்பா, சீமை இலந்தைப்பழ முறப்பா, தித்திப்பு மாதுளம்பழ சர்பத்து முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :- மேற்கண்டவைகளேயாம்.

360. மாணிக்க பற்பம் (வேறு)

செந்நிறப் பற்றுள்ள தூய்மை செய்த மாணிக்கம் 3 வராகன் எடை, பிராந்தி சாராயம், செல்லத்தக்க அளவு, திராட்சைக்காடி

செல்லத் தக்க அளவு, சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை ;- மேற்படி மாணிக்கத்தைத் பத்து பலம் தண்ணீர் கொள்ளும்படியான மண் கலயத்தில் போட்டுக் கரி நெருப்பின் மீது வைத்து பிராந்தியைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம நேரஞ் சுருக்கிட வேண்டும். மறுநாள் முன்போலவே திராட்சைக்காடியைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரஞ் சுருக்கிட்டு அந்தக் கலயத்திலேயே பத்து பலம் சோற்றுக் கற்றாழைச் சாற்றை விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஐந்து வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்துத் தினம் ஒன்றிற்கு இரண்டு சாமம் வீதமாக ஒரு வாரம் வரையில் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரம் உலர்ந்த பின்பு பொடித்துப் புட்டியில் வைத்து உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

அளவு :- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து முதலியவைகள் மேற்கண்டவைகளாம்.

தீரும்நோய்கள் :- மேற்கண்ட நோய்கள் தீருவதுடன் உடல் முழுமையும் எரிச்சல், இரத்தங்கக்கல், இரத்த சயம், இரத்த காசம், எந்த மருந்தினாலுந் தீராத வயிற்றுப் போக்கு, விந்து ஒழுக்கு, மேக நீரொழுக்கு, இரத்தப் போக்கு, இரத்தக்கசிவு முதலிய அநேக நோய்கள் தீரும்.

361. மாணிக்க பற்பம் (வேறு)

செந்நிறப் பற்றுள்ள தூய்மை செய்த மாணிக்கம் 3 வராகன் எடை, ஆடாதோடை இலையை அரைத்த விழுது 6 பலம் (210 கிராம்), இன்னும் ஆடாதோடை இலையை அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்).

செய்முறை :- முன்னுள்ள ஆறு பலம் விழுதில் மேற்படி மாணிக்கத்தை வைத்துக் கவசஞ் செய்து வெய்யிலில் வைத்து அரை உலர்ந்ததாக உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்பு பின்னுள்ள ஆடாதோடையிலை விழுதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறு சட்டியில் அடைபோற் சமமாகப் பரப்பி அதன் நடுவில் முன் கவசித்து உலர்த்தின உருண்டையை வைத்து மறுசட்டியில் மறுபாதி விழுதை முன்போற் சமமாகப் பரப்பி மூடி

ஏழு சீலேமண் செய்து ஐந்து வீசை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு. துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

362. மாணிக்க பற்பம் (வேறு)

செந்நிறப்பற்றுள்ள மாணிக்கம் 8 குன்றிமணி எடை, இதனை 455-ல் சொல்லியிருக்கிறபடி மூன்று நாள் குதிரை மூத்திரத்தில் பாகப் படுத்தி நாலாம் நாள் அதன்மீது மூன்று வராகன் எடை எருக்கம் பாலை விட்டு வெய்யிலில் வைக்கவேண்டும். அது உலர்ந்தபின்பு முன்போல மூன்று வராகன் எடை பாலை விட்டுலர்த்த வேண்டும். மூன்ருந் தடவையும் அப்படியே பாலை விட்டுலர்த்தி வச்சிரமூசை யில் வைத்து வச்சிரச்சில்லால் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி எட்டு வீசை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளே யாம்.

363. மரகத பற்பம் (வேறு)

திறமான பச்சை 3 வராகன் எடை. இதனை இரண்டு பலம் எருக்கம் பாலிற் போட்டு அடுப்பில் ஏற்றிச் சுண்ட வைக்க வேண்டும். அது சுண்டின பின்பு அதனை எடுத்து முன் போல் பாலை விட்டு முன் போல் சுண்ட வைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்து எடுத்து ஒரு கலயத்தில் நான்கு பலம் எருக்கம்பாலையும், நான்கு பலம் சோற்றுக்கற்றாழைச் சாற்றையும் விட்டுச் செம்மையாக சேர்த்து முன் சித்தப் படுத்தி இருக்கிற மரகதத்தைப் போட்டு வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்து ஒன்றரை மணங்கு எருவில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாய் இருக்கும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :- அரிசித் திப்பிலித் தூள் 4 குன்றிமணி எடை, மூங்கிலுப்புத் தூள் 4 குன்றிமணி எடை. தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ண, எல்லா வகை இருமல்

நோய்கள், இரைப் பிருமல் நோய், நாட்பட்ட சுரங்கள் முதலிய வைகள் தீரும்.

பறங்கிக்காய் விதைப் பருப்பு (அதாவது தித்திப்புப் பூசணி விதைப் பருப்பு) $\frac{3}{4}$ வராகன் எடை, ஆதிமதுரத் தூள் $\frac{1}{4}$ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவை எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ண, சயநோய், உருக்கி நோய், விடாத்தலை நோய் முதலியவைகள் தீரும்.

தித்திப்பு மாதுளம் பழச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, இரத்த மூலநோய் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் 2 குன்றிமணி எடை, தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, சங்கிரகணி நோய், அசீரண கழிச்சல் நோய். சுவையின்மை ஆகியவைகள் தீரும். பசி அதிகப்படும்.

தூய்மை செய்த மைசாட்சி 8 குன்றிமணி எடை, பசுவின்நெய் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து அரைத்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, கீல் வாயு, கை காற் பிடிப்பு மேகப்பிடிப்பு ஆகியவைகள் தீரும்.

சிறுநாகப்பூத் தூள் 4 குன்றிமணி எடை, பசுவின் வெண்ணெய் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, விந்து உற்பத்தி அதிகப்படும். விந்திலுள்ள தீமைகள் நீங்கும். பசி அதிகப்படும்.

364. மரகத பற்பம் (வேறு)

மேற்கண்டபடி எருக்கப்பாலிற் தூய்மை செய்த மரகதம் 8 குன்றிமணி எடை, ஒரு அங்குல கனமுள்ளது. ஒரு சாண் நீளம் ள்ளதுமான நிலக்குமிழ் வேர் ஒன்று.

செய்முறை :- இந்த வேரில் பல இடங்களில் தமரிறுல், துவாரமிட்டு, அதில் மேற்படி பச்சைகளைச் செலுத்தி அந்தத் தூளையே அதில் வைத்தமுத்தி வேறு நிலக்குமிழ் வேர்ப் பட்டையை அரைத்த விழுதை அதன் மீது ஒரு அங்குலம் கவசம் செய்து அதன் மீது ஏழு சீலைமண் செய்து ஈரம் உலர்த்திக்

கவசத்தின் எட்டுப் பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க பற்பமாய் இருக்கும்.

ஒரே புடத்திற் பற்பமாகாவிட்டால் மறு புடமும் முன்போற் போடப் பற்பமாகி விடும்,

அளவு, துணைமருந்து முதலியவைகளெல்லாம் மேற்கண்டவை களேயாம்,

நீலத் தூய்மை

நீலத்தை நெருப்பிற் காய்ச்சி எருக்கம்பாலில் தோய்க்க வேண்டும். எருக்கம்பாலானது இந்த நீலக் கட்டி ஆழ்ந்து கிடக்கும் படியாகத் தாராளமாக இருக்க வேண்டியது. ஆறின பின்பு முன்போற் காய்ச்சி முன்போல் தேய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்தாறு தடவைகள் செய்ய நீல மானது தூய்மையாகி விடும்.

365. நீல பற்பம்

தூய்மை செய்த நீலம் 1 வராகன் எடை, எருக்கம் பால் 3 பலம், சோற்றுக்கற்ருழைச் சாறு 6 பலம்.

செய்முறை : மேற்கண்ட இரண்டு திரவங்களையும் செம்மை சேர்த்து ஒரு சிறு கலயத்தில்விட்டு இதில் முன் நீலத்தைப் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து எட்டு வீசை வறட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும். பெரும்பான்மையும் ஒரே புடத்தில் பற்பமாகி விடும். தீயின் விகற்பத்தால் பற்பமாவிட்டால் மறுபடியும் முன்போல் புடமிட் டெடுக்கப் பற்பமாகி விடும்.

அளவு ; $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும்:- தூய்மை செய்த முதல் மைசாட் சித்தூள் 9 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண் டையும்சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண கீல் வாயு, முடக்குவாயு, பட்சவாதம் முதலிய எல்லாவகை வாத நோய்களும் தீரும்.

துளசிச்சாறு 3 வராகன் எடை. மிளகுத் தூள் 5 குன்றிமணி எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட அளவுப்படி சேர்த்

துண்ண இரண்டாமுறை சுரம், மூன்றுமுறைச் சுரம், நான்கா முறைச்சுரம் ஆகிய முறை நோய்கள் தீரும்.

மணித்தக்காளி இலைச்சாறு 6 வராகன் எடை, தேன் 3 வராகன் எடையும் இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட அளவுப்படி கலந்துண்ண, சுரக்கட்டி, ஈரல் வீக்கம், எல்லா வகை வீக்கங்கள் ஆகியவை தீரும்.

கையாந்தகரைச் சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப் படி சேர்த்துண்ண கண்ணொளி, கண்பார்வை முதலியவைகள் அதிகப்படும்.

இலவங்கப்பட்டைத் தூள் 4 குன்றிஎடை, ஏலக்காய்த்தூள் 8 குன்றிமணி எடை, தேன் 1 வராகனெடை இவற்றை சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண சங்கிரணி நோய், பெருங்கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

ஆடாதோடை இலைச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற் பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, இரத்தபித்தநோய் பிரதர நோய் பெரும்பாடு ஆகியவை தீரும்.

366. நீல பற்பம் (வேறு)

நீலத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு ஐந்து பலம் குதிரை மூத்திரத்தை அதில் விட்டு வெய்யிலில் வைத்து மூத்திர மெல்லாஞ் சுண்டின பின்பு அதை ஒரு சிறு கலயத்தில் போட்டு அதில் ஐந்து பலம் ஓரிலைத்தாமரைச் சாற்றை விட்டு மூன்றுசாம நேரம் ஊறவைத்துக் கொல்லுலையில் வைத்து ஒன்றரைமணி நேரம் ஊதியெடுக்கப் பற்பமாகி விடும்.

குறிப்பு : இதனைக் கலயத்தில் வைத்து ஊதுவதைப் பார்க் கிலும் வச்சிர மூசையில் வைத்து ஊதி எடுத்துக் கொள்வது எல்லா வகையாலும் உத்தமம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

புட்பராகத் தூய்மை

(அ) புட்பராகத்தைக் கரி நெருப்பில் காய்ச்சி எருக்கம் பாலில் தோய்க்க வேண்டும். ஆறின பின்பு மறுபடியும் எடுத்து

முன் போல் காய்ச்சித் தோய்க்க வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று தடவை மடக்கி மடக்கிச் செய்து கொள்ள புட்பராக மானது தூய்மையாகி இருக்கும்.

புட்பராகத் தூய்மை (வேறு)

(ஆ) புட்பராகத்தைப் பீங்கானில் போட்டு அது ஒரு அங்குலம். மூழ்கி இருக்கும் படியாக வெள்ளாட்டுப் பாலை விடவேண்டும். அதை வெய்யிலில் வைத்து அந்தப் பால் சுண்டின பின்பு முன் போல் பாலைவிட்டு முன் போல் சுண்ட வைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்ய புட்பராக மானது தூய்மையாகி இருக்கும்.

367. புட்பராக பற்பம்

மேற்கண்டபடி எருக்கம் பாலில் தூய்மை செய்த புட்பராகம் 8 குன்றிமணி எடை, எருக்கம் பால் 2 பலம், சோற்றுக் கற்றாழைச் சோறு 2 பலம் (70 கிராம்).

செய்முறை :- பின்னுள்ள இரண்டையுஞ் சேர்த்துக் குழைத்து அதனடுவில் மேற்படி புட்பராகத்தை வைத்து அவசிய மானால் கொஞ்சம் வெய்யிலில் வைத்து உருண்டையாகச் செய்து அதன் மீது காவிமண் சீலை மூன்று செய்து வெய்யிலில் வைத்து உலர்த்தி ஒருமணங்கு வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பெரும்பான்மையும் ஒரே புடத்தில் பற்பமாகி விடும். தீ விகற்பத் தால் ஒரு வேளை பற்பமாகா விட்டால் முன் போல் ஒரு புடமிட்டு எடுத்துக் கொள்ளப் பற்பமாகி விடும்.

அளவு :- 1 முதல் 2 அரிசி எடை.

துணை மருந்தும் தீரும்நோயும் :- காவுஜுபான் குடிநீர் 6 வராகன் எடை (ஒரு வராகன் எடை காவுஜுபானை மூன்று பலம் நீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டின குடி நீரில் மேற்கண்ட எடை எடுத்துக் கொள்ள வேண்டும்) தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, எல்லா வகை சுரநோய் களும் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச் சாறு 6 வராகன் எடை, தேன் 6 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை

அளவுப்படி கலந்துண்ண, மூத்திரக் கிரிச்சர நோய் எல்லா வகை ரணங்கள் ஆகியவைகள் தீரும்.

அரசங் கொழுந்துச் சாறு 6 வராகன் எடை தேன் 9 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப் படி கலந்துண்ண, இருமல் நோய், நயன நோய்கள் ஆகியவைகள் தீரும். சங்கரகணி, உடல் எரிவந்தம், ஆகியவைகள் குணமாம். பசிசக்தி உண்டாகி சீரணசக்தி அதிகப்படும். விந்து விருத்தி. தாதுவலிமை ஆகியவைகள் உண்டாகும்

துத்தி இலைச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, கப சம்பந்தமான மூலநோய், பாண்டுநோய் ஆகிய வைகள் தீரும்.

கருஞ்சீரகத்தூள் 4 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, பித்த விகற்ப நோய்கள், கப விகற்ப நோய்கள் ஆகியவைகள் தீரும்.

வெண்டாமரைப் பூச்சாறு 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப் படி கலந்துண்ண உதர நோய்கள், மூல நோய்கள், பவுத்திர நோய்கள், வீக்க நோய்கள், பலவித வாயுநோய்கள் ஆகியவை தீரும்.

368. புட்பராகப் பற்பம் (வேறு)

(ஆ) வில் சொல்லி இருக்கிறபடி வெள்ளாட்டுப் பாலில் தூய்மை செய்த புட்பராகம் 8 குன்றி எடை. இதனை ஒரு பீங்கான் பாத்திரத் தில் போட்டு அதில் 5 பலம் பெரும்பூளைவேர்ச் சாற்றைவிட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்து மறுநாள் சாற்றுடனே வச்சிர மூசையில் விட்டு வச்சிரச் சில்லால் மூடிக் கொல்லுலையில் வைத்து நான்கு நாழிகை நேரம் ஊதி ஆறவைத்து எடுக்க பற்பமாகி இருக்கும். அப்படி ஒரே தடவையில் பற்பமாகாவிட்டால் முன்போல் மறு தடவையும் செய்து கொள்ளப் பற்பமாகிவிடும்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய், முதலியவைகளெல்லாம் மேற்சொன்னவைகளேயாம்.

கோமேதகத் தூய்மை

மாணிக்கத்தைப் போல இதையும் தூய்மை செய்து கொள்ளவும்.

369. கோமேதக பற்பம்

தூய்மை செய்த கோமேதகம் 8 குன்றிமணிஎடை இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதில் ஐந்துபலம் நிலக்குமிழ் வேர்ச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்து அது சுண்டின் பின்பு ஐந்து பலம் கரு ஊமத்தைச் சாற்றை விட்டு ஒரு நாள் வெய்யிலில் மறுநாள் வச்சிர மூசையில் வழித்து விட்டு வச்சிர மூசைச் சில்லினால் மூடி ஐந்து சீலைமண் செய்து கொல்லுலையில் வைத்து நான்கு நாழிகை நேரம் ஊதியெடுக்கப் பற்பமாகி விடும்.

அளவு : அரைக்கடுகு முதல் ஒரு கடுகு வரையில்.

துணைமருந்து : பசுவின் வெண்ணெய், பசுவினெய், தேன் ஆகியவைகளும், வயிர பற்பத்திற் சொல்லியிருக்கின்ற துணை மருந்துகளுமாகும்.

தீரும்நோய்கள் . வாத பித்த தொந்தங்களினாலுண்டான நோய்கள், சுரத்திலுண்டான தீய குணங்கள், மலபந்த நோய்கள் ஆகியவைகள் தீரும். உடல் மினு மினுப்பு, அழகு வனப்பு ஆகியவைகளுண்டாகும்.

வைடூரியத் தூய்மை

வயிரத்தைப் போல இதையும் தூய்மை செய்து கொள்ளவும்.

370. வைடூரிய பற்பம்

குதிரை மூத்திரத்திற் தூய்மை செய்த வைடூரியம் 8 குன்றி எடை இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து அதில் ஐந்து பலம் பெருங்குமிழ்ப் பழச்சாற்றை விட்டு வெய்யிலில் வைத்து அது சுண்டின பின்பு ஐந்து பலம் பெரும்பூளைவேர்ச் சாற்றை விட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்து மறுநாள் வச்சிர மூசையில் வறுத்து விட்டு வச்சிரமூசைச் சில்லினால் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஐந்நூறு பலம் வறட்டியிற் புடமிட்டாறின பின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு : அரைக்கடுகு முதல் ஒரு கடுகு வரையில்.

துணைமருந்து : பசுவினெய், பசுவெண்ணெய், தேன் முதலியவைகளும், வயிர பற்பத்திற் சொல்லியிருக்கிற அனுபானங்களுமாம்.

தீரும்நோய் : வாதம், கபம் ஆகிய இரண்டின் சேர்க்கையினால் ஏற்பட்ட நோய் புளியேப்பம், இடைவிடாது வருத்திக் கொண்டிருக்கிற கீல்வாத நோய், வாதகுன்ம நோய், பைத்திய நோய், அபத்திய முதலியவைகளினால் நேரிட்ட தோடங்கள் ஆகியவைகளும் தீரும்.

471. நவரத்தின பற்பம் பொதுமுறை

விருத்தம்

மிக்கவொளி வீசுகின்ற மணியொன் பானில்
　　மேவுமொன்றைக் காசிடையொன் றாக்கி யேதான்
தக்கவெருக் கமுதினிலிட் டாட்டி வில்லை
　　தட்டியரி முள்ளாக்கித் தகவி னோடே
பொக்கெனவே புடமியற்ற நீற தாகும்
　　புத்தியுட னெய்த்துளிதேன் றுளியிற் கொள்ள
விக்கல்மருட் பிரமையத்திச் சுரங்கண் ணோய்கள
　　விடம்பொரும லகலுமணி விதத்தைக் காணே.

இதன் பொருள் வெள்ளிடையாக இருப்பதால் இதன் பொருளை எழுதாது விடுத்தனம்.

472. நவநீத பற்பம்

தூய்மை செய்த நற்பவழம், துளையிடாத நன்முத்து, பலகறை, சங்கு, கல்நார், கல்மதம், சிலாசத்து, கெந்தகம், லிங்கம், வெள்ளி அரப்பொடி இவை வகைக்கு ஒரு வராகன் எடை, எருக்கம்பால் செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்டவைகளைத் தனித்தனி பொடித்து எல்லாவற்றையுஞ் சேர்த்துக் கல்வத்தில் மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி நூறு பலம் வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :- கல்யாண முருக்கங் கொட்டைப் பருப்பு, செங்கழுநீர்க் கொட்டை, முந்திரிப்பருப்பு ஆலம் விதை, அரசம் விதை, அத்தி விதை, கஞ்சா விதை, பூனைக்காலி விதை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). இவற்றிற்குச் சமனெடை சர்க்கரையைச் சேர்த்துப் பாகப்படி இளகம் செய்து கொள்ள வேண்டும். இளகம் 2 வராகன் எடை. இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, நீரிழிவு, மதுமேகம், நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, உதரமேக நோய் முதலிய அநேக நோய்கள் தீர்ந்து, உடல் வலிமை, உடல் வளமை முதலியவைகளுண்டாகி உடல் நலம் உண்டாகும்.

அனுபோக வைத்திய நவநீதம் மூன்றாம் பாகம்

முற்றுப் பெற்றது.

அனுபோக வைத்திய நவநீதம் மூன்றாம் பாகம்
பிழைதிருத்தப் பட்டியல்

பக்க எண்	வாக்கிய (வரி) எண்	பிழை	திருத்தம்
12	27	த்ம்பத்தங்காய்	தம்பரத்தங்காய்
18	6	கல்யம்	கலயம்
24	20	மூலத்தை	சமூலத்தை
34	17	உலர்ந்தலிங்கம்	உலாந்தாலிங்கம்
44	27	கறியுப்பு 1 பலம்	கறியுப்பு 5 பலம்
47	22	மருத்துவமும்	மருத்துவரும்
68	5	டியுப்பு	வெடியுப்பு
75	17	சாம்பலானது	எலும்பானது
96	24	பணல்	மணல்
99	4	பேற்படி	மேற்படி
123	30	கற்பற்பத்திற்	கற்பத்திற்
127	1	வறு	வேறு
143	2	நீரறுகல்	நீரருகல்
151	17	வாய்டிச்	வாய்மூடிச்
155	25	வயிரம் குன்றி	வயிரம் 4 குன்றி
156	5	தலைமூளை	தலைமூளை

முக்கியக் குறிப்புகள்

மருந்து எண்	பக்க எண்	
15	8	மருந்து செய்முறையில் முதல் புடமிட்டபின் எருக்கம் பழுப்புச்சாறுவிட்டு அரைத்துப் புடமிடவும்.
158	12	இம்மருந்து முறையில் தூய்மைசெய்த இலிங்கமும் ஒருபங்கு சேர்த்துக் கொள்க.
159	13	நீலோற்பல சமூலச்சாற்றிலும் மும்மாதிரி புடமிடவும்.
187	31	முள்ளிக்கீரைச் சாற்றில் ஐந்துபுடம் போட வேண்டுவது அவசியம்.
205	45	திராவகத்தைக் இரும்புக்குழாய் மூலம் இறக்கும்படி நூல்கூறுகிறது. இரும்பின் மேல் எல்லாத் திராவகமும் பாயும்; ஆகையால், கண்ணாடிக்குழாய் நன்றென்பது அனுபவம்.
267	90	இது ஒரு புறமருந்து; மேற்பூச்சுக்குப் பயன்படுத்துவதாகும்.
281	100	இதன் மருத்துணைவை முறை 282இல் காண்க.